# உதயன்

சுடர் 27
கதிர் 187

வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 18 வியாழக்கிழமை (31/05/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

### ஆயுதங்கள் மீட்பு

முல்லைத்தீவுப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது பெரும் தொகையான ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் மேலும் பல ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கக்கூடும் என்ற சந்தேகத்தில் தொடர்ந்தும் தேடுதல் தொடர்கிறது.

# தமிழ் வந்தேறு குடிகளுக்கு வடக்கில் என்ன உரிமை?

## கேட்கிறார் மேதானந்த தேரர்

கொழும்பு, மே 31

இந்தியாவில் இருந்து வந்த, குடியேறிகளான தமிழர்கள் எவ்வாறு வட பகுதியை தமது தாயகம் என்று உரிமை கோர முடியும்?

வடக்குப் பகுதி தமிழர்களின் தாயகம் என்பதற்கான எந்த ஆதாரமும் கண்டறியப்படவில்லை.

எனவே இலங்கையின் வட பகுதி தமிழர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய கூறியுள்ளது மிகச் சரியான உண்மை. இந்த நூற்றாண்டின் மிக நேர்மையான உண்மை இது - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது,

இந்த நாட்டில் இனங்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்த முனையும் ஒரே கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான்.

வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகம் என்று உரிமை கோருவதற்கு அவர்களுக்கு எந்த சான்றோ அல்லது ஆதரவுக் காரணமோ கிடையாது.

நன்கு அறி 04

# பிரிட்டன் தூதரை வெளியேற்றுக!

## வீரவன்ஸவின் கட்சி ஆவேசம்

கொழும்பு, மே 31

வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் வேண்டுகோள் விடுத்தமைக்காக அவரை இலங்கை அரசு நாட்டைவிட்டு வெளியேற்றவேண்டும் என்று விமல் வீரவன்ஸவின் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அக்கட்சி நேற்று கொழும்பில் இது தொடர்பாக ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசியது. அப்போது இது தொடர்பில் கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பியசிறி விஜயநாயக்க கூறியவை வருமாறு:-

வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் கூறியுள்ளார். இது மிகவும் பாரதூரமான ஒன்று.

பாதுகாப்பு உள்ளிட்ட நிறைவேற்று அதிகாரத்தை இந்நாட்டு மக்கள் தேர்தலின் ஊடாக ஜனாதிபதியிடம் ஒப்படைத்துள்ளனர். ஆனால், இந்நாடு பிரிட்டனின் கீழ் இருக்கிறது என பிரிட்டன் தூதுவர் எண்ணிக்கொண்டிருக்கிறார்.

பிரிட்டன் மாத்திரமல்ல, அனைத்து நாடுகளும் எமது நாட்டின் இறைமையை மதிக்கவேண்டும். இதன் காரணமாக 04

# 88 இலங்கை அகதிகளுடன் ஆஸிக் கரை சேர்ந்த படகு

இலங்கை அகதிகள் 88 பேர் ஆள்கடத்தல் காரர்களின் துணை இன்றி நேரடியாக நேற்று முன்தினம் ஆஸ்திரேலியா சென்றடைந்தனர் என்று தெரிவிக் கப்படுகிறது.

'த ஒஸ்ட்ரேலியன்' இணையத்தளம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. வெள்ளை மற்றும் நீல நிறத்திலான படகு ஒன்றின் மூலம், 88 இலங்கை அகதிகள் கிறிஸ்மஸ் தீவை நோக்கி சென்ற நிலையில், நேற்றுமுன்தினம் ஆஸ்திரேலிய கடலோரப் பாதுகாப்புப் படையினரின் உலங்கு வானூர்திகள் மூலம் அவதானிக்கப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் இலங்கையர்கள் என உறுதி செய்துள்ள அதிகாரிகள், அவர்கள் இந்தோனேசிய ஆள் கடத்தல்காரர்களின் உதவிகள் இன்றி, நேரடியாக ஆஸ்திரேலியா வந்துள்ளனர் என்று தெரிவித்தனர். இந்த நிலையில் அவர்களுக்கான அகதி அந்தஸ்த்து வழங்குவதில் சிக்கல் ஏற்படாது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## லைபீரிய போர்க்குற்றவாளிக்கு 50 வருட சிறை

மென்றோலியா, மே 31

லைபீரியாவின் முன்னாள் ஜனாதிபதி சார்ள்ஸ் டெய்லருக்கு ஐ.நா. ஆதரவுடனான போர்க்குற்ற விசாரணை நீதிமன்றம் 50 வருடகால சிறைத்தண்டனை விதித்துள்ளது.

தற்போது 64 வயதான சார்ள்ஸ் டெய்லர், ஆயுத கிளர்ச்சியில் ஈடுபட்ட அமைப்பொன்றின் தலைவராக இருந்தவர். 04

# படைமுகாம்களை அகற்றுமாறு தமிழ் மக்கள் கோரவில்லை

## கூட்டமைப்பே அடம்பிடிக்கிறது என்கிறார் கோத்தபாய



கொழும்பு, மே 31

வடக்கில் இருந்து இராணுவ முகாம்களை அகற்றுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே வலியுறுத்துகின்றனர். முகாம்களை அகற்றுமாறு அங்கு வாழும் மக்கள் கோரவில்லை எனத் தெரிவித்துள்ளார் - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களை விட அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் அதிகளவு இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன என்பதை 04

# கொழும்பு மீது டில்லி அதிருப்தி

## போர் நீடிக்க இந்தியாவே காரணமென்ற வீரதுங்கவின் கருத்தால் வந்த வில்லங்கம்

கொழும்பு, மே 31

இலங்கையின் மூன்று தசாப்தகால போரின்போது இந்தியா ஆற்றிய பங்களிப்பு தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அண்மையில் தெரிவித்திருந்த கருத்துகள் குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது என உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் நேற்று 'உதய'னிடம் தெரிவித்தன.

'கோத்தாவின் போர்' நூல் வெளியீட்டு விழாவின் போது உரையாற்றிய ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க இலங்கையில் நடைபெற்ற போரில் இந்தியாவுக்கிருந்த தொடர்புகள் குறித்து விமர்சனங்களை முன்வைத்திருந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தா, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரும் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியின் செயலாளரின் உரையானது, இலங்கையில் போர் 04

## அன்புசால் வாசகர்களே!

பத்திரிகை அச்சிடும் காகிதத்தின் விலை உலகச் சந்தையில் அடிக்கடி உயர்ந்து வருகிறது. ஆகப்பிந்தி இப்போது மேலும் விலை உயர்த்தப்பட்டுள்ளது. அத்தோடு அச்சிடுதலுக்குரிய சகல உப பொருள்களின் செலவினங்களும் கடந்த பல மாதங்களாக அதிகரித்துள்ளன.

அதனால் உதயனின் விலையை நாளை (01.06.2012) வெள்ளிக்கிழமை முதல் 25 ரூபாவாக உயர்த்த வேண்டிய தவிர்க்க இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். அந்த வகையில் உதயன் ஞாயிறு இதழின் விலையும் 03.06.2012 தொடக்கம் 30 ரூபாவாக அதிகரிக்கப்படுகின்றது.

பொருளடக்கத்திலும் பொலிவிலும் உங்கள் விருப்பங்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்வதில் உதயன் என்றும் முன்நிற்பான். உங்கள் மனநிறைவே அவனின் ஆத்ம திருப்தி.

-நிர்வாகத்தினர்.

## எரிபொருளின் விலையை உடன் குறைக்கவேண்டும்

கொழும்பு, மே 31

எரிபொருள்களின் விலையை அரசு உடனடியாகக் குறைக்க வேண்டும் என்று ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

இந்த அரசிடம் முறையானதொரு பொருளாதாரக் கொள்கை இல்லாததன் காரணமா 04

# கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சியை முன்னிலைப்படுத்துவது தவறு

## விமர்சிக்கிறார் சுரேஷ் எம்.பி.

கொழும்பு, மே 31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுக்கு தலைமை வகிக்கும் கட்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சியை முன்னிலைப்படுத்தும் போக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விமர்சித்துள்ளார்.

அண்மையில் நடந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில், அதன் தலைவர் இரா. சம்பந்தன் வெளியிட்ட சில கருத்துக்கள் தொடர்பில் தாம் முரண்படுவதாகவும் அவர் பி.பி.சி. தமிழோசைக்கு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் சம-பங்காளிகளாக கருதப்பட 04

# நீதியை இலங்கை இழுத்தடித்தால் கடும் நடவடிக்கைக்கு தயாராகுங்கள்

## ஹிலாரிக்கு இரகசியக் கடிதம்

கொழும்பு, மே 31


நீதியை இலங்கை இழுத்தடித்தால் அமெரிக்கா உரிய நடவடிக்கைக்கு தயாராக வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை துரிதமாகவும் அர்த்தமுள்ள வகையிலும் நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கைக்கு அழுத்தம் கொடுங்கள். இவ்வாறு அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரனுக்கு இரகசியக் கடிதம் ஒன்றை நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் அனுப்பி வைத்துள்ளது.

இலங்கை அரசின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கக் கோரும் நான்கு பக்கங்களைக் கொண்ட கடிதத்தை மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிரிவு நிறைவேற்றுப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் எழுதியுள்ளார்.

இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதை அமெரிக்கா கண்காணிக்க வேண்டும். நீதியை வழங்குவதற்கு இலங்கை அரசு தொடர்ந்து 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுப் புகழ்மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வைகாசிப் பொங்கல் உற்சவத்தின் ஆரம்ப நிகழ்வாக காட்டாறு விநாயகர் ஆலயத்தில், நந்திக் கடல் நீரில் விளேக்கேற்றும் நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# சனல் – 4 வீடியோவை பார்க்காது கருத்துத் தெரிவித்த பொன்சேகா

## சிப்பாய்கள் மீது புலிகள் சுடும் காட்சி அது என்கிறார்

கொழும்பு, மே 31

லண்டன் சனல் - 4 தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட காட்சி இராணுவச் சிப்பாய்கள் மீது புலிகள் மேற்கொள்ளும் துப்பாக்கிச் சூடு - என்று அந்த வீடியோவைப் பார்க்காமலேயே கருத்துத் தெரிவித்துள்ளார் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா.

சனல் - 4 தொலைக்காட்சி வெளியிட்ட இராணுவத்தினர் தொடர்பான காணொலி குறித்து பி.பி.சி. சிங்கள சேவையான சந்தேசியாவுக்குக் கருத்துத் தெரிவித்த சரத் பொன்சேகா, தான் அவற்றை பார்க்கவில்லை எனவும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்துவது அரசின் பொறுப்பு எனவும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி சந்தேகநபர்கள் கைகள் கட்டப்பட்டு சுடப்பட்டமை போன்ற காட்சி குறித்துக் கருத்து வெளியிட்ட சரத் பொன்சேகா, அந்தக் காட்சி இராணுவச் சிப்பாய்கள் மீது புலிகள் மேற்கொள்ளும் துப்பாக்கிச்சூடு எனத் தெரிவித்துள்ளார்.

காரணம் தனது சிப்பாய்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் காணாமல் போயினர் என்றும் அவர்களை பிடித்துச் சென்றது புலிகள்தான் என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை, போர் இடம்பெற்ற காலத்தில் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகளோடு இராணுவத்தினரை தொடர்புபடுத்தியது ஜனாதிபதியே என்றும் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் பொன்சேகா குற்றம்சாட்டியுள்ளார்.

ஊடகவியலாளர்களான கீத் நொயார் மற்றும் நாமல் பெரேரா ஆகியோர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு இராணுவத்தினரே காரணம் எனச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே பொன்சேகா இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தி கடுமையாகத் தாக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதோடு, நாமல் பெரேராவை கடத்த முயற்சிக்கப்பட்டு அது பலனளிக்காததால் அவர் மீது கடும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதன் பின்னணியில் இராணுவம் இருக்கிறது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் இந்தச் சம்பவத்துடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு தொடர்பு இருக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார்.

ஆனால், இராணுவத்தினர் மீது இவ்வாறு குற்றச்சாட்டுகள் எழுவதற்கு ஜனாதிபதி ஊடக பிரதானிகளைச் சந்தித்து வெளியிட்ட சில கருத்துகளே காரணம் என பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

ஊடகபிரதானிகளை அலரி மாளிகைக்கு அழைத்து சில தருணங்களில், நீங்கள் இராணுவத்துடன் மோதி பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொண்டால் அதனை என்னால் தீர்த்துவைக்க முடியாது என்ற பொறுப்பற்ற கருத்துகளை ஜனாதிபதி கூறியிருந்தார்.

எனவே, அதனால் சிலர் இராணுவத்தினரை நோக்கி விரல் நீட்டினர் என்றும் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் இருந்தால் உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் பொறுப்பு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சிறிரெலோ அமைப்பாளர் மீது தாக்குதல்

வலிகாமம், மே 31

சிறிரெலோ அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ் .செந்தூரன் இனம் தெரியாத சிலரின் தாக்குதலுக்கு உள்ளாகிய நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் மரண வீடொன்றுக்குச் சென்று விட்டு நண்பர் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் அவர் வந்துகொண்டு இருந்தார். அப்போது அவரை கோண்டாவில் புகையிரத வீதிக்கு சமீபமாக இரண்டு மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து வந்த நபர்கள் வழி மறித்து, பொல்லுகள், கம்பிகளினால் சரமாரியாகத் தாக்கினர்.

இதனைத் தொடர்ந்து அவர் அங்கிருந்து தப்பியோட, தாக்கியவர்களும் உடனடியாக அந்த இடத்தில் இருந்து அகன்றனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக கிடைத்த தகவலையடுத்து கோப்பாய் பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்தனர். எனினும் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ங-86)

## கொடி வாரம்

யாழ்ப்பாணம், மே 31

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவனத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு கொடிவாரம் எதிர்வரும் 11ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்தக் கொடி வாரத்தின் போது சேகரிக்கப்படும் நிதி மாணவர்களிடையே வலுவிழந்தோர் நிறுவனத்தினைப் பற்றிய விளக்கத்தை வழங்கவும் வலுவிழந்த பிள்ளைகளின் மேம்பாட்டிற்கும் பயன்படுத்தவுள்ளதாக ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவனத்தின் தலைவர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கொடிவாரத்தின் போது பாடசாலை மாணவர்களிடையே விநியோகிப்பதற்கான கொடிகளும் உண்டியல்களும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (15)

## ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக வந்தவர்கள் அடிதடியில்

### சாவகச்சேரியில் சம்பவம்

தென்மராட்சி,மே 31

அடிதடிக் காயங்களுக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இருவர் வைத்தியசாலையில் கைகலப்பில் ஈடுபட்டனர்.

இந்த சம்பவம் நேற்று சாவகச்சேரி வைத்தியசாலையில் இடம்பெற்றது

மட்டுவில் தெற்குப் பகுதியில்அடிதடியில் ஈடுபட்டு காயமடைந்த இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் மாலை வேளையில் வைத்தியசாலை விடுதி மலகூடத்துக்கு சென்றபோது, பின்தொடர்ந்து சென்ற மற்றவர் மலசலகூடத்திற்குள் வைத்து தாக்குதல் நடத்தினார். இதன் பின் இருவரும் கைகலப்பில் ஈடுபட்டனர்.இதனால் வைத்தியசாலையில் பெரும் பதற்ற மேற்பட்டது.இந்த நிலையில் வைத்தியசாலை பொலிஸார் தலையிட்டு நிலைமையைச் சமாளித்தனர். இவர்களில் ஒருவரான கணபதி ஜெகதீஸ்வரன் (வயது 35) என்பவர் 'ரிக்கற்' வெட்டி வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார் மற்றைய நபரான செல்லத்துரை மகேந்திரன் (வயது 32 ) என்பவர் விடுதியில் தங்கி சிகிச்சை பெற்று வருகிறார். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் (ங- 9)

## வாசகர்களே!

உதயன் விளம்பரங்கள் மற்றும் செய்திகள் தொடர்பாக வாசகர்கள், விளம்பரதாரர்களின் தொடர்புக்காக இதுவரை பயன்படுத்தி வந்த newuthayanadvt@yahoo.com பாவனையில் இல்லை. தற்போது uthayan.com வலைக்குழும மின்னஞ்சல்கள் மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றன. பின்வரும் மின்அஞ்சல் முகவரிகள் ஊடாகவே வாசகர்கள், விளம்பரதாரர்கள் உதயனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பொதுவான தொடர்புகள்: admin@uthayan.com

செய்திகள்: news@uthayan.com


கருத்துகள்: comments@uthayan.com

விளம்பரங்கள்: advt@uthayan.com

நிர்வாகத்தினர்.

## 10 வயதில் பட்டதாரி

மெக்ஸிக்கோவைச் சேர்ந்த 10 வயது சிறுமி டெவ்னி அல்மெசன் உளவியல் விஞ்ஞானப் பட்டதாரியாகப் பட்டம் பெற்றுள்ளார். தனது நான்காவது வயதில் இடைநிலைப்படிப்பை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த இவர், பட்டப்படிப்பை மெக்ஸிக்கோ மொன்ட்ரோ பல்கலைக்கழகத்தில் பயின்றார். இந்தச் சிறுமியின் மூத்த சகோதரி டெலனி 14ஆவது வயதிலே இதே பல்கலைக்கழகத்தில் உளவியல் விஞ்ஞானத்துறையில் பட்டம் பெற்றார். இந்தச் சிறுமிகளின் அண்ணனான அன்ட்ரூ 18 வயதுடையவர். அவர் மனோதத்துவ மருத்துவராகக் கடமையாற்றுகிறார். அன்ட்ரூவும் தனது 16 ஆவது வயதில் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.




## பலநாள் திருடர்கள் மாட்டினர்



தென்மராட்சி மே 31

கைதடி மற்றும் நாவற்குழிப் பகுதிகளின் இடம்பெற்றுவந்த திருட்டுச் சம்பவங்களில் சூத்திரதாரிகளான 5 இளைஞர்களை சாவகச்சேரி பொலிஸார் நேற்று மடக்கிப் பிடித்தனர்.

கைதடி மற்றும் நாவற்குழிப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து நகைகள் மற்றும் பணம் உட்பட பல்வேறு பொருள்கள் திருடி வந்தவர்களை சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் உத்தரவின் பேரில் பெரும்குற்றப் பிரிவினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து துரித நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர். அதன் பயனாக 20 வயதுக்கு உட்பட்ட 5 இளைஞர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து பெருமளவு தங்க நகைகளையும் மீட்டுள்ளனர்.

இதேவேளை மறவன் புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் திருடப்பட்ட நான்கு கணினிகளும் அதனுடன் இணைந்த உபகரணங்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.கோவிலாக்கண்டிப் பகுதியில் உள்ள காணியொன்றில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் இவை மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதடிப் பகுதியில் ஒரு வீட்டில் 12 பவுண் நகைகளும் 2 ஆயிரம் ரூபா பணமும் மற்றொரு வீட்டில் 20 பவுண் நகைகளும் ஏனைய வீடுகளில் சீடிப்பிளேயர் உட்பட பெருமளவு பணத்தையும் தாம் திருடினர் என்று இந்த ஐவரும் விசாரணைகளில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மறவன் புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் திருடப்பட்ட நான்கு கணினிகளும் அதனுடன் இணைந்த உபகரணங்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.கோவிலாக்கண்டிப் பகுதியில் உள்ள காணியொன்றில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் இவை மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ங-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கு கடலில் பறிபோகும் வாழ்வாதாரம்

## தெற்கு கடற்றொழிலாளர்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்காதது குறித்து விசனம்

*யாழ்ப்பாணம், மே 31*

*வடமராட்சி கிழக்கில் சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்பட்டு வருவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது. தென்னிலங்கை கடற்றொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகள் காரணமாகவே வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.*

இதற்கு நடவடிக்கை எடுக்க யாழ்.மாவட்டக் கடற்றொழில் திணைக்களம் பின்நிற்பது ஏன் என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தென்னிலங்கையைச் சேர்ந்த நூறுக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் வடமராட்சி கிழக்கில் தங்கியிருந்து கடற்றொழில் செய்து வருகின்றனர்.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் சங்கங்களின் சமாசம், யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்களம் ஆகியவற்றின் அனுமதியின்றியே தென்னிலங்கை கடற்றொழிலாளர்கள் தொழில் செய்து வருகின்றனர்.

வடமராட்சி கிழக்கு கேவில் பகுதியிலுள்ள கடற்படையின் அனுமதியுடன் கடற்படை முகாமில் தங்கியிருந்தே தென்னிலங்கை மீனவர்கள் கடற்றொழில் செய்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சி கிழக்கு பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத சுண்டிக்குளம் பகுதிகளில் தென்னிலங்கை மீனவர்கள் சுதந்திரமாக நடமாடி வருகின்றனர் என்றும் பல்வேறு தரப்பினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடற்படையின் முகாம் ஊடாக கடலுக்குள் செல்லும் இவர்கள் வடமராட்சி கிழக்குப் பகுதி கடல் முழுவதும் சட்டவிரோத தொழில் முறைகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

சுருக்கு வலை உள்ளிட்ட தடை செய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்களை தென்னிலங்கை கடற்றொழிலாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இதன் காரணமாக வடமராட்சி கிழக்குப் பகுதி மீனவர்களின் கரைவலைத் தொழில் முழுமையாகப் பாதிப்படைந்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளால் வடமராட்சி கிழக்கில் உள்ள 3 ஆயிரம் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சங்கு மற்றும் கடலட்டை பிடிப்பதற்காக அனுமதி பெற்று வந்து கடற்படையின் உதவியுடன் வடமராட்சி கிழக்கில் தென்னிலங்கை கடற்றொழிலாளர்கள் தங்கியுள்ளனர்.

கடற்றொழில் செய்வதாயின் மாவட்ட கடற்றொழில் திணைக்களம் மற்றும் பிரதேச சங்கங்களின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும்.

அவ்வாறு எந்தவிதமான அனுமதியும் பெறாது தொழில் செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க கடற்றொழில் திணைக்களம் பின்னடிப்பது ஏன் என்று வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அத்துடன், கடற்றொழில் திணைக்களமும், பொலிஸாரும் இணைந்து தென்னிலங்கை மீனவர்களின் அடாத்தான செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

# இரணைமடு குடிதண்ணீர் திட்டத்தை விரைவுபடுத்துக

## வேலணை பிரதேச சபை தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 31

யாழ். குடாநாட்டில் தீவகம் உள்ளடங்கலாக ஏனைய பிரதேசங்களில் நிலத்தடி நீர் மாசுபட்டுள்ளது.

அத்துடன் நைதரசனின் அளவு அதிகரித்து மக்களுக்குத் தீங்கு ஏற்படும் அபாய நிலைக்கு குடிதண்ணீர் மாறிவிட்டது.

இந்த நிலையில் தீவகப் பகுதி கடும் வரட்சி நிலையை அடைந்துள்ளதாலும் இரணைமடு குடிதண்ணீர்திட்டத்தைவிரைந்து செயற்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

வேலணை பிரதேச சபை தலைவர் சி.சிவராசா இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வேலணை 5 உப அலுவலகங்களைக் கொண்ட பிரதேசம். இதில் புங்குடுதீவு, நயினாதீவு, வேலணை ஆகிய உப அலுவலக பிரிவில் வாழும் மக்களும் குடிதண்ணீருக்காகப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பிரதேச சபையில் உள்ள பவுசர்கள் மூலம் முழுமையான குடிதண்ணீர் வழங்கப்படுகிறது.

வரட்சி கால குடிதண்ணீருக்கான கடந்த வருட நிதி ஒதுக்கீடு அரச அதிபரிடம் இருந்து இதுவரை கிடைக்கவில்லை.

நயினாதீவு சுவிஸ் ஒன்றியம், நயினாதீவு மக்களுக்கான குடிதண்ணீருக்கு நிதி தருவதாகத் தெரிவித்துள்ளது.

தீவகத்துக்கு குடிதண்ணீர் வழங்க யாழ்.- கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோக திட்டப் பணிப்பாளர் எந்திரி.தி.பாரதிதாசனின் கோரிக்கைக்கு இணங்க வேலணை பிரதேச சபையால் காணி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.- கிளிநொச்சி இரணைமடுக்குள குடிதண்ணீர் திட்ட விநியோகத்தை விரைந்து செயற்படுத்தி எமது தீவகத்தின் 75 வீதமான குறைகளை தீர்த்தால் போதுமானதாக இருக்கும்.

இரணைமடு திட்டம் மூலம் தீவகமும் ஏனைய பிரதேசங்களும் குடிதண்ணீரை எதிர்பார்த்து நிற்கின்றன.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-41)

# பளை- தெல்லிப்பழை ரயில் பாதை துப்புரவு

யாழ்ப்பாணம், மே 31

பளையில் இருந்து தெல்லிப்பழை வரையான ரயில் பாதையைத் துப்புரவு செய்யும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன என்று ரயில்வே திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த ரயில் பாதை சரியான முறையில் சீர்செய்யப்பட்டதா என்பதை பார்வையிடுவதற்கும் இதன் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ரயில்வே திணைக்களத்தின் அதிகாரிகள் குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகை தந்தள்ளது.

இந்தக் குழு பளையில் இருந்து வாகனம் மூலம் ரயில் பாதையூடாக பயணம் செய்து பாதையின் சீரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டது.

சில இடங்களில் ரயில் பாதையில் பாலங்கள் சேதமடைந்துள்ள நிலையில் அவற்றின் ஊடான இவர்களின் போக்குவரத்து தடைப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த ரயில் பாதையின் புனரமைப்புப் பணிகள் நிறைவு பெற்ற பின்னரே பாதைக்கான தண்டவாளங்கள் பொருத்தப்படும்.

குறிப்பாக ரயில் பாதையின் இந்த புனர்நிர்மாணப் பணிகளை விரைவாக ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.- என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

# புகைத்தல் எதிர்ப்பு பேரணி நேற்று நெல்லியடியில்



பேரணியில் எடுத்துவரப்பட்ட பெரிய அளவிலான சிகரெட்டுக்கு தீ வைத்து எரித்தார் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன்.

வடமராட்சி, மே 31

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கரவெட்டி பிரதேச செயலகமும், சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபையும் இணைந்து நேற்று முற்பகல் நெல்லியடியில் பேரணி ஒன்றை நடத்தின.

கொடிகாமம் வீதியில் உள்ள புனித அந்தோனியார் தேவாலயத்திலிருந்து கரவெட்டிப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் ஆரம்பமான இந்தப் பேரணியில் சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர் மற்றும் பொலிஸார், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர்.

பேரணியில் கலந்து கொண்டோர் மிகப்பெரிய அளவிலான சிகரெட் ஒன்றையும் புகைத்தலுக்கு எதிரான வாசகங்கள் கொண்ட பதாதைகளையும் தாங்கியவாறு கோஷங்கள் எழுப்பிய வண்ணம் நெல்லியடி பொதுச் சந்தைக்கு எதிரே உள்ள தோட்ட மைதானத்துக்கு வந்து சேர்ந்தனர். அங்கு பேரணியில் எடுத்துவரப்பட்ட பெரிய அளவிலான சிகரெட்டுக்கு பிரதேச செயலர் தீ வைத்து எரித்தார்.

மதுபானம் சுவையானது என்பது வெறும் பொய்தானே, வெறுப்பான மணமும் எரிவும் கசப்பும் கொண்ட சாராயத்தை விரும்பிச் சுவைத்தா குடிக்கின்றீர்கள், மறைந்திருந்து புகைபிடித்தாலும் பாலியல் பலவீனம் ஏற்படுவதைத் தடுக்க முடியாது, மதுபானம் எரிவானதும், கசப்பானதும் என்ற உண்மையை உங்கள் பிள்ளைகளிடமும், நண்பர்களிடமும் எடுத்துக் கூறுங்கள், நீவிடும் புகையை சுவாசிக்கும் உன் மனைவி, பிள்ளைகளும் நோயாளியாகின்றனர், பொது இடங்களில் மதுசாரம், புகைப்பொருள் பாவனை தண்டனைக்குரிய குற்றமாகும் போன்ற வாசகங்கள் கொண்ட பதாகைகளை பேரணியில் சென்றோர் தாங்கியிருந்தனர். (ம-8-253)

# குறிகாட்டுவான் படகுகளில் பயணிப்பதில் இக்கட்டு

யாழ்ப்பாணம், மே 31

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் படகுகளில் பயணிக்கும் மக்களுக்கு வழங்கப்படும் உயிர் காக்கும் அங்கிகள் பாவனைக்கு உகந்த நிலையில் இல்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் பெரும்பாலான படகுகள் போக்குவரத்துக்குப் பொருத்த மற்றவை என்றும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பெருந்திருவிழாவுக்கு முன்னர் பொருத்தமான புதிய உயிர் காக்கும் அங்கிகளை வழங்குமாறு நயினாதீவு சமூக பொருளாதார கல்வி கழகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கேட்டுள்ளார்.

படகு சேவை தற்போது வேலணை பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ் வந்துள்ள நிலையில் பொருத்தமான படகுகளை மட்டும் பாவிப்பதற்கான அனுமதிகளை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த தேவைப்பாடுகளை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் செயற்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-41)

## தாவீது அடிகளின் நினைவுதினம் நாளை

அமரர் கலாநிதி ஹ.சி. தாவீது அடிகளின் 31 ஆவது நினைவுதினம் கத்தோலிக்க கலை இலக்கிய வட்ட தலைவர் துரை.ஆரோக்கிய தாசன் தலைமையில் யாழ். அருள் ஆச்சிரமத்தில் நாளை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. (எ)

## நிகழ்வுகள் இன்று

**கூட்டம்**

யாழ்.மாநகர சபையின் மே மாதப் பொதுக் கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

* * *

நயினாதீவு ஸ்ரீ நாக பூசணி அம்மன் ஆலயம் தொடர்பான அபிவிருத்திக் கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தவர்கள் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-50)

**புகைப்பொருள் எதிர்ப்பு தினம்**

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் 'சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்புதினம்' தலைவர் க.புஸ்பராசா தலைமையில் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். பிராந்திய மலேரியா தடை இயக்கப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.சிவசங்கர் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேசியாவில் சாகும்வரை ஈழ அகதிகள் உண்ணாவிரதம்

இந்தோனேசியா அகதி முகாமில் இரண்டு வருட காலமாக தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழர்கள் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தமக்கான உரிய தீர்வை யு.என்.எச்.ஆர் தன்னார்வு நிறுவனம் தெரிவிக்கும் வரை தாம் சாகும் வரையிலான உண்ணாவிரத போராட்டத்தினை மேற்கொள்ளப் போவதாக, இந்தோனேசியா அகதிமுகாமிலுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டாவது நாளாகத் தொடர்ந்து தமது உண்ணாவிரதத்தினை மேற்கொண்டு வரும் இவர்கள், தமக்கான விடியலை நாடு கடந்த தமிழீழ அரசு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழக அரசியல் தலைவர்கள் ஆகியோர் பெற்று தர வேண்டும் என உருக்கமாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தங்களது இந்த அபாயகரமான நிலையினை உணர்ந்து நீதியான தீர்வினைப் பெற்றுத் தரும்படி அவர்கள் தமிழ்க் கட்சிகளிடம் உருக்கமாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.



தமக்கான உரிய தீர்வை யு.என்.எச்.ஆர். தன்னார்வு நிறுவனம் தெரிவிக்கும் வரை உண்ணாவிரதம்

# கொழும்பு மீது டில்லி அதிருப்தி

01 மூன்று தசாப்த காலம் நீடிப்பதற்கு இந்தியாவே காரணமாக இருந்ததென்பதை மறைமுகமாகக் கோடிகாட்டியிருப்பதாகவும், இராஜதந்திர ரீதியில் இது இந்தியாவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது எனவும் பெயர் குறிப்பிட விரும்பாத இந்திய மூத்த இராஜதந்திரியொருவர் நேற்றுமாலை 'உதய'னிடம் தெரிவித்தார்.

''இந்த உரையை எமது வெளிவிவகார அமைச்சு ஆராய்ந்து வருகிறது. ஜனாதிபதியின்செயலாளரின்கருத்தை அவரது தனிப்பட்ட கருத்து என்று கருதிவிட முடியாது. இராஜதந்திர ரீதியில் இதற்குரிய பதிலை நாம் வழங்குவோம்'' - என்றும் அவர் குறிப்பிட்டார்.

# படைமுகாம்களை அகற்றுமாறு தமிழ் மக்கள் கோரவில்லை

01 கூட்டமைப்பினருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு-

அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு அங்குள்ள மக்கள் கோரவில்லை என்பதை இவ்வாறான அமைப்புகளுக்கு சுட்டிக் காட்டுவதற்கு நான் விரும்புகின்றேன்.

தெற்கிலுள்ள மாவட்டங்களைத் தனித்தனியே எடுத்துப்பார்ப்போமானால் எந்தளவு இராணுவ முகாம்கள் உள்ளன? தியத்தலாவை போன்ற பிரதேசத்தில் பொருளாதாரம் சக்தியடைந்திருப்பதற்கு இராணுவ முகாம்களும், இராணுவத்தினரும் காரணமில்லையா என நான் கேள்வியெழுப்புகின்றேன்

இராணுவ முகாம்கள் இருப்பதால் அந்தந்தப் பிரதேசங்களில் பொருளாதாரம் வளர்ச்சியடைகின்றது. யாழ்ப்பாணம் மக்கள் அங்குள்ள இராணுவத்தினரிடம் எவ்வளவு நட்புறவுடன் வாழ்கின்றனர். இராணுவத்துக்குத் தேவையான மரக்கறி வகைகளை நாம் யாழ். மாவட்டத்தில் தான் கொள்வனவு செய்கின்றோம். மீன் பெற்றுக்கொள்வதும் வடக்கில் தான்.

முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளமையும் எமது நாட்டில்தான்; வெளிநாட்டில் அல்ல. தேவையான இடங்களிலேயே முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சில நாடுகள் தமது இராணுவ முகாம்களை வெளிநாடுகளில் அமைத்துக்கொண்டு எமது நாட்டுக்குள் அமைக்கப்பட்டுள்ள முகாம்களை அகற்றுமாறு கோருகின்றன.

கூட்டமைப்புக்கு இன்று வடக்கில் மக்கள்சக்தி இல்லாமல் உள்ளது. அவர்களிடமிருந்து மக்கள் விலகிச் செல்கின்றனர்.

வடக்கு மக்களுக்கு ஈழம் அவசியமில்லை. அவர்களுக்கு மீண்டுமொரு யுத்தம் தேவையில்லை. அவர்களுக்குத் தேவை சுதந்திர மனிதனாக வாழ்வதாகும் - என்றார்.

# கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சியை முன்னிலைப்படுத்துவது தவறு

01 வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவர்கள் பொதுவான அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களை இப்போது தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் உள்வாங்கியிருப்பதன் மூலம் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சிதான் பிரதானமானது என்று கருதுவது தவறு.

கடந்த தேர்தலில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த 3 பேரே நாடாளுமன்ற உறுப்பினர்களாத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மற்றக் கட்சிகளிடத்திலும் மாறுபாடான கருத்துக்களே இருக்கின்றன- என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தும் நோக்கம் தம்மில் எவருக்கும் இல்லை என்று தமிழரசுக் கட்சியினதும் கூட்டமைப்பினதும் தலைவரான சம்பந்தன் மறுத்துள்ளார்.

நாட்டுக்கு உள்ளேயும் சர்வதேச மட்டத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மையப்படுத்தியே நடவடிக்கைகளை தாங்கள் முன்னெடுத்துவருவதாகவும்,

சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையில் நீண்ட கால அரசியல் வரலாற்றைக் கொண்டிருக்கின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி பெரும்பான்மையான தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது என்றும் சம்பந்தன் சுட்டிக்காட்டினார்.(ங)

## லைபீரிய போர்க்குற்றவாளிக்கு 50 வருட சிறை

01 2007 ஆம் ஆண்டு லைபீரியாவின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அவர் 2003ஆம் ஆண்டு சர்வதேச நிர்ப்பந்தங்கள் காரணமாக அப்பதவியிலிருந்து விலகினார்.

அவர் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில், சியாரா லியோனில் பயங்கர வன்முறையில் ஈடுபட்ட குழுவினருக்கு ஆயுதங்களை விநியோகித்து பெருமளவு மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு காரணமாக இருந்தார் எனவும் ஆயுதங்களுக்குப் பதிலாக இரத்தினங்களைப் பெற்றுக் கொண்டார் எனவும் அவர் மீது போர்க் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

சியாரா லியோன் தொடர்பான ஐ.நாவின் விசேட நீதிமன்றம் நெதர்லாந்து, தலைநகர் ஹேக்கில் அவர் மீது விசாரணை நடத்தியது. இந்த வழக்கில் அவர் குற்றவாளி என கடந்த மாதம் மேற்படி நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

நேற்று புதன்கிழமை அவருக்கு 50 வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அவருக்கு 80 வருடகால சிறைத்தண்டனை விதிக்க வேண்டுமென வழக்குத் தொடுநர்கள் கோரிக்கை விடுத்தனர். எனினும் நீதிபதி ரிச்சர்ட் லூசிக் 50 வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

# நீதியை இலங்கை இழுத்தடித்தால் கடும் நடவடிக்கைக்கு தயாராகுங்கள்

01 இழுத்தடித்துச் செல்லுமேயானால், மேலதிக நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக இருக்க வேண்டும். ஐ.நா.மனித உரிமைகள் சபைத் தீர்மானத்துக்கு அமைவாக, ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் நிபுணத்துவ உதவியை பெற்றுக் கொள்ளுமாறும், ஐ.நா. நிபுணர் குழுவின் பரிந்துரைகளுக்கமைய சுதந்திரமான அனைத்துலக விசாரணைப் பொறிமுறையை உருவாக்குமாறும், படையினரின் சித்திரவதைகள் மற்றும் முறையற்ற நடத்தைகளை நிறுத்தும்படியும் - இலங்கைக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டும்.

மூதூரில் ''அக்சன் பாம்'' பணியாளர்கள் படுகொலை, திருகோணமலையில் மாணவர்கள் படுகொலை, லசந்த விக்கிரமதுங்க படுகொலை, பிரகீத் எக்னெலிகொட காணாமற்போனமை, லலித்குமார், குகன் ஆகியோர் காணாமற்போனமை உள்ளிட்ட தீர்வுகாணப்படாத கொலைகள் மற்றும் காணாமற்போதல்கள் குறித்து விசாரணை நடத்தும்படியும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சரின் வொஷிங்டன் பயணத்துக்கு முன்பாக அனுப்பி வைக்கப்பட்ட இந்த இரகசியக் கடிதத்தின் உள்ளடக்கம் தற்போதே வெளியில் கசிந்துள்ளது.

# எரிபொருளின் விலையை உடன் குறைக்கவேண்டும்

01 கவே எமது நாட்டுப் பொருளாதாரம் இன்று சீரழிந்துள்ளது என அதன் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உலக சந்தையைக் காரணம் காட்டி அரசு நாட்டில் எரிபொருள்களின் விலைகளை அண்மைக்காலமாக அதிகரித்து வந்தது. விலை உயர்வு தவிர்க்கமுடியாததொன்று என்றும் அது சுட்டிக்காட்டியது.

ஆனால், தற்போது உலக சந்தையில் எரிபொருள்களின் விலை குறைந்துள்ளது. அப்படியாயின் அரசு இங்கு எரிபொருள்களின் விலையை உடன் குறைக்க வேண்டும்.

உலக சந்தையைக் காரணங்காட்டி எரிபொருள்களின் விலையை உயர்த்தும் அரசு, உலக சந்தையின் தற்போதைய விலைப்பட்டியலுக்கமைய விலைக்குறைப்புச் செய்யாதது ஏன்? அண்மைக்காலமாக போலிக்கதைகளைக் கட்டவிழ்த்து விட்டே அரசு எரிபொருள்களின் விலையை உயர்த்தியது. இதற்கு உலக சந்தை காரணமல்ல என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இந்த அரசிடம் முறையானதொரு பொருளாதாரக் கொள்கை இல்லை. அதனால்தான் நாட்டின் முதுகெலும்பான பொருளாதாரம் சீரழிந்துள்ளது - என்றார்.

# தமிழ் வந்தேறு குடிகளுக்கு வடக்கில் என்ன உரிமை?

01 யப்பட்ட இந்திய வரலாற்றாசிரியர் வேலகந்த சாஸ்திரி தனது நூலில், தமிழர்கள் ஏனைய இடங்களில் இருந்தே தென்னிந்தியாவுக்கு குடிபெயர்ந்தவர்கள் என்று கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் காணப்படும் புதைபடிமங்கள், தென்னிந்தியாவின் புதைபடிமங்களை விடவும் தொன்மையானது என்று அவர் தனது நூலில் கூறியுள்ளார்.

கந்தகுடி, நாகதீப, காரைதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களில் உள்ள கோவில்களை எடுத்துக் கொண்டால், முன்னர் பௌத்த வழிபாட்டு இடங்கள் அமைந்திருந்த இடங்களிலேயே அவை அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாடும், அதனைச் சுற்றியுள்ள தீவுகளும் நாகதீப என்றே வசம்ப மன்னனின் காலத்தில் எழுதப்பட்ட வல்லிபுரம் தங்க நூலில் கூறப்பட்டுள்ளது.

நயினாதீவில் கட்டப்பட்டுள்ள நாகபூசணி அம்மன் கோவில் முன்னர் அங்கிருந்த பெரிய பௌத்த வழிபாட்டு இடத்தின் மீது தான் கட்டப்பட்டுள்ளது.

இந்தக் கோவிலில் இருந்து அகற்றப்பட்ட ஒரு கல்வெட்டு தற்போது அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் திணைக்களம் இந்தக் கல்வெட்டின் மீது கவனம் செலுத்த வேண்டும்.

பராக்கிரமபாகு மன்னன் ஊர்காவற்றுறையில் ஒரு துறைமுகத்தை நிறுவி அதைப் பராமரித்ததாக இந்தக் கல்வெட்டு நிரூபித்துள்ளது.

அப்போது அது ஊரதோட்ட என்றே அழைக்கப்பட்டுள்ளது.

பொலன்னறுவ ஆட்சிக் காலத்தில் ஊர்காவற்றுறைத் துறைமுகம் சிங்களவர்களால் நிர்வகிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், வடக்கைத் தமிழர்கள் தமது தாயகம் என்று எப்படி உரிமை கோரமுடியும்?

துணைக்காய் கல்வெட்டில் அநுராதபுர ஆட்சிக்காலத்தில் மருத்துவமனை இருந்ததாக கூறபட்டுள்ளது.

பொல்கந்துகம என்ற கிராமத்துக்காக இந்த மருத்துவமனை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனை அதிகாரிகள் திருகோணமலை கல்லம்பற்றுக்கு பயணம் மேற்கொண்டது குறித்தும், அங்கு பிக்குணி ஆச்சிரமத்துக்கு நிலத்தை தானமாக வழங்கியது குறித்தும் இந்தக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆதாரங்கள், இலங்கையின் எந்தப் பகுதியையுமே தமிழர்கள் தமது தாயகம் என்று உரிமை கோர முடியாது என்பதையே நிரூபிக்கின்றன. - என்று தெரிவித்துள்ளார்.

# பிரிட்டன் தூதரை வெளியேற்றுக!

01 பிரிட்டன் தூதுவரின் கூற்றுக்காக நாம் எமது அதிருப்தியைத் தெரிவிக்கின்றோம்.

மனித உரிமைகள் தொடர்பில் பொய் கூறுகின்ற மேற்கத்தைய நாடுகள் ஏனைய நாடுகளில் உள்ள மக்களின் இறைமையில் தலையிடுவது கவலைக்குரிய விடயம்.

வடக்கில் இராணுவ முகாம்களை அகற்றவேண்டும் எனக் கூறிய பிரிட்டன் தூதுவர் ஜோன் ரக்கினை இலங்கையில் இருந்து அனுப்பவேண்டும்.

ஜெனிவாத் தீர்மானத்தின் அடிப்படையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உள்ள பிரதிநிதிகள் இலங்கை வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இலங்கை வெளிவிவகார அமைச்சு அதை எதிர்த்துள்ளது. ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

இதன்மூலம் எமது அரசு மட்டுமல்ல, நாட்டு மக்களும் இந்த யோசனையை நிராகரிக்கின்றனர் என்று சர்வதேசத்திற்குக் காண்பிக்கமுடியும். இந்த நாட்டுப் பிரஜைகள் என்ற வகையில் நாம் இந்த யோசனையை நிராகரிக்கின்றோம்.

நாம் அரசின் பங்காளிகள்தான். அதற்காக அரசு செய்யும் பிழைகளைப் பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# பாதுகாப்புச் செயலரின் கருத்தும் சம்பந்தனின் ஆதங்கமும்

வடக்கு, கிழக்கில் தமிழர்கள் ஆதிக்கம் செலுத்தும் நிலையில் இருக்கிறார்களா அல்லது இல்லையா?

இதுதான் பி.பி.சி நிருபர் இலங்கையின் பாதுகாப்புத்துறை செயலர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் கேட்ட கேள்வி. அதற்கு அவர் அளித்த பதில் இனிமேல் இல்லை, அல்லது இப்போது இல்லை என்று அர்த்தம் கொள்ளக் கூடியதான 'நோ லோங்கர்' என்ற ஆங்கிலச் சொல்லாகும். அதைக் கூறிய பிறகுதான் அதற்கான விளக்கமாக இந்த நாட்டில் எந்தப் பகுதியும் எவருக்கும் சொந்தம் என்றில்லை. எங்கும் எவரும் குடியேறி வாழலாம் என்ற விளக்கத்தைக் கொடுத்தார்.

இனிமேல் இல்லை அல்லது இப்போது இல்லை என்று அவர் கூறுகிறார் என்றால் முன்பு அவ்வாறு இருந்தது என்பதை ஒப்புக் கொள்கிறார் என்று அர்த்தமாகின்றது அல்லவா?

முன்பு இருந்த நிலைமை எப்போது இல்லாமல் போனது? எவ்வாறு இல்லாமல் போனது என்பவைகளை இங்கு நாம் ஆராய்ந்து கொண்டிருக்கப்போவதில்லை.

ஆனால் வடக்கு, கிழக்குப் பாரம்பரியமாக தமிழ் பேசுபவர்களின் தாயகமாக இருந்து வந்துள்ளன என்பது வரலாற்று ஆசிரியர்கள் ஒப்புக்கொண்ட விடயம். அது போக நமக்குத் தெரிந்த மிக அண்மைக்காலத்தில் அதாவது 1987 ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இலங்கை- இந்திய ஒப்பந்தத்திலேயே இது அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களை தமிழர்களின் வரலாற்று ரீதியிலான வதிவிடங்கள் என்று வர்ணித்ததன் மூலம் இந்த இருமாகாணங்களும் தமிழர்களின் பாரம்பரியமான தாயக பூமி என்று அந்த ஒப்பந்தம் ஏற்றுக் கொண்டுள்ளது. இதனை அப்போதைய இலங்கை அரசு ஏற்றுக் கொண்டது மட்டுமின்றி இந்த இரு மாகாணங்களிலும் கருத்துக் கணிப்பொன்றை நடத்துவதற்கு முன்பதாக இரண்டையும் இணைப்பதற்கும் சம்மதித்திருந்தது.

பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் கருத்துக்கு உடனடியாகவே எதிர்ப்புத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெற்கில் சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் இங்கு இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களை அரச ஆதரவில் குடியேற்ற முடியுமா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளார்.

வன்னியில் பல இடங்களில் தென்னிலங்கை சிங்கள மக்கள் ராணுவத்தின் ஆதரவுடன் குடியேற்றப்படுகிறார்கள் என்பது போன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்தே சம்பந்தன் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்க வேண்டும். எதுவானாலும் இந்தக் கேள்வியில் அர்த்தம் இல்லாமலில்லை.

தெற்கில் ஒரு குறிப்பிட்ட அளவில் வடக்கு, கிழக்கிலிருந்து தமிழ்க் குடும்பங்கள் எங்காவது குடியேறுவார்களானால் அவர்களுக்கு எவரும் பாதுகாப்பு அளிக்கப் போவதில்லை. அங்குள்ள ராணுவம்,பொலிஸ் மற்றும் அதிகாரிகள் அனைவருமே பெரும்பான்மை இனத்தவர்களாகவே இருப்பர். எங்கோ ஒருவர் இருவர் சிறுபான்மை இனத்தவர்களாவர். அவர்களும் பேசாமடந்தைகளே!ஆனால் வடக்கு, கிழக்கில் சிங்களவர்கள் குடியேறுவதாயின் அவர்களுக்கு ராணுவம், பொலிஸ் மற்றும் உயர் அதிகாரிகள் ஏன் ஆளுநரும் கூட பெரும்பான்மை இனத்தவராகவே இருந்து ஆதரவளிப்பர்.

இந்த யதார்த்த நிலையை எவரும் விளங்கிக் கொள்கிறார்கள் இல்லையே என்பதுதான் சம்பந்தனின் ஆதங்கம்.

வடக்கு, கிழக்கு தமிழர்களுக்குத் தான் சொந்தமென்றோ அவை சிங்களவருக்குச் சொந்தமில்லையென்றோ தாமோ தமது தலைவர் தந்தை செல்வநாயகமோ ஒருபோதும் கூறியது கிடையாது என்பதையும் சம்ப்ந்தன் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

உண்மையில் தமிழர்கள் என்ன கூறுகிறார்கள்? பெரும்பான்மை மக்களை வடக்கு, கிழக்கில் திட்டமிட்டுக் குடியேற்றி குடிசார் பரம்பல் நிலையை சிதைக்காதீர்கள். தமிழ்- முஸ்லிம் மக்களை அவர்களின் சொந்த இடங்களிலேயே சிறுபான்மையோராக மாற்றி அமைக்கின்ற கபடமான செயல் திட்டங்களை புகுத்தாதீர்கள், அதன் மூலம் அந்த மக்களின் பாரம்பரிய கலாசார பண்பாடுகளை சிதறடிக்காதீர்கள் என்பதுதானே.

இதைக்கேட்பதும் அதற்காக குரல் எழுப்புவதும் அவசியமெனில் அரசுடன் சாத்விகமாகப் போராடுவதும் ஒரு ஜனநாயக நாட்டில் மக்களுக்குள்ள உரிமை.

அவ்வாறான அதிருப்தி நிலைமை மக்கள் மத்தியில் உருவாகாமல் நல்லாட்சியை உறுதிப்படுத்த வேண்டியது ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களின் கடமை.

# கல்வியில் வடக்கு பின்தங்கியமை மிகவும் வேதனைக்குரிய விடயம்

## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் கருத்து

தென்மராட்சி, மே 31

இலங்கையில் உள்ள 95 கல்வி வலயங்களில் வடக்கு மாகாணத்தில் உள்ள கல்வி வலயங்களே கல்வியில் அடைவு மட்டத்தில் மிகவும் பின்தங்கி விட்டதாகக் கூறப்படுவதை எண்ணுகையில் மிகவும் வேதனைப் பட வேண்டியிருக்கிறது.

இவ்வாறு சாவகச்சேரி கைத் தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற சைவ சமய பாட கற்றல் கையேடு வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

50 வருடங்களுக்கு முன்னர் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளைத் தேடி அனைத்து மாவட்டங்களில் இருந்தும் மாணவர்கள் வருகை தந்து கற்றனர். தற்போது இந்த நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

ஏன் இந்த நிலை? இதனை முழுமையான ஆய்வு செய்ய வேண்டியது காலத்தின் தேவை. இலவசக் கல்வி முறை நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து அதனால் பயன்பெற்றவர்கள் ஆயிரக்கணக்கில் உள்ளனர்.

தரமான சமுதாயம் உருவாக வேண்டுமெனில் தரமான கல்வி அறிவு வேண்டும், தரமான கல்வி அறிவு வேண்டுமெனில் தரமான ஆசிரியர் சமூகம் வேண்டும்.

எமது ஆசிரிய சமூகம் ஒரு தரமான சமூகத்தை உருவாக்காது விட்டால் இன்றைய காலத்தில் காதால் கேட்கும் குற்றங்களை எதிர் காலத்தில் கண்களால் பார்க்கக்கூடிய காட்டுமிராண்டித்தனமாக நிலைமை உருவாகும்.

ஆசிரிய சமுதாயத்தால் மட்டுமே நல்ல பிரஜைகளை உருவாக்க முடியுமென்பது உலகளாவிய ரீதியில் பெற்றோர்களின் நம்பிக்கையாகும். பல்வேறுபட்ட குடும்பங்களிலிருந்து மாணவர்கள் பாடசாலைகளுக்கு வருகின்றனர்.

இவர்களை ஒரே நோக்கில் ஒரே சிந்தனையில் கல்வியில் கொண்டு செல்ல ஆசிரியர்களாலும் அவர்களுக்குப் பொறுப்பான அதிபர்களாலும் மட்டுமே முடியும். அவ்வாறு உருவாக்கப்படும் மாணவ சமுதாயம் நிச்சயம் சிறந்த பிரஜைகளாக கல்வியாளர்களாக மாறும்.- என்றார். (ம-9)

# மாகாண மட்டக் கணிதப் போட்டி இரு நாள்கள் யாழ். இந்து மகளிரில்

யாழ்ப்பாணம், மே 31

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் மாகாண மட்டக் கணிதப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் இரண்டாம், மூன்றாம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இந்தப் போட்டிகள் நடைபெறும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்குத் தெரியப்படுத்தி போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களை கலந்து கொள்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

போட்டிகள் விவரம் வருமாறு:

ஜூன் 2 ஆம் திகதி காலை 8 மணி - தரம் 6,7,8 வகுப்பு மாணவர்களுக்கான தமிழ், ஆங்கில மொழி மூலமான கணித வினாடி வினாப் போட்டி,

நண்பகல் 12 மணிக்குத் தமிழ், ஆங்கில, சிங்கள மொழி மூலமான தேசிய மட்ட போட்டிக்கான கணித வினாடி வினா தெரிவுப் பரீட்சை. சிங்கள மொழிமூல மாகாண மட்ட கணித வினாடிவினா எழுத்துப் பரீட்சை.

காலை 7.30, காலை 10 மணி சிரேஷ்ட பிரிவுக்கான தமிழ், கணித நாடகப் போட்டி கணிதச் செயற்பாடுகள்.

ஜூன் 3 ஆம் திகதி - தரம் 9,10,11 வகுப்பு மாணவர்களுக்கு காலை 8 மணிக்குத் தமிழ், ஆங்கில கணித வினாடிவினாப் போட்டி.

தரம் 9,10 வகுப்பு மாணவர்களுக்கு நண்பகல் 12 மணிக்கு தமிழ், ஆங்கிலம், சிங்களம் மொழி மூல தேசிய மட்ட போட்டிக்கான கணித வினாடிவினா தெரிவுப் பரீட்சை.

காலை 7.30 மணிக்கு கனிஷ்ட பிரிவுக்கான தமிழ் மொழியிலான கணித நாடகப் போட்டி.

நண்பகல் 12 மணிக்கு சிங்கள மொழி மூல மாகாண மட்ட கணித வினாடி வினாப் பரீட்சை போன்றவை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# 2012 வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 31

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் நாளை முதல் ஆரம்பமாகவுள்ளன. முதல் கட்ட நடவடிக்கையாக நாளை முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரையில் கிராம சேவையாளர்களால் 'பி.சி' படிவங்கள் வீடு வீடாக விநியோகிக்கப்படவுள்ளன என்று யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. இதைத் தொடர்ந்து 2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

யாழ்.மாவட்டத்தின் சகல கிராம சேவையாளர்களுக்கும் 'பி.சி' படிவங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. இந்தப் படிவங்கள் நாளை தொடக்கம் பொதுமக்களுக்கு கிராம சேவையாளர்களால் வீடு வீடாக விநியோகிக்கப்படவுள்ளன.

வீடு வீடாக விநியோகிக் கப்படும் இந்தப் படிவங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 25 ஆம் திகதிக்குப் பின்னர் மீளவும் எமது தேர்தல் திணைக்களத்துக்கு கிராம சேவையாளரால் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

எனவே 18 வயதுக்கு மேற்பட்ட சகல இலங்கை பிரஜைகளும் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும் ஏன்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-5)

# இளைஞர் தினம் இம்முறை நெடுந்தீவில்

யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றம் நடத்தும் இளைஞர் தினம் இந்த முறை நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் இடம் பெறவுள்ளது.

ஜூன் மாத நடுப் பகுதியில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர் பிரிவுகளிலுமுள்ள இளைஞர் கழக உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் 50 இளைஞர் யுவதிகள் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

இவர்களும் நெடுந்தீவில் இடம் பெறும் யாழ்.மாவட்ட இளைஞர் தினத்தில் கலந்து கொள்ளவுள்ளனர் என்று வடமாகாண இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாணப் பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் தெரிவித்தார். (ம-400)

# பட்டதாரி பயிலுநர் தெரிவுக்கு நேர்முகத் தேர்வு

## செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், மே 31

பட்டதாரிப் பயிலுநர் தெரிவுக்காக எதிர்வரும் ஜூன் மாதம் 5ஆம், 6 ஆம், 7 ஆம் திகதிகளில் நேர்முகத் தேர்வுகள் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளன என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இந்த வருட ஆரம்பத்தில் பட்டதாரிப் பயிலுநருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இதற்கமைவாக யாழ்.மாவட்டத்திலிருந்து மாத்திரம் 3 ஆயிரம் பட்டதாரிகள் வரையில் விண்ணப்பித்திருந்தனர்.

அவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் இரட்டைப் பட்டங்களைப் பெற்றவர்கள்.

இந்த நிலையில் ஏனைய மாவட்டங்களில் பட்டதாரி பயிலுநர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் யாழ்.மாவட்டத்தில் அதற்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நேர்முகத் தேர்வுகளே யாழ்.மாவட்ட செயலகத்தில் நடத்தப்படவுள்ளன.

விண்ணப்பித்த 3 ஆயிரம் பட்டதாரிகளும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படவுள்ளனர். இதற்கான கடிதங்கள் அனுப்பப்படவுள்ளன- என்றார். (ம-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பூப்புனித நீராட்டு விழாவையும் விட்டு வைக்காத இராணுவம்

## அறிவிக்கவில்லையென தேடி வந்தனர்

கிளிநொச்சி, மே 31

வடக்கில் நடைபெறும் அரச மற்றும் பொது நிகழ்வுகள் அனைத்திலும் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளும் இராணுவத்தினர், குறிப்பாக வன்னியில் எந்தவொரு விழாக்களையும் விட்டு வைப்பதில்லை.

வன்னியில் பொது நிகழ்வுகள் அனைத்திலுமே இராணுவத்தினரின் பிரசன்னம் இருக்கும். அவர்களின் அனுமதியுடனேயே நிகழ்வுகளை ஏற்பாடு செய்ய முடியும்.

இவ்வாறான நிலையில்-

கடந்த ஞாயிறன்று வன்னேரிக்குளம் பகுதியில் பூப்புனித நீராட்டு விழா நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம், அங்கு சென்ற இராணுவத்தினர் தங்களுக்கு ஏன் அறிவிக்கவில்லை - அழைப்பு விடுக்கவில்லை என்று கேள்வி எழுப்பியுள்ளனர்.

''இத்தகைய நிகழ்வுகள் நடத்துவதற்கு முன் அறியத்தர வேண்டும்; ஒலிபெருக்கி பாவிக்க அனுமதி பெற வேண்டும்'' என்றும் காட்டமாகக் கூறியுள்ளனர்.

**''இத்தகைய நிகழ்வுகள் நடத்துவதற்கு முன் அறியத்தர வேண்டும்; ஒலிபெருக்கி பாவிக்க அனுமதி பெற வேண்டும்'' என்றும் காட்டமாகக் கூறியுள்ளனர்.**

மேலும் அந்த நிகழ்வுக்கு வந்திருந்த உறவினர்களின் பெயர் விவரங்களையும் பதிந்து கொண்டு சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குடிசார் நடவடிக்கைகளில் இருந்தும் இராணுவத்தினரை விலக்கிக் கொள்வதாக சர்வதேசத்துக்குத் தெரிவிக்கும் அரசு தொடர்ந்தும் இது போன்ற இறுக்கமான இராணுவப் பிடிக்குள்ளேயே மக்களை வைத்திருப்பதை இந்தச் சம்பவம் காட்டுவதாக கிராமிய அமைப்புப் பிரதிநிதிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க,

வன்னேரிக்குளம் ஆனைவிழுந்தான் பகுதியிலுள்ள வீடுகளுக்கு அடிக்கடி செல்லும் இராணுவத்தினர் அங்கு வந்து போகும் உறவினர்கள் தொடர்பாகவும் ஏன் வருகிறார்கள் என்ற காரணத்தையும் விசாரித்துப் பதிவு செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

(ஒ-க-16-301)

# வவுனியா விபத்தில் மாணவன் சாவு



வவுனியா,மே 31

வவுனியா - ஹொரவப் பொத்தானை வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளார்.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்கும் அலோசியஸ் அன்ரூ என்ற மாணவனே மரணமானவராவர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.15 மணியளவில் பாடசாலையிலிருந்து தனது வீட்டுக்குச் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இந்த மாணவன் தனது வீட்டுக்கு முன்னால் வீதியைக் கடக்க முற்பட்ட போது விபத்தில் சிக்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் சம்பந்தப்பட்ட கார் கோவில்குளத்திலுள்ள உணவு நிலையத்துக்குரியது என்று கூறப்பட்டது.

வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

(க-400-402)

## சட்டவிரோத கள் விற்பனைக்கு 9 ஆயிரம் ரூபா தண்டம்

வவுனியா,மே 31

சட்டவிரோத கள் விற்பனையில் ஈடுபட்ட ஒன்பது பேர் 9 ஆயிரம் ரூபாவைத் தண்டமாகச் செலுத்தினர்.

வவுனியா மாவட்டத்திலுள்ள பெரிய தம்பனை, தவசிக்குளம், நெளுக்குளம், அண்ணாநகர், புதுக்குளம், பம்பைமடு மற்றும் கல்மடு ஆகிய பகுதிகளில் திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்ட மதுவரித் திணைக்களத்தினர் சட்டவிரோதமாகக் கள் விற்பனை செய்த ஒன்பது பேரைக் கைது செய்தனர்.

இவர்களுக்கெதிராக வவுனியா மாவட்ட நீதிமன்றில் மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி பி.ரகுநாதனால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இவர்கள் அனைவரும் தமது குற்றங்களை ஒப்புக்கொண்டதை அடுத்து ஒன்பது பேரையும் தலா ஆயிரம் ரூபாவைத் தண்டமாகச் செலுத்துமாறு உத்தரவிட்டார் வவுனியா மாவட்ட நீதிவான் அலெக்ஸ்ராஜா. (க-400)

# கிளிநொச்சிப் பாடசாலைகளிலும் சாரணரை உருவாக்க நடவடிக்கை

கிளிநொச்சி, மே 31

பாடசாலைகளில் சாரணீயத்தின் முக்கியத்தை வலியுறுத்தி கல்வி அமைச்சு அறிவித்ததை அடுத்து இலங்கைச் சாரணர் சங்கம் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் சாரணர் சேவையை உருவாக்க மாவட்ட சாரணர் ஆணையாளர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

பாடசாலைகளில் புதிதாக சாரணர் குழுக்களை ஆரம்பிக்கவுள்ள பாடசாலைகள் விவரங்களை அந்தந்த வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்குமாறு மாவட்டச் சாரணர் ஆணையாளர் செ. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

**பாடசாலைகளில் புதிதாக சாரணர் குழுக்கள் ஆரம்பிக்கப்படும்.**

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் தென்மராட்சி கல்வி வலயத்துக்கும் கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகள் கிளிநொச்சி கல்வி வலயத்துக்கும் தமது விண்ணப்பங்களை அதிபரால் உறுதிப்படுத்தி அனுப்பி வைக்குமாறும், சாரணர் கலைக்கூறு II பயிற்சி பெற விரும்புவோர் விண்ணப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# அரச செயலகத்தின் அனுமதியை மறுக்கும் இராணுவ அதிகாரிகள்

## வவுனியா நலன்புரி முகாமில் இருந்த 6 குடும்பங்கள் நிர்க்கதி நிலையில்

கிளிநொச்சி, மே 31

செயலகத்தால் நலன்புரி முகாமில் பதிவுகளை மேற்கொண்டு தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்ட போதும் இராணுவ அதிகாரிகள் அதனை மறுத்து வருவதால் ஆறு குடும்பங்கள் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

கடந்த கால போர் இடரின் போது இடம் பெயர்ந்து கதிர்காமர் நலன்புரி முகாமில் இருந்து பிரசவம் மற்றும் உடல் பாதிப்புப் போன்ற காரணங்களால் சுமார் ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 21 பேர் வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய பகுதிகளுக்குத் தற்காலிகமாகச் செல்ல முகாம் அதிகாரியால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அவர்கள் அனைவரும் தமது தேவைகள் நிறைவடைந்தமையாலும் அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்வுக்கான நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாலும் தாம் மீண்டும் நலன்புரி நிலையத்தில் சென்று தங்கித் தமது பதிவுகளை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு வவுனியா மாவட்டச் செயலகத்திடம் விண்ணப்பம் செய்திருந்தனர்.

இந்த நிலையில் வவுனியா மாவட்டத் திட்டப் பணிப்பாளரினால் கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் இவர்கள் நலன்புரி நிலையத்தில் சென்று தங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால் அந்த அனுமதியை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் உங்களுக்கு நலன்புரி முகாமுக்குள் அனுமதிப்பதற்கு இராணுவ மேலிடத்தில் இருந்து அனுமதி வர வேண்டும் என்றும் கூறி முகாமில் தங்குவதற்கான அனுமதியை இராணுவத்தினர் மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தம்மை முகாமுக்குள் அனுமதிக்குமாறு சம்பந்தப்பட்ட குடும்பங்கள் பலதடவை முகாம் பொறுப்பதிகாரியிடம் கேட்ட போதும் அதற்கு அனுமதி வழங்கத் தற்போது மறுப்புத் தெரிவிக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(க-400)

## பற்களைக் காப்போம்



துணுக்காய் அம்பலப் பெருமாள் கிராமத்தில் இடம்பெற்ற மருத்துவ முகாமில் பற் சுகாதாரம் தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்படுகின்றது. (18)

# காதரைத் தாக்கியவர் கேட்டார் மன்னிப்பு

மன்னார், மே 31

மன்னார் மாவட்டத்தின் மூத்த ஊடகவியலாளரான மக்கள் காதரைத் தாக்கிய முஜாகீர் என்பவர் காதரிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் ஆயருக்கு ஆதரவாகவும்,அமைச்சருக்கு எதிராகவும் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட ஊடகவியளாலர் காதர் மன்னார் ஆயருக்கு ஆதரவாக உரையாற்றினார்.

இந்த நிலையில் குறித்த ஊடகவியலாளர் முஸ்லிம் மதத்தைப் பிரதிநிதிப்படுத்தும் வகையில் சென்றமையைக் கண்டித்துக் கடந்த திங்கட்கிழமை மாலை அமைச்சரின் இணைப்பாளரினால் தாக்கப்பட்டார்.

தாக்கப்பட்ட தினம் சுமார் இரவு 9 மணியளவில் குறித்த ஊடகவியலாளரது வீட்டுக்குச் சென்ற அமைச்சரின் ஆதரவாளர்களும், இணைப்பாளர்களும் அவருடன் கதைத்துப் பிரச்சினையைத் தீர்த்து வைத்துள்ளனர்.

**தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு குறித்த சம்பவத்துக்காக தான் பகிரங்கமாக மன்னிப்பு கேட்பதாகத் தெரிவித்துள்ளார்.**

காதரைத் தாக்கியதாகக் கூறப்படும் முஜாகீர் என்பவர் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு குறித்த சம்பவத்துக்காகத் தான் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்பதாக தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அமைச்சரின் ஆயர் தொடர்பான உரையால் எதிர்ப்புக்கள் வலுத்து வருகின்றன.

இந்த நிலையில் அமைச்சரின் ஆள்கள் சமரசம் செய்ய முயற்சித்ததும், தாக்கியவர் மன்னிப்புக் கேட்டதும் இந்தப் பிரச்சினை பூதாகரமாக உருவெடுப்பதைத் தடுக்கும் ஒரு முயற்சியே என இங்குள்ள பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (க-12)

## கூட்டெரு தயாரிப்பதற்கான பயிற்சி வகுப்பு

ஒட்டுசுட்டானில் கூட்டெரு தயாரிப்பதற்கான பயிற்சி வகுப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.

ஒட்டுசுட்டான் விவசாய திணைக்களத்தினர் விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு அவர்களை ஊக்குவிக்கும் முகமாக கூட்டெரு தயாரிக்கும் முறை சார் பற்றியும், இதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் நன்மைகள் தொடர்பாகவும் பயிற்சி வகுப்புக்கள் நடத்தி வருவதாக முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

விவசாய அலுவலகத்தில் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றுவருவதால் இந்தப் பயிற்சி வகுப்புக்கள் ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெற்று வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கூட்டெருவைத் தயாரிப்பதற்கான முக்கிய மூலப் பொருளான எரு போதியளவு உள்ளமையால் கூட்டெருப் பாவனையை அதிகரித்து செயற்கை உரப் பாவனையைக் குறைத்துக் கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-500)

# கிளிநொச்சி ஆனைவிழுந்தான் கிணறுகளில் உவர் நீர்

அக்கராயன், மே 31

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் கிராமத்திலுள்ள கிணறுகளின் நீர் உவரடையத் தொடங்கியுள்ளது.

வன்னேரிக்குளம், குஞ்சுக்குளம், நாச்சங்குடா ஆகிய கிராமங்களின் கிணற்று நீர் ஏற்கனவே உவராக மாறியுள்ளன. தற்போது ஆனைவிழுந்தான் கிராமமும் உவரடையத் தொடங்கியுள்ளது. இதன் எதிரொலியாகவே கிணறுகளின் நீர் உவராக மாறியுள்ளது.

இந்தக் கிராமம் பூநகரிப் பிரதேச செயலகப் பிரிவுக்கு அருகிலுள்ள கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவின் எல்லைக்குள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவாக அமெரிக்காவில் மரநடுகை

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்ச்சி அமெரிக்காவின் இலினொய்ஸ் மாநிலத்தில், சிகாகோ பெரு நகரிற்கு அண்மையில் உள்ள போலிங்புறூக் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணியளவில் நடைபெற்றது.

இதன்போது முள்ளிவாய்க்காலில் தமிழர்களுக்கு நடந்த இரத்தம் தோய்ந்த வரலாற்றுச் சின்னமாக மரம் ஒன்றும் நடப்பட்டது.

இறுதிப்போரின்போது உயிர்நீத்த தமிழ் மக்களுக்கு 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தியதோடு நினைவு நாளுக்கு வந்த நூற்றுக்கு மேலான சிறார்களும் பெரியவர்களும் மலர்தூவி வழிபாடும் செய்துகொண்டனர்.

இந்தநிகழ்வில் பல சிறுவர் சிறுமிகள் இந்தநினைவு நாள் சம்பந்தப்பட்ட தங்கள் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர்.



இந்த நினைவு நாளின் சிறப்பம்சமாக அமெரிக்கக் காங்கிரஸ் பிரதிநிதியான திருமதி ஜூடிபிக்கெட்டும், போலிங் புறூக் நகரின் மேயரான ராஜர் க்லாரும் கலந்து கொண்டனர்.

இறுதியாக தமிழர்களுக்கு நடைபெற்ற இந்த இரத்தம் தோய்ந்த வரலாற் றுச் சின்னமாக நடப்பட்டுள்ள மரத்தின் அடியில் ஒன்று கூடி, அந்தத் துயரம் தோய்ந்த நாளை நினைவிற்கொண்டு மனதில் சுமையோடும் கண்ணில் நீரோடும் மலர் அஞ்சலி செலுத்தினர்.

இந்தமாதிரியான மனித அவலம் உலகில் எந்தத் தேசத்திலோ எந்த இனத்திலோ நடைபெறக் கூடாது. நாம் ஒன்றாக இணைந்து இனிமேலும் நடைபெறாது தவிர்க்கப்பட ஆவன செய்ய வேண்டும் என்ற உறுதியுடன் நிகழ்வில் கலந்து கொண்டோர் நினைவுநாளை நிறைவு செய்தனர். (வ)

## கடும் எதிர்ப்பையும் மீறி இலங்கை வந்தது இந்திய பாரதியார் சங்கக் குழு

இலங்கை அரசின் சார்பில் நாளை வெள்ளிக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ள பாரதியார் விழாவில் பங்கேற்க இந்திய பாரதியார் சங்கக் குழுவினர் இலங்கை வந்துள்ளனர்.

'தேமதுரத் தமிழோசை உலகறியச் செய்வோம்' என்ற பெயரில் நடத்தப்படும் இந்த விழாவில் பங்கேற்பதற்காக, பாரதியார் சங்கக் குழுவினர் நேற்று முன்தினம் இலங்கை நோக்கி வந்துள்ளனர்.

இந்த விழாவில் பாரதியார் சங்க குழுவினர் பங்கேற்பதற்கு தமிழ் ஆர்வலர்கள் ஏற்கனவே எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

விடுதலைப் புலிகளுடனான போரின்போது அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்த இலங்கை அரசு, தமிழ்க் கவிஞரான பாரதியாருக்கு விழா நடத்துவது உள்நோக்கம் கொண்டது என்றும் தமிழ் ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும் விழாவில் பங்கேற்பதற்காக இலங்கை செல்ல உள்ள தமிழக பிரமுகர்களின் வீடுகளை முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவோம் என்றும் அவர்கள் அறிவித்திருந்தனர். ம.தி.மு.க. பொது செயலாளர் வைகோவும் இதற்கு கண்டனம் தெரிவித்திருந்தார். இலங்கைக்கு செல்ல வேண்டாம் என்றும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்தநிலையில் தமிழ் ஆர்வர்களின் பலத்த எதிர்ப்புகளையும் மீறி பாரதியார் சங்கக் குழுவினர் இலங்கை சென்றது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை அரசால் நடத்தப்படும் இம் மாநாட்டில் இவர்கள் எவ்வாறு கலந்துகொள்கிறார்கள் என்று தெரியவில்லை என்று பல தமிழர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (வ)


### பெயர் மாற்றம்

வேலணை 6 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் தில்லைநாதன் புஸ்பராணி ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து தில்லைநாதன் புஸ்பலதா என மாற்றம் செய்கிறேன் என்பதனை சகருக்கும் அறியத்த ருகிறேன். (18813) (15 -14)

### கண்ணீர் அஞ்சலி

யாழ். நீதிவான் நீதிமன்றத்தில்
அலுவலக பணியாளராக
கடமையாற்றி 30.05.2012 அன்று
அமரத்துவம் அடைந்த
செல்வன்
சின்னத்தம்பி புஸ்பராஜ்



அவர்களின் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(18818) (15-14)

*நீதிமன்ற நண்பர்கள்.*

### மணல் விற்பனைக்கு

கண்டாவளைமணல், பூச்சுமணல், கட்டு மண், கருங்கல் சல்லி, அரிந்தகல் என்பன குறைந்த விலையில் உங்கள் வீடுகளுக்கு கொண்டு வந்து தரப்படும். மற்றும் கொங் கீறிற் கலவை இயந்திரம் வாடகைக்கு விடப்படும்.

உரிமையாளர் - K.T.S. Transport
தொடர்புகளுக்கு - 0770302600

(சி-258)(34.14)

### காணவில்லை



கோப்பாயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கணேஸ் என்பவரை 29.05.2012 செவ்வாய்க்கிழமையில் இருந்து காணவில்லை. இவரை கண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ள வும்.

(18817) (15- 14) தொ.இல-0777592296-கோப்பாய்

### கண்ணீர் அஞ்சலி

திருமதி
தெய்வானைப்பிள்ளை பேரம்பலம்
(முன்னாள் ஆசிரியர், யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்)



யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலய முன்னாள் அதிபரும், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளரும், உசன் கிராமத்தின் வளர்ச்சியில் பல்வேறு மன்றங்களுக்கூடாக பணிபுரிந்தவரும் எமது மன்றத்தின் முன்னாள் ஆலோசகருமான க. பேரம்பலம் அவர்களின் அன்பு மனைவி
திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம்
(முன்னாள் ஆசிரியர், யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்) அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உசன், மிருசுவில். உசன் இந்து இளைஞர் மன்றம்.

(இ/259) (34.14)

### கார் உடனடி விற்பனைக்குண்டு

வைத்தியரின் பாவனையிலுள்ள KD தொடரிலக்கமுடைய FB15 Nissan Sunny Super Sloon கார் யாழ்ப்பாணத்தில் உடனடி விற்பனைக்குண்டு. (18808)(34.14)

தொடர்புகளுக்கு: 0773822061, 0714412003

### மரண அறிவித்தல்

*சுப்பிரமணிய ஐயர் யோகேஸ்வர சர்மா*

(பிரதமகுரு பாணன்குளம், நாச்சி அம்மன் கோயில்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும், இல. 56, மூத்தவிநாயகர், முதலாம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஐயர் யோகேஸ்வர சர்மா நேற்று (30.05.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 56, மூத்தவிநாயகர்,
முதலாம் ஒழுங் கை
(18819)(34.14)
தகவல்:
சுகன்பாபு (மகன்)

### விற்பனைக்கு



LJ - xxxx தொடரிலக்க Isuzu Full கூலர் (10 ½ அடி) உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு - 0771986948, 0779077081

(சி-256)(34.14)

### கண்ணீர் அஞ்சலி



இராமசாமி சோமசுந்தரம்
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

Hari Engineers and Constractors கட்டட ஒப்பந்தக்காரர் சோ. யாதவன் அவர்களது அன்புத் தந்தையின் பிரிவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அவர்களின் துயரில் பங்குகொள் வதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணேசன் ஹார்ட்வெயார்
நெல்லியடி, கரவெட்டி.

(இ/251) (34.14)

### கண்ணீர் அஞ்சலி



கடந்த 29.05.2012 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மரியதாசன் ஜெகூ அவர்களின் அன்புத்தாய்
திருமதி மேரி அஞ்சலா மரியதாசன்
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தவிசாளர், உபதவிசாளர், உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள். வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை. (மல்லாகம்)

(இ/249) (34-14)

### வாடகைக்கு அல்லது குத்தகைக்கு....

- யாழ். பொது நூலகத்துக்கு அருகில் சப்பல் வீதியில்,
- 7 விசாலமான அறைகள்
- 3 halls
- சமையலறை, குளியலறை வசதிகள்,
- புதுப்பிக்கப்பட்டது.
- மூன்று வழி மின்னிணைப்பு வசதிகளுடன் கூடியது.
- அலுவலகங்களினதும் கல்லூரிகளினதும் உபயோகத்துக்கு ஏற்றது.
- மாத வாடகை 100,000/-

E-mail :
citystarkb@gmail.com
T.P : 0770780393

(சி-252)(34.14)

### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் உப அதிபரும், சிரேஷ்ட ஆசிரியருமான திருமதி இராஜேஸ்வரி சோமசுந்தரம் அவர்களின் அன்புக் கணவர்
அமரர் இராமசாமி சோமசுந்தரம் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர், அல்வாய் தெற்கு)
அவரின் மறைவை ஒட்டி துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

(இ/250) (34.14)

### கண்ணீர் அஞ்சலி



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித்திட்டத்தில் சமூக வலுவூட்டாளராகக் கடமையாற்றும் வை.ரவிசங்கர் அவர்களின் அன்புச் சகோதரி
திருமதி ஜெயகுமார் ஞானமலர்
அவர்கள் நேற்றுமுன்தினம் (29.05.2012) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தமையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மீள் எழுச்சித்திட்டம்,
மாவட்ட திட்ட முகாமைத்துவப் பிரிவு,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
(18812) (34-14)
*பிரதித் திட்டப்பணிப்பாளர், உத்தியோகத்தர்கள்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



வடமாகாண உள்ளூராட்சி
ஆணையாளர் மரியதாசன்
ஜெகூ அவர்களின்
அன்புத்தாய்
**திருமதி மேரி அஞ்சலா மரியதாசன்**
அவர்களின் மறைவையிட்டு
மிகுந்த துயரடைவதுடன்
அவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவித்துக்கொள்கின்றோம்.

தவிசாளர், செயலாளர், உறுப்பினர்கள்
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.
சாவகச்சேரிப் பிரதேசசபை கொடிகாமம்.

(இ/9310) (15/14)

## சுன்னாகத்தில் ஆடு திருடியவன் பொதுமக்களிடம் அகப்பட்டான்

வலி வடக்கு மே 31

வீட்டில் கட்டி வைத்திருந்த ஆட்டையும் குட்டியையும் களவாக திருடிச்சென்று விற்றவர் வகையாக பொது மக்களிடம் மாட்டிக் கொண்ட சம்பவம் சுன்னாகத்தில் இடம் பெற்றுள்ளது.

செவ்வாய்க்கிழமை இணுவில் மேற்கில் உள்ள வீட்டில் கட்டியிருந்த ஆட்டையும் குட்டியையும் களவாடியுள்ளான் திருடன்.

குட்டியை 2 ஆயிரம் ரூபாவுக்கு ஒருவருக்கு விற்றுவிட்டு மற்றைய ஆட்டை மற்றொருவருக்கு விற்பதற்காக சுன்னாகம் தெற்கிற்குப் பகுதிக்கு கொண்டு சென்ற வேளையில் சந்தேகம் கொண்ட பொது மக்கள் ஆட்டை கொண்டு சென்றவரை விசாரித்தபோது உண்மை வெளிவந்தது.

சம்பவத்தை சுன்னாகம் தெற்கு கிராம அலுவலர் மூலம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர் மக்கள். சுன்னாகம் பொலிஸார் குறிப்பிட்ட நபரை கைது செய்ததுடன் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

(10-86)

## தவறிவிட்டது

பண்ணை பஸ் தரிப்பிடத்துக்கும் ஓட்டுமடச்சந்திக்கும் இடையில் திமிரி அர்ஜீன் என்பவருடைய வாகன அனுமதிப்பத்திரம், 910804162V இலக்க தேசிய அடையாள அட்டை அடங்கிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

**தொடர்புகளுக்கு:-**
**0771242322, 0771944886**
*(சன்மானம் வழங்கப்படும்)*

(18815)(15-14)

## மரண அறிவித்தல்



*பொனிப்பாஸ் மாசில்லாராணி*

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பொனிப்பாஸ் மாசில்லாராணி நேற்று (30.05.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை-லூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை- விக்ரோறியா தம்பதியரின் அன்பு மருமகளும் பொனிப்பாசின் (HNB யாழ்ப்பாணம்) பாசமிகு மனைவியும் ஜீவப்பிரகாஸ் (லண்டன்), அனிற்றினா (செலான் வங்கி சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தாயும் மதுராவின் அன்பு மாமியும் தேவதிரவியம், செல்வராணி (கனடா), செல்வரத்தினம் (கனடா), சிறில் ( நோர்வே), செல்வம் (கொலண்ட), பற்றிக் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும், செபமாலை, ஆரோக்கியநாதர், வரப்பிரகாசம், மரிய தாஸ், அலிஸ், சுசிலா (இத்தாலி), காலஞ்சென்ற தீயோக்கிளேஸ் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (31.05.2012) வியாழக்கிழமை பி.ப 3 மணியளவில் மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் இடம்பெற்று நல்லடக்கத்திற்காக ஆனைக்கோட்டை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*4ஆம் கட்டை,*
*ஆனைக்கோட்டை.*
(18807)(15-14-06)
*தகவல்:*
*குடும்பத்தினர்*

## 31ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தம்பிமுத்து
ஸ்ரீபன் துரைசிங்கம் (சேனர்)

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்"
அருளப் 11:25

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றுக்காக இன்று (31.05.2012) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் குடும்பசகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம்: 23.02.1951
மறைவு: 01.05.2012

மல்வம்,
உடுவில்.
(P-253)(34.14)
குடும்பத்தினர்.

### நஞ்சருந்திய சிறுமி வைத்தியசாலையில்

பாடசாலைசெல்ல மறுத்த 11 வயதுச் சிறுமியை அவரது தாயார் கண்டித்து பாடசாலை செல்லும்படி கூறியதனால் அந்தச் சிறுமி புல் மருந்தை அருந்திய நிலையில் சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் புன்னாலைக்கட்டுவன் மேற்கில் நேற்று இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த பாடசாலை ஒன்றில் கல்விபயிலும் குறித்த மாணவியே இவ்வாறு நஞ்சு அருந்தியவராவார்.

(10-4)

### சட்டவிரோத மின்சாரம்; செலுத்தினர் அபராதம்

கொழும்பில் இருந்து வந்த மின்சார சபையின் விசேட பிரிவினரும் மற்றும் தெல்லிப்பழை பொலிஸாரும் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது திருட்டு மின்சாரம் பெற்ற இரண்டு பெண்கள் உட்படபத்துப்போ கைது செய்யப்பட்டனர்.

தெல்லிப்பழை பொலிஸ் பகுதிக்கு உட்பட்ட கட்டுவன், தெல்லிப்பழை, மல்லாகம், அளவெட்டி ஆகிய இடங்களில் தேடுதல் நடவடிக்கை பரவலாக கடந்த திங்கட் கிழமை இரவு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது கைது செய்யப்பட்டவாகள் தெல்லிப்பழை பொலிஸாரினால் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் செவ்வாய்க் கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது இவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து, குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப 8 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து 20 ஆயிரம் ரூபா வரை தண்டம் விதிக்கப்பட்டது. (10-86)

## யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் (வரையுள்ளது)

## பதவி வெற்றிடம்

### பொதுமுகாமையாளர்

மேற்படி பணிநிலைக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளத்திட்டம்
(66/2006 இன் படி) : 101/7 : 11450 - 14500 / 145 X 10 - 160 X 10

காலத்திற்கு காலம் சுற்று நிருபங்கள் மூலம் வழங்கப்படும் அனைத்து படிகளும் வழங்கப்படும்

**1. தகைமைகள்:**

அ) கூட்டுறவுச்சங்க ஊழியர் 08 ஆம் சம்பளத்திட்ட பதவி ஒன்றில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச்சங்க ஊழியர் 09 ஆம் சம்பளத்திட்ட முகாமை மட்ட அல்லது மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

**அல்லது**

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது இதற்கு சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட/கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமைப்பட்ட பதவி ஒன்றில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

**அல்லது**

இ) கூ.ச.ஊ (உயர்தரம்) சான்றிதழ்/க.பொ. த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கிகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைப்பட்ட பதவி ஒன்றில் 8 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

2. கணினி அறிவு இருத்தல் அவசியமாகும்
3. வயது : 18 தொடக்கம் 45 வரை
(சங்க பணியாளருக்கு வயது எல்லை பொருந்தாது)
4. விண்ணப்ப முடிவுதிகதி 14.06.2012
5. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சமாசத்தினால் கோரப்படும் ரொக்க ஆதன பிணைகள் சமர்ப்பிக்க வேண்டும்
6. சமாசத்தினால் வழங்கப்படும் விண்ணப்ப படிவங்களை ரூபா 10 செலுத்தி தலைமை காரியாலயத்தில் பெற்று விண்ணப்பத்தை சரிவர பூர்த்தி செய்து (14.06.2012) ஆம் திகதிக்கு முன் தலைவர், யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச்சங்களின் சமாசம், இல. 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், **"பொதுமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்"** என எழுதப்பட்டிருக்க வேண்டும்.
7. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பத்தினை சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும்.
8. விண்ணப்பத்துடன் தகைமைச்சான்றிதழுக்குரிய போட்டோ பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

தலைவர்

(சி/248)(6-8)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பழைய மாணவரும் நீண்டகால நலன்விரும்பியுமான Dr.மூ.பஞ்சலிங்கம் அவர்களின் அன்புத்துணைவியார்

**திருமதி விக்னேஸ்வரி- பஞ்சலிங்கம்**

நேற்று முன்தினம் (29.05.2012) செவ்வாய்க்கிழமை காலமானதையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/இணுவில் மத்திய கல்லூரிச்சமூகம்*

(18814)(15-14)

IRCON INTERNATIONAL LIMITED
(இந்திய அரசாங்கத்தின் ஒப்பந்தத்தின் கீழ்)
56 ஏ. புகையிரத வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா.
தொலைபேசி இலக்கம் : 024-2226784

அறிவித்தல் 02/2012

## நேர்முகப் பரீட்சை

IRCON INTERNATIONAL LIMITED இலங்கையில் புகையிரத திட்டங்களை அமுல்படுத்தி செயற்படுத்த வடபகுதி புகையிரப்பாதை (மதவாச்சி - தலை மன்னார், ஓமந்தை - பலாலி மற்றும் காங்கேசந்துறை) திட்டங்களுக்கு தரமான அனுபவம் வாய்ந்தவர்கள் கீழ்வரும் பதவிகளுக்காக எதிர்பார்க்கப்படுகின்றனர். இதில் ஆர்வமுள்ளவாகள் 02 மற்றும் 03 ஆம் திகதி ஜூன் மாதம் 2012 ல் மேல் குறிப்பிட்ட விலாசத்தில் உள்ள IRCON அலுவலகத்தில் நடைபெறுகின்ற சம்பந்தப்பட்ட பயிற்சி பரிசோதனைக்கும் சமூகமளிக்கலாம். ஒவ்வொரு பதவிகளுக்கும் அட்டவணையில் குறிப்பிட்ட தினத்தில் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும். மேலதிக விபரங்கள் மற்றும் விளக்கங்கள் பெற்றுக் கொள்ள M. Satyanarayana, கையடக்கத் தொலைபேசி 0759489601 மூலம் தொடர்பு கொள்ளவும்.

| தொடர். இல | வாகன / இயந்திர வகை | நேரமும் பரீட்சை நடைபெறும் திகதியும் | குறிப்பிட்ட துறையில் ஆகக் கூடிய வேலை அனுபவம் (வருடங்கள்) |
|---|---|---|---|
| 1 | Site Engineer/Civil | 10 A.M to 5 P.M on 2nd & 3rd June, 2012 | 5 |
| 2 | Jr. Engineer/Civil | | 5 |
| 3 | Surveyor | | 5 |
| 4 | CAD Operators | | 5 |
| 5 | Heavy Vehicle Operators (Motor Grader, Wheel Loader, Excavator etc.,) | | 5 |
| 6 | Quality Control Engineer | | 5 |
| 7 | Laboratory in-charge (Construction Material Testing) | | 5 |
| 8 | Laboratory Assistant (Construction Material Testing) | | 5 |

மேலதிக பொது முகாமையாளர் /PH
Ircon International Limited
நிறுவனத் துக்காகவும், சார்பாகவும்

(சி/604)(34.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்த்தத் தண்ணீரை பக்தருக்கு ஊற்றும் செயற்பாட்டுக்குத் தீர்வு காண வேண்டும்

## நல்லை ஆதீன முதல்வர் திருவிழாக் கூட்டத்தில் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே 31

நல்லூர் கந்தசுவாமி கோயில் தீர்த்தத் திருவிழாவின் போது தீர்த்தக் கேணியில் இறங்கி தண்ணீரை எடுத்து ஏனைய அடியார்களுக்கு ஊற்றும் நடவடிக்கைக்கு முடிவுகட்டப்பட வேண்டும் என்று நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

நல்லூர் கந்த சுவாமி ஆலய திருவிழா தொடர்பான கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ்.மாநகர முதல்வர் தலைமையில் மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

தீர்த்தக் கேணியில் இறங்குவதற்கு எவருக்கும் இந்த முறை அனுமதி வழங்கப்படமாட்டாது. கேணியைச் சுற்றி தடுப்பு வேலி போடப்படவுள்ளது.

கடந்த ஆண்டில் தீர்த்த உற்சவத்தின் போது பொலிஸார் கடமையில் இருந்தனர். அவர்களுக்கு எமது நடைமுறைகள் தெரியாது மொழியும் தெரிந்திருக்காததால் இளைஞர்கள் அவர்களின் மீதும் தண்ணீரை எடுத்து ஊற்றினர். அவர்களும் அதைச் சிரித்தபடி ஏற்றுக் கொண்டார்கள்.

இப்படியான நிகழ்வுகள் தவறானவை என்பதை அவர்களுக்கும் அறியத் தருவதுடன் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட இளைஞர்கள் அனுமதிக்கக்கூடாது.

திருவிழாக் காலங்களில் கோயில் வீதிகளை அண்மித்த குடியிருப்பாளர்களுக்கு அவர்களின் வாகனங்களைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை இந்த முறை பாதுகாப்பு பிரிவினரே வழங்கவுள்ளனர்.

இதுவரை காலமும் மாநகர சுகாதார வைத்திய அதிகாரியே குறித்த அனுமதிப் பத்திரத்தை வழங்கி வந்தார். சுகாதார சேவைகளைச் சீராகக் கவனிக்க வேண்டிய பொறுப்பு உள்ளதால் வாகனங்களுக்கான அனுமதியை வழங்குவதில் தங்களது முக்கிய கடமையான சுகாதார நடவடிக்கைகளைக் கவனிப்பது சிரமம் என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து குடியிருப்பாளர்களின் வாகனங்களின் அனுமதியை வழங்குவது தொடர்பான மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

### நல்லூர் ஆலயத் திருவிழாவில் பொலித்தீன் பாவனைக்குத் தடை

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த திருவிழாக் காலங்களில் ஆலயச் சூழலில் பொலித்தீன் பாவனைகள் முற்றாகத் தடை செய்யப்படும் என யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

திருவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். உணவகங்கள் உட்பட வர்த்தக நிலையங்கள் பொலித்தீன் பாவனைகளை நிறுத்துவதுடன் கச்சான் கடைகளில் கடதாசிப் பைகளே பயன்படுத்த வேண்டும்.

இந்த விடயத்தில் சுகாதார பரிசோதகர்களின் கண்காணிப்பு இறுக்கமாக இருக்கும் எனவும் இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# யாழ்.மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி கட்டுப்பாட்டில்

## சொல்வது மதுவரித் திணைக்களம்

யாழ்ப்பாணம், மே 31

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்று யாழ். மதுவரித் திணைக்களத்தின் மாவட்ட கட்டுப்பாட்டு அதிகாரி என். கிருபாகரன் தெரிவித்தார்.

கடந்த வருடம் தீவகம் மற்றும் கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் உள்ளிட்ட சில பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி செய்த நபர்கள் உற்பத்திப் பொருள்களுடன் கைது செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது அதிகூடிய தண்டப் பணம் அறவிடப்பட்டது.

இந்த நிலையில் இந்த வருடம் மதுவரித் திணைக்களம் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்பால் கசிப்பு உற்பத்தி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த வருடம் 4 மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள இந்தக் கசிப்பு உற்பத்தியை முற்றாகத் தடுப்பதற்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கிராமப் புறங்களில் சகிப்பு உற்பத்தியில் ஈடுபடும் நபர்களை இனங்கண்டால்உடனடியாகபொலிஸ் நிலையத்திலோ யாழ்.மதுவரித் திணைக்களத்திலோ முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

# மதுப் பிரியர்களின் செயலால் வர்த்தகருக்கு அபராதம்

தென்மராட்சி, மே 31

மதுப் பிரியர்களால் வீசப்பட்ட பியர் ரின்களால் வர்த்தகர் ஒருவர் நீதிமன்றில் 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த நேர்ந்தது.

சாவகச்சேரி 190ஆம் கட்டையில் உள்ள சுத்திகரிப்பு நிலைய உரிமையாளருக்கே இந்தக் கதி ஏற்பட்டது. சுத்திகரிப்பு நிலையத்துக்கு வருவோரால் கொண்டு வரப்படும் பியர் ரின்கள் பயன்படுத்தப்பட்ட பின்னர் அந்தப் பகுதியில் எறியப்படுகின்றன.

இந்த நிலையில் கடந்த வாரம் சுத்திகரிப்பு நிலையத்தைப் பரிசோதிக்கச் சென்ற டெங்கு ஒழிப்புக் குழுவினர் அங்கு பரவலாக பியர் வெற்று ரின்களைக் காண்டனர். இதை அடுத்து உரிமையாளர் மீது சாவகச்சேரி பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நிலைய உரிமையாளருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# மணல் திருட்டு சம்பவம் அரியாலையில் தொடர்கிறது

யாழ்ப்பாணம், மே 31

அரியாலை, கட்டுவயல் உட்பட சில பகுதிகளில் திருட்டுத்தனமாக மணல் அள்ளிச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அந்தப் பகுதி மக்கள் இது குறித்து விசனம் தெரிவிக்கின்றனர்.

இரவு இரண்டு மணியளவில் மணல் ஏற்றிக் கொண்டு செல்லும் உழவு இயந்திரங்களைக் காணக்கூடியதாக உள்ளது என்றும் இந்த வாகனங்களுக்கு முன்பாக பாதுகாப்பு வழங்குவது போன்று மோட்டார் சைக்கிள்கள் செல்கின்றன எனவும் மக்கள் கூறுகின்றனர்.

தற்போது மணல் ஏற்றுவதற்கான அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் மணல் திருடர்கள் காணிச் சொந்தக்காரர்களுக்குத் தெரியாமலேயே மணலை அள்ளிச் செல்கின்றனர்.

இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேள்வி எழுப்புகின்றனர். (ம-7)

## கவனிப்பாரின்றி சபாபதிப்பிள்ளை வீதி

சுன்னாகம்,மே.31

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாக உள்ளது.இதனால் இவ்வீதி வழியாகப் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம், புற்றுநோயாளர் காப்பகம், கிறிஸ்தவ இறையியற் கல்லூரி, மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம் ஆகிய நிறுவனங்கள் இவ்வீதியில் அமைந்துள்ளன. சபாபதிப்பிள்ளை நலன்புரி குடியிருப்பு, கண்ணகி குடியிருப்பு ஆகிய இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களும் அமைந்துள்ளன.

வீதியின் பல இடங்களில் கற்கள் முழுமையாக இல்லாமல் மண் தரையாகக் காட்சியளிப்பதையும் காண முடிகின்றது.வலி.தெற்கு பிரதேச சபையின் பரிபாலனத்தின் கீழ் இந்த வீதிகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-38)



சுன்னாகம் கந்தரோடை இந்து மயானத்தை படையினரும் பிரதேச சபை ஊழியர்களும் இணைந்த சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளனர். கடந்த பல வருடங்களாக இந்த மயானம் துப்புரவு செய்யப்படாத நிலையில் பொது மக்கள் சிரமங்களுக்கும் கஷ்டங்களுக்கும் ஆளாகி வந்தார்கள். தற்போது படையினரும் வலி. தெற்குப் பிரதேச சபை ஊழியர்களும் இணைந்து சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளமையால் மயானத்துக்கு இறுதிக் கிரியைகள் செய்யச் செல்பவர்கள் பெரும் நிம்மதி அடைந்துள்ளனர். (ம-86)

# கீரிமலை- பன்னாலை வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்,மே.31

நீண்ட காலமாகத் திருத்தப்படாதிருந்த கீரிமலை-பன்னாலை வீதி தாரிட்டுத் திருத்தப்பட்டு வருகின்றது. மக்கள் கடந்த வருட ஆரம்பத்தில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த வீதியின் ஒரு பகுதி வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் திருத்தப்பட்டு இருந்தது.

மிகுதிப் பகுதி திருத்தப்படாத நிலையில் வாகனங்களில் பயணிப்பவர்கள் பெரிதும் சிரமப்பட நேர்ந்தது. வீதி சீரின்மையைக் காரணம் காட்டி பஸ் சேவையும் ஒழுங்கற்றே இடம் பெற்றது.

இந்த நிலையில் பல தரப்பினரும் இந்த வீதியைத் திருத்தித் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

தற்போது கீரிமலை வரை இவ்வீதி முழுமையாகப் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இந்த வீதி புனரமைக்கப்பட்ட பின்னர் 768 மற்றும் 795 பஸ் சேவைகள் சீரடையும் என நம்புவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ம-38)

## முழுமைபெறாத வீதி வேலைகள்

யாழ்ப்பாணம், மே 31

புறநெகும திட்டத்தின் கீழ் வேலணை இராசையா வீதி- புங்குடுதீவு சங்கத்தார் கேணி வீதி வேலைகள் முழுமைபெறவில்லை.

நெல்சிப் என்ற பெரிய நிதியில் இந்த வீதிப் பணிகள் இடம்பெற்றபோதும் வேலைகள் முழுமை பெறவில்லை என்று கிராம அபிவிருத்திச் சங்கம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

2011 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் 2012 மே மாதம் முடிவடைந்துள்ள நிலையில் வேலைகள் திருப்திகரமானதாக இடம்பெறவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

# சுன்னாகம் நவீன மீன் சந்தை நாளை வெள்ளிக்கிழமை திறப்பு

வலி வடக்கு, மே 31

வலி. தெற்கு சுன்னாகம் பிரதேச சபையால் நவீன சந்தையாக மாற்றப்பட்ட மீன் சந்தை நாளை வெள்ளிக்கிழமை வலி. தெற்குப் பிரதேச சபைத் தலைவர் தியாகராசா பிரகாஷினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

சபையின் நிதியில் இருந்து 30 லட்சம் ரூபா செலவில் வடிவமைக்கப்பட்ட இந்த சந்தை யாழ்ப்பாணத்தில் புதிய அமைப்பில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த சந்தையில் மீன், கருவாடு மற்றும் ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கோழி இறைச்சிக் கடைகளும் உள்ளன.

வியாபாரிகளுக்கும் பொது மக்களுக்கும் வேண்டிய பல வசதிகளைக் கொண்டு இந்தச் சந்தை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

# உல்லாசப் பயணிகளுக்காக நவீன மயமாகிறது சாட்டி

சாட்டி கடற்கரை பிரதேசம் உல்லாசப் பயணிகளுக்காக நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக உல்லாசப் பயணிகளுக்கான சிறு சிறு நவீன குடில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது உல்லாசப் பயணிகளைக் கவருவதற்கான இரு நவீன கப்பல் வடிவிலான குளியல் அறை மற்றும் அடை மாற்றும் இடம் என்பன இருபாலாருக்கும் பிரத்தியேகமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. வேலணை பிரதேச சபை தலைவர் சி.சிவராசா இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

போர் முடிந்த நிலையில் தற்போது தென்பகுதியில் இருந்தும் பிற மாவட்டங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வேலணை சாட்டி வெள்ளைக் கடற்கரை, சாட்டிக்கடற்கரை ஆகியவற்றுக்குப் பெரும் எண்ணிக்கையான மக்கள் குவிந்து வருகின்றனர்.

இந்த மக்களின் பொழுது போக்குக்காகச் சாட்டிக் கடற்கரைப் பகுதி நவீன மயப்படுத்தப்பட்டுள்ளது.

இன்னும் இரு வாரங்களில் சாட்டி கடற்கரை பிரதேச புதிய அமைவிடங்கள் மக்கள் பாவனைக்கு விடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, புங்குடுதீவு மடத்து வெளியில் உல்லாச பயணிகள் இளைப்பாற்று மண்டபம் நவீன வடிவில் அமைக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கட்டடம் வருட நடுப்பகுதியில் திறந்து வைக்கப்படும் என்று மேலும் தெரிவித்தார். (ம-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனி ஈழக் கோரிக்கையுடன் கருணாநிதி பட்டினி கிடப்பாரா?

சென்னை, மே 31

தமிழீழம் பற்றிப் பேசி வரும் தி.மு.க. தலைவர் கருணாநிதி முடிந்தால் தனி ஈழம் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து டில்லியில் உண்ணாவிரதம் இருக்கட்டும் பார்க்கலாம் - என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் சவால் விடுத்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேட்டியின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கருணாநிதி எப்போதும் எதிர்க்கட்சியாக இருக்கும் போது தமிழ் ஈழத்தைப் பற்றிப் பேசுவார். 18 நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துள்ள கருணாநிதி துணிச்சல் இருந்தால் டில்லிக்குச் சென்று உண்ணாவிரதம் இருக்கட்டும்.

இலங்கைத் தமிழ் மக்களுக்காக தொடர்ந்து குரல் கொடுத்துவரும் வைகோ, சீமான், நெடுமாறன் ஆகியோரை விஞ்சும் வகையில் ஈழம் கிடைத்த பின்பே உயிர்



துறக்கப்போவதாகக் கூறியுள்ள கருணாநிதியை நோக்கி இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார் ராமதாஸ்.

# நித்தியானந்தா சென்ற கார் மீது செருப்பு வீச்சு

கஞ்சனூர், சுக்கிரன் கோயிலுக்குச் சென்ற நித்தியானந்தாவின் கார் மீது எதிர்ப்பாளர்கள் செருப்பு வீச்சு நடத்தியுள்ளனர்.

தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் அருகே உள்ள கஞ்சனூர் சுக்கிரன் கோயிலுக்கு நேற்று முன்தினம் மதுரை ஆதினம் அருணகிரிநாதரும், இளைய ஆதினம் நித்தியாணந்தாவும் சென்றனர். பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு இடையில் பெண் சீடர்கள் 100 பேரும், ஆண் சீடர்கள் 70 பேரும் அவர்களோடு இரவு கஞ்சனூர் விருந்தினர் மாளிகையில் தங்கினர்.

நேற்றுக் காலை கோயில் பிரகாரத்தை மௌன ஊர்வலமாகச் சென்று சுற்றுவது என்று நித்தியானந்தா தரப்பு முடிவு செய்தது. ஆனால் பொலிஸார் அதற்கு அனுமதி கொடுக்க மறுத்துவிட்டனர். பின்னர் பொலிஸ் வாகனங்களின் பாதுகாப்புடன் நடுவே இருந்த ஆதீனங்கள் 5 நிமிடங்களில் சுற்றி வந்தனர்.

சலசலப்பு கிராமத்திற்குள் அதிகரித்து வந்த நிலையில், நித்தியானந்தா மற்றும் அருணகிரிநாதர் ஆகியோர் மதுரைக்குப் புறப்பட்டனர். புறப்பட்டுச் செல்லும் வழியில் கோயில் வாசலில் நின்ற எதிர்ப்பாளர்கள் நித்தியானந்தா கார் மீது செருப்பு வீசினர்.

அதைப்பார்த்த சீடர் இருவர், ''யார் காரில் செருப்பை வீசினாய்?'' என்று கேட்டுக்கொண்டு ஆவேசத்துடன் வர, சுற்றி நின்ற எதிர்ப்பாளர்கள், அந்த சீடரை வளைத்துப்பிடித்து அடித்து உதைத்தனர்.

இதைப்பார்த்த பொலிஸார் எதிர்ப்பாளர்களை அடித்து விரட்டினர். எதிர்ப்பாளர்கள் சிலரை பொலிஸார் வானில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

# மூத்த பத்திரிகையாளர் சோலை காலமானார்



மூத்த பத்திரிகையாளரும், சிறந்த எழுத்தாளரும், முற்போக்கு சிந்தனையாளருமான சோலை என்ற கே.சோமசுந்தரம் (வயது 82) சென்னை பெருங்களத்தூரில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு காலமானார்.

சோலையின் சொந்த ஊர் திண்டுக்கல் மாவட்டம் அய்யம்பாளையம். தொடக்க காலங்களில் ஜெயப்பிரகாஷ் நாராயணன் இயக்கம், வினோபா இயக்கங்களில் பங்கேற்றவர். ஏராளமான புத்தகங்களை எழுதியுள்ளார். பல வார மற்றும் நாளிதழ்களில் தொடர்கள், கட்டுரைகள் எழுதியுள்ளார். சின்னக்குத் தூசி போல அரசியல் விமர் சன கட்டுரைகள் எழுதுவதில் எஞ்சியிருந்த முன்னணி எழுத்தாளர் இவர் ஒருவர்தான்.

எம்.ஜி.ஆர். அரசியலுக்கு வந்த காலகட்டத்தில் அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். கடந்த 2 மாதகாலமாக உடல் நல கோளாறு காரணமாக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவர் காலமானார்.

# ஆட்சியிலிருந்து வெளியேறுவோம் டில்லிக்கு கருணாநிதி எச்சரிக்கை



சென்னை, மே.31

பெற்றோல் விலை உயர்வைக் குறைக்காவிட்டால் மத்திய அரசிலிருந்து வெளியேறுவோம் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பெற்றோல் விலை உயர்வைக் கண்டித்து தமிழகம் முழுவதும் தி.மு.க. சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு கருணாநிதி தலைமை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தின்போது தொண்டர்களிடையே பேசிய கருணாநிதி தெரிவித்ததாவது:-

கடந்த காலத்திலும் மத்தியில் கூட்டணி அரசில் தி.மு.க. பங்கேற்றுள்ளது. கூட்டணி அரசில் பங்கேற்றாலும் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதில் தயக்கம் காட்டியதில்லை. முடிந்தவரை யில் மத்திய அரசை இணங்கவைக்க முயற்சி செய் வோம். மத்திய அரசு உடன்படவில்லை என்றால் எமது கொள்கைகளையும், கோட்பாடுகளையும் காப்பதற்காக அரசிலிருந்து வெளியேறுவோம்.

மேலும் சாதாரண மனிதனை பாதிக்காத வகையில் மத்திய அரசும், மாநில அரசும் பெற்றோல் மீதான வரியைக் குறைக்க வேண்டும்- என்றார்.

# மீனவர்கள் மீண்டும் கடலுக்கு

இராமேஸ்வரம், மே31

மீன்பிடித்தடைக் காலம் நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்ததையடுத்து மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர்.

மீன்களின் இனப்பெருக்கத்துக்காக தமிழகத்தில் கடந்த 45 நாள்களாக மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனால், மீனவர்கள் விசைப்படகு மற்றும் வலைகளைச் சரி செய்வது போன்ற வேலைகளைச் செய்து வந்தனர். இந்த நிலையில், நேற்று முன்தினம் மாலையுடன் தடை காலம் முடிந்தது. இதனால், நேற்று முன்தினம் நள்ளிரவிலேயே இராமேஸ்வரம், மண்டபம், பாம்பன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் விசைப்படகுகளில் மீன் பிடிப்பதற்காக கடலுக்குச் சென்றனர்.

இதேவேளை 45 நாள்கள் தடை காலத்திற்கு பின்னர் கடலுக்குச் செல்வதால் மீன்கள் அதிகம் கிடைக்க வாய்ப்பு உள்ளது என்று மீன வர்கள் தெரிவித்தனர்.

# ஊழல் முறைப்பாடு நிரூபிக்கப்பட்டால் அரசியல் இருந்து விலகத் தயார்

## மன்மோகன் சிங் அறிவிப்பு



தன்மீது அன்னா ஹசாரே கூறியுள்ள ஊழல் முறைப்பாடு நிரூபிக்கப்பட்டால், தான் பொதுவாழ்விலிருந்து விலகத் தயார் என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகச் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்னா ஹசாரே தன் மீது கூறி வரும் ஊழல் குற்றச்சாட்டுகள் முழுவதும் ஆதாரம் அற்றவை. அப்படி என் மீது முறைப்பாடு நிரூபிக்கப்பட்டால் நான் பொது வாழ்விலிருந்து விலகத் தயாராக இருக்கிறேன்.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் குற்றவாளிகள் என அன்னா ஹசாரே குழு கூறி வருவது கண்டிக்கதக்கது. என் மீதும், என்னுடைய 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் அன்னா குழு தேவையில்லா குற்றச்சாட்டுகள் கூறி வருவது வருத்தம் அளிக்கிறது-என்றார்.

# காஷ்மீரில் இராணுவம் மீது துப்பாக்கிச் சூடு

ஜம்மு-காஷ்மீரில் பாதுகாப்புப் படை வீரர்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 7 வீரர்கள் படுகாயமடைந்தனர்.

காஷ்மீர் மாநிலம் கன்யார் அருகே பாதுகாப்புப் படை வீரர்கள் தங்கள் முகாமில் இருந்து பாதுகாப்புப் பணிக்குச் சென்று கொண்டிருந்தனர்.

விக்டரி கிராசிங் பகுதியில் வீரர்கள் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த 2 தீவிரவாதிகள் அவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதில் குண்டுகள் பாய்ந்து 7 இராணுவத்தினர் படுகாயம் அடைந்தனர்.

கண் இமைக்கும் நேரத்துக்குள் இந்த திடீர் தாக்குதலை நடத்தி விட்டு இரு தீவிரவாதிகளும் தப்பிச் சென்றுவிட்டனர். ரத்த வெள்ளத்தில் கிடந்த 7 இராணுவத்தினரும் மீட்கப்பட்டு சவுராவில் உள்ள ஸ்கிம்ஸ் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

மார்பில் குண்டு பாய்ந்த ஒரு படைவீரரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. மற்ற 6 படைனர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து 2 தீவிரவாதிகளையும் பிடிக்க கன்யார் பகுதிக்கு அதிகமான இராணுவத்தினர் சென்றுள்ளனர்.




# சட்டசபைக்குள் அத்துமீறி நுழைந்த போலி எம்.எல்.ஏ.

புனே, மே31

உத்தரப்பிரதேச சட்ட சபையின் இன்றைய கூட்டத்தில், சட்டசபை உறுப்பினர்போல் நடித்து சட்ட பேரவைக் கட்டடமான விதான் சபாவுக்குள் நுழைந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப்பெண் தன்னை கான்பூர் மாவட்டத்திலுள்ள கித்வைநகர் தொகுதியின் சட்டசபை உறுப்பினர் எனக் கூறிக்கொண்டு, சட்ட சபையில் நுழைந்துள்ளார்.

அப்போது அவரைப் பார்த்து சந்தேகமடைந்த சட்டசபை பாதுகாவலர் ஒருவர் அந்தப் பெண்ணின் அடையாள அட்டை குறித்து விசாரித்தபோது, சரிதா ஜெய்ஸ்வால் என்னும் அந்தப்பெண் மாட்டிக் கொண்டார்.

பின்னர் சபைக் காவலர்கள் சரிதாவை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அவர் எதற்காக சட்ட [illegible] கின்றனர்.

# ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி ஜூன் 13 இல் வெளியாகும்

டில்லி, மே31

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி எதிர்வரும் ஜூன் 13 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி பிரதீபா பாட்டேலின் பதவிக்காலம் ஜூலை 24 ஆம் திகதியுடன் முடிவடைவதால், அடுத்த ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதில் அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன. ஜனாதிபதித் தேர்தலுக்கான பணிகளை தேர்தல் ஆணையம் ஆரம்பித்து விட்டாலும், தேர்தல் திகதி இது வரை அறிவிக்கப்படாமலேயே உள்ளது. இந்த நிலையில் நேற்றுப் பேசிய தேர்தல் ஆணையத்தின் மூத்த அதிகாரி ஒருவர், ஜனாதிபதித் தேர்தல் திகதி பற்றிய இறுதி அறிவிப்பு ஜூன் 13 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்பாகவோ வெளியிடப்படலாம் - என்றார்.

தங்கள் கட்சி சார்பில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை ஆளும் காங்கிரஸ் கட்சியோ, பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாவோ இது வரை அறிவிக்கவில்லை. இதற்கிடையே அ.தி.மு.க., பிஜு ஜனதா தளம் ஆகிய இரு கட்சிகளும் சேர்ந்து நாடாளுமன்ற முன்னாள் சபாநாயகரும், பழங்குடி இனத் தலைவருமான பி.ஏ. சங்மாவை வேட்பாளராக அறிவித்துள்ளன.

காங்கிரஸ் சார்பில் நிதி யமைச்சர் பிரணாப் முகர்ஜி அல்லது தற்போதைய துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி ஜனாதிபதி வேட் பாளராக அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. சமாஜ்வாடி, பகுஜன் சமாஜ், திரிணாமுல் காங்கிரஸ் [illegible] மாநில கட்சி களும் ஜனாதிபதித் தேர்த[illegible]ரை ஆதரிப்பது என் பது குறித்து தீவிரமாக ஆலோசித்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலியில் நிலநடுக்கம்

## நொருங்கின வீடுகள்; 15 பேர் உயிரிழப்பு

ரோம், மே 31

இத்தாலியின் வடக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் 15 பேர் உயிரிழந்தனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது ரிச்டர் அளவுகளில் 5.8 அலகுகளாகப் பதிவானது. இதே பகுதியில் கடந்த 9 நாள்களுக்கு முன் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 6 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் பலர் வீடுகளை இழந்து கூடாரங்களில் வசிக்கின்றனர்.

உள்ளூர் நேரப்படி நேற்றுமுன்தினம் காலை 7 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. பார்மா நகரின் கிழக்குப் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தின் தாக்கம் இத்தாலியின் வடக்கு மற்றும் மத்திய இத்தாலி பகுதியில் உணரப்பட்டது. கடந்த மே 20ஆம் திகதி ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பல கட்டடங்கள் வலுவிழந்து காணப்பட்டன. இந்த நிலையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நில நடுக்கம் காரணமாக அவை மேலும் பாதிப்புக்குள்ளாயின.

பைசா நகரத்து சாய்ந்த கோபுரம் உள்ள பகுதியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்குள்ள அலுவலகங்கள் வேறிடத்துக்கு மாற்றப்பட்டன. பிரான்ஸ் எல்லையை ஒட்டி அமைந்துள்ள மிலன், பொலோங்கா, அஸாடா பள்ளத்தாக்கு ஆகிய பகுதிகளிலும் நில நடுக்கத்தின் தாக்கம் உணரப்பட்டது. இந்தப் பகுதிகளில் வசித்த 7,000த்துக்கும் அதிகமான மக்கள் நில நடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து இன்னமும் மீளவில்லை. இதனால் அவர்கள் வீடுகளை விட்டு கூடாரங்களில் வசிக்கின்றனர்.



இது ரிச்டர் அளவுகளில் 5.8 அலகுகளாகப் பதிவானது. இதே பகுதியில் கடந்த 9 நாள்களுக்கு முன் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 6பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சியாச்சினில் புதையுண்டவர்கள் தியாகிகளாக அறிவிப்பு

இஸ்லாமாபாத், மே 31

சியாச்சின் மலையில், பனிப் பாறையில் சிக்கி கொல்லப்பட்ட பாகிஸ்தான் இராணுவத்தினர், தியாகிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் உள்ள சியாச்சின் பனிமலையில், ஜியாரி என்ற இடத்தில், கடந்த மாதம் 7ஆம் திகதி, ஆயிரம் மீற்றர் நீளமும், 25 மீற்றருக்கும் அதிகமான அகலமும் கொண்ட பனிப் பாறை சரிந்து, பாகிஸ்தான் இராணுவத்தினர் முகாம் மீது விழுந்தது. இந்தச் சம்பவத்தில், 124 இராணுவத்தினர் உட்பட 139 பேர் பனிப் பாறைச் சரிவில் புதையுண்டனர். புதையுண்ட இராணுவத்தினர் மீது 80 அடி உயரத்துக்கு, பனித்துகள்கள் குவிந்தன.

மீட்புப் பணிகள் இன்னும் தொடர்கின்றன. சில இராணுவத்தினரின் சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டன. புதையுண்டவர்கள், இனியும் உயிர் பிழைத்திருப்பதற்கு வாய்ப்பில்லை என்பதால், அவர்களை, தியாகிகளாக அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

## ஜனாதிபதி வேட்பாளராக மிட் ரோம்னி

வாஷிங்டன், மே 31

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு கட்சியின் வேட்பாளராக போட்டியிட, மிட் ரோம்னி தேர்வு செய்யப்பட்டார். அவருக்கு 1,144 பிரதிநிதிகள் ஆதரவு தெரிவித்ததால் ரோம்னி தேர்வு செய்யப்பட்டார்.

அவரின் கட்சி சார்பாகப் போட்டியிட்ட ஏனைய வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகிக் கொண்டு தமது ஆதரவையும் மிட் ரோம்னிக்கு அளித்துள்ளனர்.

## மரண தண்டனை பாணியில் சிரியப் படுகொலைகள்

கடந்த வாரம் சிரியாவின் ஹூலா நகரில் அந்த நாட்டு அரச படைகள் மேற் கொண்ட தாக்குதல்களில் உயிரிழந்த 108 பேரில் பெரும்பாலானவர்கள் மரண தண்டனை நிறைவேற்றும் பாணியில் கொல்லப்பட்டுள்ளனர் என ஐ.நா கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஹூலாவில் நடந்த கொலைகள் ஒரு நெஞ்சை உறைய வைக்கும் கொடூரம் என ஐ.நா. வர்ணித்துள்ளது.

ஹூலாவில் கொல்லப்பட்டவர்களில் 85 பேரின் சடலங்களை ஐ.நா. கண்காணிப்பாளர்கள் பார்த்தனர். அவர்களில் 32 பேர் பத்து வயதுக்கும் குறைவான வயதுடைய சிறார்கள் என ஐ.நா. கூறுகிறது.

ஹூலாவில் நடந்த சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைந்த பட்சம் 108 என்றும் அவர்களில் 49 பேர் சிறார்கள் என்றும் 34 பேர் பெண்கள் என்றும் கூறப்படுகிறது.

கொல்லப்பட்டவர்களில் இருபதுக்கும் குறைவானவர்களே டாங்கி மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் இறந்திருக்கிறார்கள் என்று ஐ.நா. மனித உரிமைகள் நிறுவனத்தைச் சேர்ந்த ரூபர்ட் கோல்வில் கூறுகிறார்.


"இந்தக் கொலைகளில் பெரும்பான்மையானவை சொல்லப்போனால் குறைந்த ஓர் எண்ணிக்கையைத் தவிர்த்து மற்ற எல்லாமுமே, கேள்வி இன்றி தண்டனை நிறை வேற்றும் பாணியில் கொல்லப்பட்டுள்ளனர் என்றே தெரிகிறது. ஒரு குடும்பத்தில் உள்ள ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவருமே கொல்லப்பட்டுள்ளனர் என்று தெளிவாகத் தெரிகிறது.

இறந்தவர்களில் மிக அதிகமானோர் குழந்தைகளாக இருப்பதற்கு இது தான் காரணம். வீடு வீடாகப் புகுந்து உள்ளிருந்த ஆள்கள் அனைவரையும் சுட்டுக் கொன்றனர்" என்றார் ரூபர்ட் கோல்வில்.

### 160 சிறுமிகள் மயக்க நிலையில்

ஆப்கானிஸ்தானில் தகார்த் நகரிலுள்ள தனியார் பெண்கள் பாடசாலையில் கல்வி பயிலும் 160 சிறுமிகள் நஞ்சு கலந்த குடிதண்ணீரை அருந்தி மயக்கமுற்ற நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

10 தொடக்கம் 20 வரையான வயதுடைய இந்தப் பெண்கள் தலையிடி, வாந்தி, மயக்கம் போன்ற நோய்களால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பெண்கள் கல்வி கற்பது நிராகரிக்கும் தலிபான் அமைப்புகளே மாணவர்களின் குடிதண்ணீரில் நஞ்சு கலந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.



கென்யாவின் தலைநகர் நைறோபியில் உள்ள வணிக வளாகம் ஒன்றில் ஏற்பட்ட விபத்தினால் காயமுற்ற யுவதியை பணியாளர்கள் மீட்கின்றனர்.

## அல்குவைதாவின் முக்கிய உறுப்பினர் சாவு

ஆப்கானிஸ்தானில் கடந்தவார இறுதியில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் சிரேஷ்ட அல்குவைதா இயக்க உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

சவுதி அரேபியாவைச் சேர்ந்த ஷஹர் அல் தைய்பி என்ற உறுப்பினரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார் என நேட்டோ அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானிலுள்ள இரண்டாவது சிரேஷ்ட அதிகாரியாக ஷஹர் அல் தைய்பி இருந்தார் என பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

ஆப்கன் மற்றும் நேட்டோ படையினருக்கு எதிராகத் தாக்குதல்கள் மற்றும் வெளிநாட்டிலுள்ள ஆயுததாரிகளுக்கு நேரடி கட்டளைகளை குறித்த நபர் வழங்கியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் தலிபான்கள் இந்தத் தகவலை நிராகரித்துள்ளதுடன், மூன்று மாதங்களுக்கு முன்னர் அல் தைய்பி குறித்த பிரதேசத்தில் இருந்து வெளியேறி விட்டார் என்று கூறுகின்றனர்.

### ஆஸியில் இருந்து சிரிய இராஜதந்திரிகள் வெளியேற்றம்

தமது நாட்டிலுள்ள சிரிய இராஜதந்திரிகளை அடுத்த 72 மணித்தியாலங்களில் வெளியேறுமாறு ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பணித்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. ஏனைய சர்வதேச நாடுகளும் இதே போன்ற நடவடிக்கையை மேற்கொள்ளுமென எதிர்பார்ப்பதாக ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஹூலா நகரில் சிரிய அரச படையினரின் தாக்குதலில் 108 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில் ஆஸ்திரேலியா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இதனையடுத்து வன்முறைகளை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர மேலதிக நடவடிக்கைகளை பஷார் அல் அசாட் மேற்கொள்ள வேண்டுமென்ற சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் அதிகரித் துள்ளன.

## அடுத்த அணு ஏவுகணையை பரிசோதித்தது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத், மே 31

அணு ஆயுதங்களை எடுத்துச் சென்று இலக்குகளைத் தாக்கி அழிக்கக்கூடிய ஹத்திப்-9 ரக ஏவுகணையை பாகிஸ்தான் கடந்த செவ்வாய்க்கிழமை பரிசோதித்தது. குறுகிய தூர இலக்குகளை அதாவது 60 கி.மீ. தூரத்துக்குச் சென்று தாக்கும் திறன் கொண்டதாக இந்த ஏவுகணை வடிவமைக்கப்பட்டுள்ளது.

முழுவதும் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட இந்த ஏவுகணைச் சோதனை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது என பாகிஸ்தான் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.


தரையிலிருந்து தரை இலக்கைத் தாக்கி அழிக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அணு குண்டுகளை ஏந்திச் சென்று தாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட இந்த ஏவுகணை மிகத் துல்லியமாக நிர்ணயிக்கப்பட்ட இலக்கைத் தாக்கி அழித்ததாகக் கூறப்படுகிறது.

இருப்பினும் எந்த இடத்திலிருந்து இந்தச் சோதனை எத்தனை மணிக்கு நடத்தப்பட்டது என்ற விவரத்தை பாகிஸ்தான் இராணுவம் தெரிவிக்க மறுத்துவிட்டது.

கடந்த ஆண்டு ஏப்ரலில் முதல் முறையாக ஹத்திப் ஏவுகணை சோதித்துப் பார்க்கப்பட்டது. இந்தியாவின் ஏவுகணைச் சோதனைகளுக்குப் பதிலடிதரும் வகையில் குறுகிய தூர இலக்குகளை தாக்கி அழிக்கும் வகையில் ஹத்திப் ரக ஏவுகணை வடிவமைக்கப் [illegible]

நடமாடும் வாகனம் மூலம் இந்த ஏவுகணை ஏவப்பட்டதாகத் தெரிகிறது. ஒரு இலக்கை நோக்கி செல்லும் இந்த ஏவுகணை எதிரி நாட்டு தாக்குதலிலிருந்து தப்பிப்பதற்காக உடனடியாக வேறு இலக்கிற்கு பயணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது.



ஓய்வுபெற்ற ராணுவ உயர் அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் காலித் கித்வாய் இந்த ஏவுகணை சோதனையை மேற்பார்வையிட்டார். அமைதிக்கான சோதனை இது. அதேசமயம் எத்தகைய சவாலையும் சமாளிக்கும் திறன் பெற்றதாக பாகிஸ்தான் விளங்குகிறது என்பதை பறைசாற்றும் வகையில் இந்த ஏவுகணையின் செயல்பாடு இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நெஸ்காம் தலைவர் இர்ஃபான் பர்னி, இராணுவத்தின் உத்திகள் வகுக்கும் பிரிவின் கொமாண்டர் லெப்டினன்ட் ஜெனரல் தாரிக் நதீம் கிலானி, உத்திகள் வகுக்கும் பிரிவின் மூத்த அதிகாரிகள், விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள் உள்ளிட்டோர் ஏவுகணைச் சோதனையைப் பார்வையிட்டனர்.


ஏவுகணை வெற்றிகரமாக ஏவப்பட்டது குறித்து ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி, பிரதமர் யூசுப் ரஸா கிலானி மற்றும் முப்படைத் தளபதிகள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

கடந்த சில வாரங்களாக பலவித ஏவுகணைச் சோதனைகளைப் பாகிஸ்தான் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி ஹத்திப்-4 ரக ஏவுகணை சோதித்துப் பார்க்கப்பட்டது. இது 1,000 கி.மீ. தூரம் சென்று தாக்கும் திறன் பெற்றது. மே 10ஆம் திகதி சோதித்துப் பார்க்கப்பட்ட ஹத்திப்-3 ரக ஏவுகணை 290 கி.மீ. தூரம் சென்று தாக்கும் திறன் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு இனப்பிரிவினரிடையே நைஜீரியாவில் கடும் மோதல்



நைஜீரியா, மே31

நைஜீரியாவில் இரு பிரிவினரிடையே நேற்று முன்தினம் நடந்த வன்முறையில் 45 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். இதில் கிராம தலைவர் மற்றும் நான்கு பொலிஸார் கொல்லப்பட்டனர் என அந்த நாட்டு செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. நைஜீரியாவின் தென்கிழக்குப் பகுதியில் நிதன் ஓபு மற்றும் இக்பின்யா இரு பிரிவினர்களிடையே வன்முறை ஏற்பட்டதில் வீடுகள் மற்றும் தேவாலயங்கள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன. மேலும் அங்குள்ள தலைமை காவல் நிலையமும் இடிக்கப்பட்டது. தரைமட்டமான வீடுகளில் 2 ஆயிரம் பேருக்கு மேல் வசித்து வந்தனர். கலவரத்துக்கு முக்கிய காரணம் இரு மாகாணங்களின் எல்லைப் பிரச்சினையே என்பது குறிப்பிடத்தக்கது.

# கண்ணீரால் தயாரிக்கப்பட்ட உப்பு




மனிதர்களின் கண்ணீரில் தயாரிக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படும் பல வகையான உப்பு லண்டனில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மனிதர்களிடம் ஒவ்வொரு உணர்வுகளின் போது ஏற்படும் கண்ணீரின் வகைகளினால் இந்த உப்பு தயாரிக்கப்பட்டுள்ளது என லண்டன் ஹொக்டன் தெரு விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

துக்கத்தினால் ஏற்படும் கண்ணீர், தும்மும் போது ஏற்படும் கண்ணீர், வெங்காயம் வெட்டும்போது ஏற்படும் கண்ணீர், சிரிப்பின் போது ஏற்படும் கண்ணீர், கோபத்தின் போது ஏற்படும் கண்ணீர் என ஒவ்வொரு உணர்வுகளின் போது ஏற்படும் கண்ணீர் மூலம் சுமார் 7 ஸ்ரேலிங் பவுண் பெறுமதியான உப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு உப்பும் மாறுபட்ட சுவை கொண்டது என நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மனிதர்களின் கண்ணீரிலிருந்து உப்பு உற்பத்தி செய்யப்படுவது நூற்றாண்டுப் பழைமையான கலை என அவர் தெரிவித்துள்ளார்.

# பிலிப்பைன்ஸின் உச்ச நீதிமன்ற நீதிபதி பதவி நீக்கம்

மணிலா,மே 31

பிலிப்பைன்ஸின் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஊழல் புரிந்துள்ளார் என அந்த நாட்டின் நாடாளுமன்றம் கண்டறிந்துள்ளது.

இதையடுத்து அவர் தலைமை நீதிபதி பொறுப்பிலிருந்து நீக்கப்பட வழி ஏற்பட்டுள்ளது.

அந்த நாட்டின் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருக்கும் ரெனாட்டோ கொரோனா, தனக்குப் பல மில்லியன் டொலர்கள் அளவுக்குச் சொத்துக்கள் உள்ளன என்பதை வெளியிடாமல் இருந்ததன் மூலம் அரசியல் சாசனத்தை மீறியுள்ளார் என்று செனட் சபையின் பெரும்பாலான உறுப்பினர்கள் கண்டறிந்தனர்.

நாட்டில் ஊழலை ஒழிப்பது தொடர்பில் ஜனாதிபதி பெனிக்னோ அக்கினோ எடுத்து வரும் நடவடிக்கையின் மிக முக்கிய செயல்பாடாக உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியை பதவி நீக்கும் வழிமுறைகள் பார்க்கப்படுகின்றன.

தனக்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்த குளோரியா அரோயோ, கொரோனா அவர்களைச் சட்டவிரோதமாக பதவியில் அமர்த்தினார் என்றும், ஜனாதிபதி பதவியிலி ருந்து விலகுவதற்கு முன்னர் ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து அவரை காப்பாற்ற அரோயோ முயற்சித்தார் என்றும் தற்போதைய ஜனாதிபதி அக்கினோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி குளோரியா அரோயோ வாக்குப்பதிவில் மோசடி செய்தார் என்கிற குற்றச்சாட்டில் தற்போது தடுப்புக் காவலில் உள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிக்கு சட்டம் மற்றும் இராஜ தந்திர ஆலோசனைகளை வழங்கி அவரை பதவியிலிருந்து பாதுகாத்து வந்ததாலேயே தனது பதவி பறிக்கப்பட்டுள்ளது என உச்ச நீதிமன்ற நீதிபதி ரெனாட்டோ கொரோனா குற்றம் சாட்டியுள்ளார்.

# உலகின் அபூர்வ வைரக்கல் ஏலத்துக்கு வந்தது



உலகின் மிக அபூர்வமான வைரக்கல் ஒன்று 17.4 பில்லியன் டொலர்களுக்கு ஏலத்தில் வாங்கப்பட்டுள்ளது.

ஹொங்கொங்கில் இடம்பெற்ற ஏலத்தில் ஆறே நிமிடங்களில் எதிர்பாராத வகையில் எதிர்பார்க்காத அளவுக்கு இந்த இளஞ்சிவப்பு வைரக்கல் விலை போயுள்ளது.

மோர்ஷியன் இளம் சிவப்பு வைரம் என்று அழைக்கப்படும் அந்த வைரக்கல் 12 கரட்டுகள் அதாவது சுமார் 2.5 கிராம் எடை கொண்டது. இவ்வகையான வைரம் மிக மிகஅரிதானது என்று கூறப் படுகிறது.

வட்டவடிவில் இருக்கும் இந்த வைரக்கல்லை பெயர் வெளியிட விரும்பாத ஒருவர் தொலைபேசியின் மூலம் ஏலத்தில் பங்குபற்றி வாங்கியுள்ளார். இந்த வகையான ஒரு வைரக்கல் விற்கப்படுவது இதுவே முதல் முறை.

1976 ஆம் ஆண்டு அமெரிக்கா செவ்வாய் கிரகத்துக்கு ஒரு செயற்கைக் கோளை அனுப்பியதை நினைவு கூறும் வகையிலும், அந்தக் கிரகத்தின் நிறத்தை குறிக்கும் வகையிலும் இதற்கு மோர்ஷியன் வைரம் என்று பெயரிடப்பட்டது.

இந்த வைரக்கல் குறைந்தது எட்டு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஏலம் போகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதே போன்ற தன்மைகளைக் கொண்ட மற்றொரு வைரம் பிரிட்டிஷ் அரசி எலிசபெத்துக்கு 1947 ஆம் ஆண்டு அவரது திருமணத்தின்போது பரிசாகக் கொடுக்கப்பட்டது. 23.6கரட் எடைகொண்ட அந்த வைரம் பின்னர் மேலாடையில் அணிந்து கொள்ளும் ஒரு நகையில் பதிக்கப்பட்டது.

வில்லியம்சன் பங்க் என்றழைக்கப்படும் அந்த வைரம்தான் இப்போதும் உலகளவில் மிகவும் பிரபலமான வைரக்கல் என்று கருதப்படுகிறது.

தற்போது ஹொங்கொங்கில் ஏலத்துக்கு விலைபோயுள்ள மோர்ஷியன் வைரக்கல், அமெரிக்க இரத்தின வியாபாரியான ஹாரி வின்ஸ்டனின் கடையில் பட்டைத்தீட்டப்படாத வைரமாக இருந்தது.

அமெரிக்கர்கள் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பிய விண்கலம் அங்கு சென்றடைந்ததை கண்டு மிகவும் மகிழ்ச்சியுற்று, அதை பட்டைதீட்டும் போது அந்தக்கல் இளஞ்சிவப்பு நிறமாக இருக்கக்கூடும் என்று கருதி அதற்கு மோர்ஷியன் வைரம் என்று பெயர் சூட்டினார் என்று, இந்தக் கல்லை ஏலத்தில் விற்ற கிறிஸ்டிஸ் நிறுவனத்தின் பேச்சாளர் பிராண்சுவா க்ருயேல் கூறுகிறார்.




## உபநயன, யக்ஞோபவீத தாரண பிரம்மோபதேச அழைப்பு

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான நந்தன வருடம்
வைகாசித் திங்கள் 19ஆம் நாள் (01.06.2012) வெள்ளிக்கிழமை
சித்திரை நட்சத்திரமும் துவாதசித் திதியும் சித்தயோகமும்
கூடிய காலை 9.00 மணிமுதல் 10.00 மணிவரையுள்ள
கடக லக்ன சுபமுகூர்த்தவேளையில்

சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள் பாக்கியலக்ஷ்மி அம்மா தம்பதியரின்

சிவஸ்ரீ நாராயண சர்மா தவமணி அம்மா தம்பதியரின்

பௌத்திரனும்
எமது ஏகபுத்திரன்

## சிரஞ்சீவி குகப்பிரிய சர்மா

அவர்களுக்கு

சௌள, உபநயன, யக்ஞோபவீத தாரண, பிரம்மோபதேசம்
செய்ய இறைவன் திருவருளுடன் பெரியோர்கள்
நிச்சயித்திருப்பதால் அன்றைய தினம் எமது இல்லத்தில்
நடைபெறும் மேற்படி நிகழ்விற்கு தாங்கள் தங்கள்
குடும்ப சமேதராக வருகை தந்து வடுவை
ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அருளம்பலம் வீதி,
கல்வியங்காடு.

தங்கள் நல்வரவை நாடும்
சிவஸ்ரீ சாத.சுகுமாரக்குருக்கள் (மணிஜயா)
ஸ்ரீமதி சந்தானலக்ஷ்மி அம்பாள் தம்பதிகள்
சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள் குடும்பத்தினர்.

(18786) (6,9,10)



ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் திருக்கோயில்
மஹோற்சவம் - 2012

31.05.2012 வியாழக்கிழமை



மாலை 6.30 மணிக்கு மஞ்சம்
தினமும் நண்பகல் அன்னதானம் இடம்பெறும்
(18376)(45.6.9)
கோண்டாவில் மேற்கு



IELTS
Knowledge Universe Sri Lanka
http://edu.kugroup.info/ielts
June/30th -Exam in Jaffna
KU's IELTS hotline : 0777302882
புதிய தனிப்பட்ட வகுப்புகள் ஆரம்பம்
Authorized IELTS registration & Training Centre
K.U Educaiton,No 75,Temple Road,Jaffna





யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம்

## அறிவித்தல்

இடைக்காலப் பொதுக்கூட்டம்

எமது சங்கத்தின் இடைக்காலப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 03.06.2012 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குச் சங்கத் தலைவர் திரு.எ.இ.போல்ஜெயகாந்தன் அவர்கள் தலைமையில் யாழ்.றிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் ஓட்டோ உரிமையாளர், சாரதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு அறியத் தருகின்றோம்.

- நிர்வாகம்.

(18763) (2-9-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள் (23)

### மனோபாவங்கள்

எதிர்மறை மனோபாவம், நேர்மறை மனோபாவம் என இரண்டு உண்டு.

மறுப்பது, சந்தேகப்படுவது, தயங்குவது (செயல்படும் நிலையைத் தள்ளி வைப்பது) புறத்தூண்டுதல்களை யோசனைகளைத் தள்ளி வைப்பது எதிர்மறை மனோபாவம்.

நிச்சயத் தன்மை, நம்பி உறுதி கொண்டது நேர்மறை மனோபாவம். அது தெளிவான கருத்தும் உயர் நோக்கும் கொண்டது. நேர்மறை மனோபாவம் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் உதவும். நிம்மதிக்கும் மகிழ்ச்சிக்கும் மனித உறவுகளை மேம்படுத்திக் கொள்ளவும் இந்த மனோபாவம் அவசியம்.

அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் கார்ல்ஸிமண்டன் என்பவர் புற்றுநோய் ஆராய்ச்சியில் ஈடுபட்டவர். கற்பனைத் திறன்களைக் கொண்டு புற்றுநோயை எப்படிச் சமாளிக்கலாம் என்று ஆராய்ந்தார் அவர். எதிர்மறைச் சிந்தனை புற்றுநோயின் காரணி என்றால் நேர்மறைச் சிந்தனை அதைக் குணப்படுத்தும் என்பதே அவருடைய ஆராய்ச்சியின் முடிவு. நாசத்தை உண்டு பண்ணுகின்ற கற்பனைத் திறனைக் கொண்டு நல்லதைச் செய்ய முடியும் என்பதே அவருடைய கொள்கை.

நேர்மனோபாவம் நல்லது செய்யும் என்பது இதன் மூலம் உறுதியாகின்றது. இன்றைய பொழுது நல்லபடியாக இருக்கும் என்று நம்புங்கள். அவ்வாறே அது நன்றாக அமையும். தினமும் காலையில் எழும்போதே வாழ்க்கையைத் தகுதியாக்கக் கூடிய நல்ல விசயங்களைச் சிந்தியுங்கள்.

நீங்கள் உற்சாகத்துடன் இருந்தால் உங்கள் கண்ணுக்கு உலகம் அழகாய் தெரியும். மனிதர்களை நேசிக்கத் தோன்றும், கவலை காணாதொழியும், மனம் மகிழ்ச்சியால் நிரம்பி வழியும்.

ஜென் துறவியொருவர் கிராமங்களின் வழியே பயணம் போய்க் கொண்டிருந்தார். வழியில் ஓர் ஊரில் கட்டட வேலை நடப்பதைக் கண்டார்.

கட்டடத் தொழிலாளி ஒருவரிடம் கேட்டார் ''நண்பரே நீர் என்ன செய்து கொண்டிருக்கிறீர்'' என்று. ''பார்த்தா தெரியவில்லையா, நான் கற்களை ஒன்றோடொன்று இணைக்கிற வேலையைச் செய்கிறேன்'' என்றான் அவன். இரண்டாம் தொழிலாளியிடமும் அதே கேள்வியைக் கேட்டார் அவர். ''என் குடும்பத்தை வாழ வைக்க நான் பொருள் தேடும் வழியிது'' என்றான் அந்த மனிதன். மூன்றாமவன் சொன்னான், ''ஐயனே! இன்னும் சில நாளில் ஒரு மாளிகையாய் இது உருப்பெற்றுவிடும். இங்கே புதிதாய் ஒரு குடும்பம் வந்து வசிக்கும். அவர்களுடைய பிள்ளைகள் மகிழ்ச்சியாய் விளையாடிக் கொண்டிருப்பார்கள்'' என்று.

மூன்றாவது தொழிலாளியின் மனோபாவந்தான் நமக்கு வேண்டும். வாழ்க்கையை நேர்த்தியான விதத்தில் அணுகுவது நேர்மறை மனோபாவம்.

### இறைவன் உங்கள் துணைவன்

இனி என்னால் செய்யக் கூடியது எதுவும் இல்லை என்று வருந்துகின்ற நிலை ஏதோவொரு கட்டத்தில் எல்லோருக்கும் வரவே செய்யும். அப்போது உலகமே தன்னைக் கைவிட்டு விட்டதாய் வாழ்க்கையே அஸ்தமித்துப் போனதாய் எண்ணிக் கொள்வீர்கள்.

மனிதர்கள் உங்களைக் கைவிடலாம். ஆனால், உங்களை நீங்கள் கைவிட்டுவிடக் கூடாது. சூழ்நிலை உங்களுக்கு எதிராகி விடலாம். ஆனால் உங்களுக்கு நீங்கள் பகையாகி விடக் கூடாது.

இந்த நிலத்தில் வலுவாகக் கால்களை ஊன்றுவதற்கு உங்கள் மனத்தில் நம்பிக்கையைப் பலமாக ஊன்றுங்கள்.

*'என்னால் முடியும்...'*
*'எந்தச் சவாலையும் நான் எதிர்கொள்வேன்'*
*'எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண்பேன்'*

என்று உங்களுக்குள் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

வாழ்வின் சாரத்தை நிதானமாக ருசிக்கவே நாம் பிறந்தோம். நம் வாழ்நாளை கவலையிலும் விரக்தியிலும் வீணடிப்பதற்கல்ல. இறைவன் எப்போதும் வலிமை வாய்ந்த பட்டாளத்தின் பக்கமே இருக்கின்றான் என்பார்கள். உண்மையில் இறைவனைத் தன் பக்கம் சேர்த்துக் கொண்டதால்தான் எந்தப் பட்டாளமும் வலிமை பெறுகிறது.

உலகமே உங்களுக்கு எதிராகி விடலாம். இறைவனை உங்கள் பங்கில் சேர்த்துக் கொள்ளுங்கள், வெற்றி அடைவீர்கள்.

### கடவுளின் விருப்பமே எனது விருப்பம்

ராபர்ட் எச். ஷீல்லர் அமெரிக்க எழுத்தாளர். சமயப் பிரச்சாரகர். அவருடைய நண்பர் ஆண்ட்ரிதார்ட்டன். ஆண்ட்ரி ஒருமுறை தம் தங்கை வீட்டுத் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக குடும்பத்துடன் காரில் சென்றிருந்தார். நிகழ்ச்சி முடிந்து திரும்பி வரும்போது வழியில் பனிப்புயல் காரணமாக, கார் விபத்துக்குள்ளானது. மலைப்பாதையில் இருந்து கடகடவென உருண்டு ஒரு பள்ளத்தில் விழுந்தது. ஆண்ட்ரி நினைவிழந்தார்.

மருத்துவமனையில் கண் விழித்தவரிடம் தாதி சொன்னாள், ''ஐயா, நான் இதை வருத்தத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது. கார் விபத்தில் உங்கள் மனைவியும், மகளும், பிழைக்கவில்லை'' என்று.

அந்தத் துக்கச் செய்தி அவரை உலுக்கிவிட்டது. ஆனால், அவரோ படுக்கையைவிட்டு எழவோ, வாய் திறந்து பேசவோ இயலாத நிலையில் இருந்தார்.

ஆண்ட்ரி இயல்புக்குத் திரும்ப நாள்களாயிற்று.

-சி.எஸ்.தேவநாதன் (தொடரும்)

# கடல்தொழில் தொடர்பான நூல்கள் வெளிவர ஆவன செய்யவேண்டும்

## 'அலை' ஆசிரியர் யேசுராசா தெரிவிப்பு

ஒரு பிரதேசத்தில் வாழ்ந்தவர்தான் தனது மண்ணைப் பற்றிச் சிறப்பாக நூல் எழுத முடியும். இத்தகைய முயற்சி வரலாற்றில் மிகவும் தேவை. ஒவ்வொரு சமூகமும் தன்னை ஆவணப்படுத்தும் நிகழ்வு தற்போது நடைபெறுகிறது. எமது பிரதேசத்தில் வசித்தவர்கள் தமது பகுதியிலிருந்து புலம் பெயர்ந்து சென்ற பின்பே தமது ஊரின் சிறப்பை உணர்கிறார்கள்.

யாழ்ப்பாணம், மே 31

கடல்தொழில் கிறிஸ்தவர்களைப் பற்றி நூல்கள் வெளிவருவது குறைவு. இனிவரும் காலங்களில் இத்தகைய நூல்கள் வெளிவருவதற்கு நாம் ஆவன செய்ய வேண்டும். அதாவது எழுத்தாளர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என அலை ஆசிரியர் அ.யேசுராசா தெரிவித்தார்.

மு.புஸ்பராஜன் எழுதிய 'வலை உணங்கு குருமணல்' நூல் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் குருநகர் புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் யாழ்.பல்கலைக் கழக பகுதிநேர விரிவுரையாளர் அருள் கலாநிதி யோ.எ.ஜெயசீலன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்த்தும்போதே யேசுராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நூலின் ஆசிரியர் நீண்ட நாள் முயன்று இந்த நூலைப் படைத்துள்ளார். இந்த நூலைப் படிப்பவர்கள் அதன் மூலம் பல நூல்களை எழுதி வெளிக்கொணர முயல்வர். அனுபவம் ஆற்றல் மற்றும் ஊர்பற்றுடன் இயங்கும் இவர் ஓர் நாவலை எழுத முயற்சிக்க வேண்டும். கடல்தொழில் கிறிஸ்தவர்கள் பற்றி தமிழ் நாட்டில் இலங்கையில் நூல்கள் வெளிவருவது குறைவு. 'ஆழி சூழ் உலகு'என்ற நூல் தமிழ்நாட்டில் வெளியிடப்பட்டது- என்றார்.

இந்த நூலுக்கான மதிப்புரையை வழங்கிய யாழ். திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் கூறியதாவது:-

ஒரு பிரதேசத்தில் வாழ்ந்தவர்தான் தனது மண்ணைப் பற்றிச் சிறப்பாக நூல் எழுத முடியும். இத்தகைய முயற்சி வரலாற்றில் மிகவும் தேவை. ஒவ்வொரு சமூகமும் தன்னை ஆவணப்படுத்தும் நிகழ்வு தற்போது நடைபெறுகிறது. எமது பிரதேசத்தில் வசித்தவர்கள் தமது பகுதியிலிருந்து புலம் பெயர்ந்து சென்ற பின்பே தமது ஊரின் சிறப்பை உணர்கிறார்கள்.

1976 இல் 'அம்பா' பாடல் நூல் இவரது சிறிய வெளியீடாக வெளிவந்தது. குருநகர் பிரதேச மக்களது வரலாற்றை இந்த நூல் கொண்டுள்ளது. குருநகருக்கான வரலாற்றை மட்டும் இந்த நூல் கொண்டுள்ளதாகக் கூற முடியாது.

எமது ஏனைய பிரதேசங்களுக்கும் இந்த நூல் பொருத்தமானதாக உள்ளது. இந்தநூல் குருநகர் மக்களது கலாசாரம், ஆன்மிகம் பற்றிக் கூறுகிறது. குருநகர் மக்களின் ஒருநாள் வாழ்க்கையை இவர் இந்த நூலில் பதிவு செய்துள்ளார்.

ஒவ்வொரு விடயங்களையும் எழுதிய முறை ஒரு நாவலை வாசிப்பது போல உணர்கிறேன். ஒவ்வொரு அனுபவமும் வாழ்வியல் சார்ந்த விடயமாகவும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் பல பகுதிகளாகவும் இந்த நூல் உள்ளது.

குருநகர் சமூகத்தினுடைய சிறப்புக்களையும் கூட்டுச் சமூகத்தையும் ஐக்கியமாக வாழ்வதையும் இந்த நூலில் இவர் வெளிப்படுத்தியுள்ளார். இளையோர் இந்த நூலை வாங்கி வாசித்துத் தாம் வாழும் சமூகம் முன்னேற தமது பங்களிப்பை வழங்க வேண்டும்.- என்றார்.

(எ-51)



வலி.கிழக்கு சைவ சமய அருள்நெறி மன்றத்தினால் நடத்தப்பட்ட கலைஞர்கள் அறிஞர்கள் பாராட்டு விழாவில் மூத்த சிற்பாசாரி க.இராசலிங்கத்துக்கு வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் பாராட்டுப்பத்திரம் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (எ-11)

# சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி மாணவர்களிடையே போட்டிகள்

கொழும்புத்துறை, மே 31

90 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை பாடசாலை மாணவர்களிடையிலான பேச்சுப்போட்டி வினாடிவினாப் போட்டிகளை நடத்தவுள்ளது.

நான்கு பிரிவுகளாக நடைபெறும் பேச்சுப் போட்டிகளுக்கான தலைப்புக்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. கீழ்ப்பிரிவு (தரம் 6,7) நான் கண்ட கூட்டுறவுப் பெரியார் அல்லது நான் ஒரு கூட்டுறவுச் சங்கத் தலைவனானால், மத்திய பிரிவு (தரம் 8,9) பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களின் அவசியம் அல்லது கூட்டுறவுக் கல்வி.

மேற்பிரிவு (தரம் 10,11) கூட்டுறவுத் தலைமைத்துவம் அல்லது கூட்டுறவுக் கொள்கைகள், அதிமேற்பிரிவு (தரம் 12,13) கூட்டுறவு மூலம் புதிய தொழிற்றுறைகளை உருவாக்குவோம், அல்லது யாழ். மாவட்டக் கூட்டுறவின் தற்போதைய நிலை கண்ணோட்டம் ஆகிய தலைப்புக்களில் பாடசாலை அதிபர்களூடாக விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை செயலாளர் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை இல-12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-13-135)

## மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு

மாவட்ட மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டியில் காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மாணவன் செந்தில்நாதன் பிரசாந்தன் பிரிவு II தனிநடனம் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். (எ)

## வடமாகாண எழுத்தாக்க போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 31

மாகாணநிலைத் தமிழ் மொழித் தினப்போட்டிகள் -2012 இன் எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. விவரம் வருமாறு:-

**திறனாய்வு பிரிவு -5**

முதலாமிடம் கே.அனோஜா வ/புதுக்குளம் ம.வி, இரண்டாமிடம் இ.வினித்தா வ/பெரிய கோமரசங்குளம் ம.வி.

**குறுநாடக ஆக்கம் பிரிவு-4**

முதலாமிடம் அ.மனுஜா வ/விபுலானந்தக்கல்லூரி,இரண்டாமிடம் மோ.சரன்சா வ/சுந்தரபுரம் சரஸ்வதி வித்தி.

**குறுநாடக ஆக்கம் பிரிவு - 5**

முதலாமிடம் பூ.சுலக்ஷி வ/விபுலானந்தக்கல்லூரி, இரண்டாமிடம் வி.நிரோசினி வ/புதுக்குளம் ம.வி.

**கவிதை -ஆக்கம் 4**

முதலாமிடம் கு.டிவியானந்தன் வ/நெளுக்குளம் கலைமகள் ம.வி,இரண்டாமிடம் வே.குயிலினி வ/ஓமந்தை ம.க.

**கவிதை ஆக்கம் பிரிவு- 5**

முதலாமிடம் ந.ரம்மியா வ/தமிழ் மத்திய ம.வி,இரண்டாமிடம் க.ஜோயல் புதுக்குளம் ம.வி

**சிறுகதை ஆக்கம் பிரிவு-4**

முதலாமிடம் அ.ப.ஸஹ்ரா வ/முஸ்லிம் ம.வி,இரண்டாமிடம் ம.மேகலா வ/சுந்தரபுரம் சரஸ்வதி வித்தி. (தொடரும்)

## நியமனம்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் நிர்வாக உத்தியோகத்தராக திருமதி விஜயலட்சுமி முருகையா நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பணிமனையில் முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் ஒன்றில் கடமையாற்றிய இவர் சாவகச்சேரி வைத்தியசாலை பதில் நிர்வாக உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## மூடி மூடி வைப்பதால் மட்டும் முழுவதும் சரியாகிவிடாது

பாலியல் முறைகேடுகள் நிகழும் வீதம் வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அதிகரித்திருக்கின்றது. நாளாந்தம் இவ்வாறான ஏதாவது ஒரு குற்றச் செயல் குறித்து முறையிடப்படுகிறது என்று வர்ணிக்கக்கூடிய அளவுக்கு சம்பவங்கள் நிகழ்கின்றன.

இவை குறித்து ஊடகங்களில் அடுத்த நாளில் அல்லது அதற்கடுத்த நாளில் செய்திகள் வெளியாகின்றன. அதன் பின்னரே சமூகத்தில் இத்தகைய சம்பவங்கள் குறித்து ஓர் அதிர்வுணர்வு ஏற்படுகிறது.

இவை குறித்து அக்கறை எடுக்க வேண்டும், சீரழிவுகளைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று ஒரு சாரார் குரல் கொடுக்க ஆரம்பிக்கின்றனர். வடக்கில் இந்த அதிர்வு நிலை ஏற்பட்டதன் பின்னரும் குற்றங்களைத் தடுப்பதற்கான செயற்பாடுகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பதிலாக ஊடகங்கள் இத்தகைய செய்திகளை வெளியிடக்கூடாது என்று குறிப்பிட்ட சில அரச அதிகாரிகள் கூற ஆரம்பித்திருக்கின்றனர். குறிப்பாக மருத்துவ உளவியல் துறைசார் அதிகாரிகள் அதிகளவில் இந்தக் கருத்தை வெளிப்படுத்துகிறார்கள். ''ஊடகங்கள் இத்தகைய செய்திகளை வெளியிடுவதால் தான் இத்தகைய சம்பவங்கள் மேலும் மேலும் அதிகரித்திருக்கின்றன'' என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இவ்வாறு அவர்கள் கூறுவதற்கு ஏதாவது புள்ளி விவரங்களை வைத்திருக்கிறார்களா என்பதை அவர்கள் இதுவரை வெளிப்படுத்தவில்லை. குற்றச்சாட்டுக்களை மட்டுமே வெளிப்படுத்துகிறார்கள்.

ஊடகங்களில் வரும் தகவல்கள் சிலவேளைகளில் இத்தகைய சம்பவங்களுக்கு ஊக்கிகளாக அமைந்திருக்கின்றன என்று மேற்கு நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வுகளில் கண்டறியப்பட்டிருக்கின்றன. சில மாதங்களுக்கு முன்னர் தமிழகத்தில் தனது ஆசிரியை ஒரு மாணவன் கொலை செய்ததற்கு சினிமாவில் அவன் பார்த்த காட்சிகள் காரணமாக இருந்தன என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால், எந்தவொரு ஆய்விலும் இத்தகைய குற்றங்களின் அதிகரிப்புக்கு ஊடகங்களே முழுமையான காரணம் என்று நிரூபிக்கப்பட்டதில்லை.

அப்படியிருக்கும்போது யாழ்ப்பாணத்தில் மட்டும் அரச அதிகாரிகள் ஊடகங்கள் மீது பழியைப் போடுவதற்கான காரணங்கள் ஆராயப்படவேண்டியவை.

இதேபோன்று, பத்திரிகை ஒன்றில் அலரி விதை உண்டு தற்கொலை செய்து கொண்டவர் பற்றி வெளியான தகவலைத் தொடர்ந்து அவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை யாழ்ப்பாணத்தில் அதிகரித்ததாக 1980களில் யாழ்ப்பாணத்தில் நடத்திய கணிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்று அரலி விதை உண்டு தற்கொலை செய்வோர் எண்ணிக்கை வெகு குறைவு. ஆனால் தற்கொலைகளின் எண்ணிக்கை அன்றிருந்ததைவிட பல்கிப் பெருகியுள்ளதை புள்ளிவிவரங்கள் தெளிவுபடுத்துகின்றன.

எனவே பாலியல் முறைகேடுகள் மற்றும் குற்றங்களின் அதிகரிப்புக்கு ஊடகங்களின் மீது குறைகூறுவதில் பயனேதும் இல்லை. அரச அதிகாரிகள் அது தொடர்பில் தமது கடமைகளைச் சரிவரச் செய்வதே அவசியமானது. எல்லாவற்றையும் மூடி மூடி மறைப்பதால் மட்டும் அவை ஒழுங்காக இருக்கின்றன என்று அர்த்தப்பட்டுவிடாது.

# இராணுவத்தின் உளப்பாதிப்பால் திணறுகிறது இலங்கை

போரில் ஈடுபட்ட இராணுவத்தினர் தற்கொலைச் சம்பவங்களில் ஈடுபடுவது அதிகரித்து வருவதால் இவர்கள் அனைவரும் உளஆற்றுப்படுத்தற் பயிற்சித் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டும் என ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படைக் கல்லூரியின் உளவியற்துறை விரிவுரையாளரான சௌமியா நாமநாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

''போரில் பங்கு கொண்ட இராணுவத்தினர் முதலில் உளவியல் அழுத்தங்களுக்கு உட்படுகின்றனர். இவர்களுடன் பணியாற்றுபவர் என்ற வகையில் இதனை என்னால் உணர முடிகின்றது. அவர்கள் பல்வேறு உளவியல் தாக்கங்களுக்கு உட்படுகின்றனர்'' என ஆப்கானிஸ்தானில் மேற்கொள்ளப்பட்ட போரில் பங்கு பற்றிய பின்னர் ஆஸ்திரேலியாவுக்குத் திரும்பிய இராணுவத்தினருடன் இணைந்து பணியாற்றிய நாமநாயக்க தெரிவித்தார். இதே போன்றே இலங்கையில் தொடரப்பட்ட நீண்ட கால போரின் விளைவாக அதில் பங்கு கொண்ட இராணுவத்தினரும் மன அழுத்தங்களுக்கு ஆளாகியிருப்பர் என அவர் உறுதியாகத் தெரிவிக்கின்றார்.

''போரில் பங்கு கொண்ட பெரும்பாலான இராணுவத்தினர் Post&Traumatic Stress Disorder &PSTD என்கின்ற உளவியல் நோய்க்கு உட்படுகின்றனர். அறிவியல் ரீதியாக நோக்கில் இதன் விளைவுகள் மோதலின் போது மட்டும் வெளிப்படமாட்டாது. ஆனால் மிகத் தீவிரப் போரில் பங்கு கொள்ளும் ஒரு இராணுவத்தினன் மன அழுத்தம் தரவல்ல சூழலில் வித்தியாசமான கோணத்தில் செயற்படத் தொடங்குவார். அதாவது அவர் தீவிரப் போரில் பங்கு கொண்டதன் பின்னர் உளவியல் ரீதியான தாக்கங்களுக்கு இவர் உள்ளாவதால் இவ்வாறு நடந்து கொள்ள முற்படுவார்'' என்கிறார் நாமநாயக்க.

இது பொதுவாக இராணுவத்தினர் மத்தியில் காணப்படுகின்ற ஒரு பிரச்சினை என்பதால் இதனை மிகக் கவனமாகக் கையாள்வதுடன், இதற்குத் தேவையான உள ஆற்றுப்படுத்தலையும் மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

''போரில் பங்கு கொண்டதன் பின்னர் ஏற்படும் PSTD என்கின்ற மன அழுத்த நோயால் பாதிக்கப்படும் இராணுவத்தினரோ அல்லது இவ்வாறான தாக்கங்களுக்கு உட்பட்ட வேறு யாராவது தாம் பெற்றுக் கொண்ட உளத்தைச் சிதைக்கும் அந்தக் கோரமான, கடினமான அனுபவங்கள் மீண்டும் மீண்டும் அவர்களது மனங்களில் பிரதிபலிப்பதால் இவ்வாறான உளத்தாக்கத்துக்கு உள்படுகின்றனர்.

இவ்வாறு இவர்களின் மனங்களைப் பாதித்த பழைய சம்பவங்கள் மீண்டும் இவர்களை ஆட்கொள்ளும் போது, இவர்கள் தமது உண்மையான நிலையை இழந்துவிடுகின்றனர். இதனால் PSTD என்கின்ற உளவியல் தாக்கத்துக்கு உள்படும் இராணுவத்தினர் தம்மைச் சூழ என்ன நடக்கின்றது என்பதை அறியாது வன்முறையான சம்பவங்களை மேற்கொள்ள மனதளவில் தூண்டப்படுகின்றனர் என அவர் தெளிவுபடுத்தினார்.

அண்மைய காலங்களில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைச் சம்பவங்கள் தொடர்பான விரிவான தகவல்கள் தனக்குத் தெரியாது என்பதை ஏற்றுக் கொண்ட நாமநாயக்க அதே வேளையில், இவ்வாறான படுகொலைச் சம்பவங்கள் அதிகரிப்பதால் தொடர்புபட்ட அதிகாரிகள் உடனடியாக அதற்கான காரணங்களை அறிந்து ஆர்வத்துடன் செயற்பட்டு, இவ்வாறான தற்கொலைகள், கூட்டுக் கொலைகள் மேலும் நடைபெறாது தடுப்பதற்குகந்த வழிவகைகளை ஆராய்ந்து செயற்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

''வீட்டு வன்முறைகள் மற்றும் கொலைச் சம்பவங்களில் அதிகளவான ஒழுக்கமான ஆண்கள் மற்றும் பெண்கள் ஈடுபடுவதானது, இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதற்கான பிரதான காரணங்கள் அடையாளங் காணப்படாது உள்ளதையே சுட்டிக்காட்டுகின்றது'' என நாமநாயக்க தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலியாவைப் பொறுத்தளவில் போர் வலயத்துக்கு கடமைக்கு அனுப்பப்படும் இராணுவத்தினருக்கு மீண்டும் திரும்ப வந்தவுடன் அவர்கள் தமது வீட்டுக்குச் சென்று குடும்பத்தவர்களுடன் பொழுதைக் கழிப்பதற்கான விடுமுறை வழங்கப்படுவதாகவும், இதனால் இவர்களின் மன அழுத்தங்கள் குறைக்கப்படுவதாகவும் நாமநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடமையாற்றும் இராணுவத்தினருக்கு எந்த அடிப்படையில் விடுமுறை வழங்கப்படுவது தொடர்பாக தனக்கு உறுதியாகத் தெரியாது எனவும் இவர் கூறுகின்றார். '' இராணுவத்தினருக்கு உள ஆற்றுப்படுத்தல் வழங்கப்படுகின்றது. இலங்கை இராணுவத்தின் அதிகார கட்டளைச் சங்கிலியை எடுத்துப் பார்த்தால் இங்குள்ள ஒவ்வொரு இராணுவத்தினனுக்கும் எவ்வாறான ஆற்றுப்படுத்தல்கள் வழங்கப்படுகின் றன என்பதை அறிந்து கொள்ளலாம். இவ்வாறான உளவியல் மேம்பாட்டுப் பயிற்சிகள் இராணுவத்தினருக்கு பல்வேறு உதவிகளை வழங்குகின்றது'' என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் றுவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தில் கோப்ரல் தர நிலையிலுள்ள ஒருவர் ஏழு சிப்பாய்களுக்கு பொறுப்பாகக் கடமையாற்றுகின்றார். இந்த ஏழு சிப்பாய்களுடனும் அவர்களது கோப்ரல் ஒவ்வொரு வாரமும் முறைசார் கலந்துரையாடல்களை மேற்கொள்வார். இவ்வாறு மேற்கொள்ளப்படும் நேர்காணல்களின் மூலம் அறியப்படும், அடையாளங் காணப்படும் பிரச்சினைகளை உத்தியோகபூர்வமாக இந்தக் கோப்ரல் பதிவு செய்து அறிக்கையிடுவார். இலங்கை இராணுவக் கட்டமைப்பில் நான்கு பிளாற்றூன்கள் ஒரு கொம்பனி ஆகும். இதன்படி, கொம்பனிப் பொறுப்பதிகாரி தனக்குக் கீழுள்ள இராணுவத்தினரைச் சந்தித்து அவர்களுக்குத் தேவைப்படும் உள ஆற்றுப்படுத்தல்களை வழங்குவார். இவ்வாறு இலங்கை இராணுவக் கட்டமைப்பின் கட்டளைச் சங்கிலியில் கீழிருந்து மேல்நோக்கி பதவி வகிக்கும் அனைத்து இராணுவ அதிகாரிகளும் தேவைப்படும் பட்சத்தில் தமக்கு கீழுள்ள இராணுவத்தினருக்கு உள ஆற்றுப்படுத்தல்களை தேவையான பல்வேறு வடிவங்களில் வழங்குவர். இதன் மூலம் அனைத்து இராணுவத்தினரதும் உளவியலானது மிகச் சிறப்பாக காணப்படும்'' என இலங்கை இராணுவப் பேச்சாளர் மேலும் விளக்கமளித்தார்.

உளவியல் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த தகைமை பெற்ற மனோதத்துவ வைத்தியர் ஒருவராலேயே உளவியல் தாக்கத்துக்கு உட்பட்ட ஒருவரை நன்கு அடையாளங் காணமுடியும். உளத்தாக்கத்துக்கு உள்பட்ட இராணுவத்தினன் ஒருவரை அவருடன் கூடப் பணியாற்றும் சக இராணுத்தினனால் அடையாளங் கண்டுகொள்ள முடியாது என நாமநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த அடிப்படையில் இலங்கை இராணுவப் பேச்சாளரால் கூறப்பட் விளக்கத்தை இவர் ஏற்க மறுத்துள்ள துடன், இவ்வாறான ஒரு முறைமை போதியளவு ஆற்றுப்படுத்தலை வழங்க மாட்டாது எனவும் நாம நாயக்க தெரிவித்துள்ளார். ''இவ்வா றான உள மேம்பாட்டுப் பயிற்சிகளை பெற்ற ஒரு இராணுவ அதிகாரியும் தாக்கத்துக்கு உள்ளான இராணுவத்தி னனும் ஒரே சூழலில் பணியாற்றுவ தால் இவ்வாறான உளத்தாக்கங்களை கண்டுபிடிப்பது அவ்வளவு சுல பமான காரியமல்ல. அதாவது உள மேம்பாட்டுப் பயிற்சி பெற்ற குறிப் பிட்ட இராணுவ அதிகாரியும் அந்தச் சூழலில் மனத் தாக்கத்துக்கு உள்பட்ட உள நோயாளி ஆவார். இவ்வாறான ஒரு நோயாளியால் தனது சக இராணுவத்தினனை அடையாளங் கண்டுகொள்ள முடியாது'' என நாமநாயக்க விளக்கமளிக்கின்றார்.

கொழும்பு பல்கலைக் கழகத்தில் உளவியல் கற்கைத் துறை விரிவுரையா ளரான கலாநிதி சரத் விஜயசூரிய போன்றவர்கள் களத்தில் பணியாற் றும் இராணுவத்தினரைச் சந்தித்து உளவியல் ஆலோசனைகளை வழங்கு வதாகவும் இராணுவப் பேச்சாளர் வனிகசூரிய தெரிவித்துள்ளார். தியா னப் பயிற்சி போன்ற பல்வேறு மன அழுத்தங்களைக் குறைக்கும் பயிற்சி கள் வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இவ்வாறான தியானப் பயிற்சிகளைப் பெற விரும்பு பவர்கள் இதனைப் பெற்றுக்கொள்ள லாம் எனவும் இதனை Vipa ssana தியான மையம் வழங்குவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற தற் கொலை மற்றும் படுகொலைச் சம்ப வங்களில் ஈடுபட்ட இராணுவத்தினர் தொடர்பாக வினவியபோது, இவ்வா றான படுகொலை வழக்குகளில் குற் றம் சாட்டப்பட்டுள்ள ஒவ்வொரு இராணுவத்தினர் நிலைப்பாடு தொடர் பாக விரிவாக ஆராயப்பட்ட போதி லும், இவர்கள் PSTD என்கின்ற மன நோய்க்கு உள்பட்டிருக்கவில்லை எனவும் வனிகசூரிய பதிலளித்துள்ளார்.

ஆறு ஆண்டு சேவையைப் பூர்த்தி செய்த இராணுவத்தினன் ஒருவர், ஒன் பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்த இரா ணுவத்தினன் ஒருவருக்கு பொறுப்பதி காரியாக நியமிக்கப்பட்டதால், இந்த மாதத்தின் ஆரம்பத்தில் ஒன்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்த இராணுவத்தினன் தனது இராணுவ பொறுப்பதிகாரியை படுகொலை செய்திருந்தார். ''உண்மையில் இந் தச் சம்பவத்தைப் பார்த்தால், இது முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகும். அதாவது சேவைக் காலம் குறைந்த ஒருவரை தனது பொறுப்பதிகாரி யாக ஏற்றுக் கொள்ள முடியாத பொறாமை உணர்வால் மேற்கொள் ளப்பட்ட படுகொலைச் சம்பவம் இதுவாகும்'' என வனிகசூரிய விளக்கமளித்தார்.

ஆனால் இவை PSTD என்கின்ற மனநோய்த் தாக்கத்தால் மேற்கொள் ளப் பட்ட படுகொலைகள் என்பதை வனிகசூரிய ஏற்க மறுத்துவிட்டார். மேற் கூறிய இரு எடுத்துக்காட்டுக்களும் PSTD என்கின்ற நோயின் புதிய அறிகுறிகளாக இருக்கலாம் என வும், அண்மைக்காலத்தில் இலங்கை யில் இராணுவத்தினர் படுகொலைச் சம்பவங்களில் ஈடுபடுவதால், இவர்களைப் பரிசோதிக்க வேண் டும் எனவும் நாமநாயக்க உறு தியாகத் தெரிவித்துள்ளார்.

**நன்றி:புதினப்பலகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளில் மூழ்கும் தென்மராட்சி

தென்னவன்

யாழ்ப்பாணத்தில் இற்றை வரைக்கும் தொடரும் பிரச்சினைகளில் மின்தடையும் ஒன்று. போர், பொருளாதாரத் தடை, ஊரடங்கு நடைமுறை, எரிபொருள் விலையேற்றம் போன்ற காரணிகளால் அல்லது சாட்டுக்களால் யாழ்ப்பாணத்தில் மின்தடை நடைமுறைக்கு வருவதுண்டு.


ஆனால் இப்போது அபிவிருத்தி என்ற பெயிரிலும் மின்தடை பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் இப்போது அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பது தென்மராட்சிப் பகுதியாகும்.

கடந்த ஒரு வருடம் காலமாக ஏற்படுத்தப்படும் இந்த மின்தடை தொடர்பாக பிரதேச மக்கள் கொதிப்படைந்துள்ளனர்.

வீதி அகலிப்புப் பணிகளுக்கு மின்கம்பங்கள் மாற்றுவதற்காக மின்தடை ஏற்படுத்தப்படுகின்றது என மின்சார சபையினரால் அறிவிக்கப்பட்டு தடையேற்படும் நேரமும் குறிப்பிடப்படுகிறது. காலை 8மணி தொடக்கம் மாலை 5.30மணிவரையென முன்னர் அறிவிக்கப்பட்டு தற்போது மு.ப 8.30 மணி தொடக்கம் மாலை 6 மணிவரையெனவும் அறிவிக்கப்படுகின்றது.

தென்மராட்சிப் பிரதேசம், நாவற்குழி பாலம் தொடக்கம் எழுதுமட்டுவாழ் சந்தி வரையான சுமார் 20 கிலோமீற்றர் நீளமானதாகும். பிரதேசத்திற்கான மின்விநியோகம் தொடர்பான வாடிக்கையாளர் அலுவலகம் சாவகச்சேரியில் உள்ளது.

மின்தடை ஆரம்பமாகும் நேரம் ஒரு நிமிடம் கூட பிந்தாமல் நிறுத்தப்படுகின்றது. மீண்டும் மின்விநியோகம் வழங்கும் நேரம் 6 மணியென குறிப்பிட்டுள்ள போதிலும் குறித்த நேரத்தில் மின்விநியோகம் வழங்கப்படுவது மிகமிகக் குறைவு.



தற்போதைய காலகட்டத்தில் சகல தேவைகளுக்கும் மின்சாரம் தேவையெனும் நிலை வந்துள்ளது. குறிப்பாக மாணவர்கள் மின்சாரமில்லையேல் அன்று பாடப் புத்தகம் திறப்பதில்லை. ஆரம்பப் பிரிவு மாணவர்களின் நிலை அதைவிட வித்தியாசம். மின்சாரம் இல்லையென்றால் அவர்கள் பாடு கொண்டாட்டம்தான். இதனால் கல்வி நிலையில் பெரிதும் பாதிப்பு ஏற்படுகிறது.

ஒன்று விட்டு ஒரு நாளைக்கு மின்தடை ஏற்படுத்தப்படுகின்றது. பகல் முழுவதும் மின்சாரம் தடையெனில் இரவு மின்சாரம் வழங்கப்பட்ட பின்னரும் அரை மணித்தியாலம் தொடக்கம் 2 மணி நேரம் வரை அறிவிப்பின்றி நிறுத்தப்படுகிறது. மறுநாள் பகலில் மின்சாரம் வழங்கப்பட்டாலும் இரவு அரை மணி நேரம் தொடக்கம் 2 மணிநேரம் வரை மின்சாரம் நிறுத்தப்படுகிறது.

பகலில் நிறுத்தப்படுவது வீதி அகலிப்புப் பணிக்காக, இரவில் நிறுத்தப்படுவது எதற்காக? தென்மராட்சி பிரதேச மாணவர்களின் கல்வியைக் குலைக்கவா?

பிரதேசத்தில் ஒன்று விட்டு ஒருநாள் மின்தடையினால் பல தொழில் நிறுவனங்கள், சிறு கைத்தொழில் நிலையங்கள் மூடுவிழா நடத்தியுள்ளன.

இரவில் மின்தடை ஏற்படும் வேளையில் உரிய காரணத்தினை அறிய வாடிக்கையாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டால் வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தும் காரணம் தேவையில்லை. பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர் ஒருவர் கேட்டால் பக்குவமாக பதிலளிக்க வேண்டியது உத்தியோகத்தரின் தலையாய கடமை. ஆனால் தலைமை அலுவலகத்துக்கோ பாவனை அலுவலகத்துக்கோ தொலைபேசியில் வாடிக்கையாளர்கள் கேட்டால், அங்கு கடமையில் நிற்போர் எரிந்து விழுகின்றனர். அல்லது தொலைபேசி இணைப்பினை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கின்றனர்.

பகலில் மின்தடை ஏற்படுவது ஊடகங்களில் அறிவிக்கப்படுவது போல இரவில் மின்தடை பற்றிய விவரங்களும் அறிவித்தால் அதற்கான மாற்று ஏற்பாடுகளை வாடிக்கையாளர்கள் மேற்கொள்ள ஏதுவாக இருக்கும்.

தென்மராட்சி பிரதேசத்தைப் பொறுத்தவரை வீதி அகலிப்புக்கான அனைத்து மின் மாற்றிகளும் அமைக்கப்பட்டு விட்டன. ஆனாலும் தொடர்ந்தும் ஒன்றுவிட்டு ஒருநாள் மின்தடை ஏற்படுத்தப்ப்டுகிறது.

பகலிலும் இரவிலும் மின்தடையை ஏற்படுத்துவது ஆரம்பப்பிரிவு மாணவர்கள், பரீட்சைகளுக்குப் படிக்கும் மாணவர்கள், தகவல்தொழில்நுட்பக் கல்வி மாணவர்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாவதால் பெற்றோர் மற்றும் கல்வியாளர்கள் மத்தியில் பெரும் கோபத்தினை ஏற்படுத்தியுள்ளது.

# பன்மொழி அறிஞர் தவத்திரு கலாநிதி தாவீது அடிகள்

துரை.ஆரோக்கியதாசன்

தமிழ் மொழியின் தகைமைசால் சிறப்பைத் தமிழினம் கருதிடாக் காலத்தில் ''நும்மொழியின் சான்ற சிறப்பைத் தமிழ் மக்களே இன் இனியே முழுவதூஉம் உணர்மின்'' என வீர முரசு அறைந்து தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிய பெருமை ஒப்பியல் அகராதியின் ஒப்பற்ற மேதை தவத்திரு கலாநிதி ஹய சிந்து சிங்கராயர் தாவீது அடிகளைச் சாரும்.

பருத்தித்துறையில் தும்பளைக் கிராமத்தில் மாவச்சை என்னும் வளவில் 1907.06.28 இல் பிறந்த இவர், தனது கல்வியை யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்பித்தார்.

இவர் லண்டன் பல்கலைக்கழக கலைமாணிப் பட்டத்துடன் முதுமாணிப் பட்டத்தினையும், கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்ட ஒரு மாபெரும் கல்விமான்.

இவர் கருவிலேயே திருவுடையராக விளங்கியபடியால் ''என்னைப் பின்பற்றி வா''(மத்.9:9) என்ற இயேசுவின் அருளுரையால் ஆட்கொள்ளப்பட்டு கொழும்பு புனித பேணாட் குருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெற்று, 1931.12.19 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

தாவீது அடிகள், புனித பத்திரிசியார் கல்லூரியில் 1936 ஆம் ஆண்டு தொடங்கி 31 ஆண்டுகள் பணிபுரிந்து சிறந்த அறிஞர்களை உருவாக்கியுள்ளார்.

எழில்மிக்க செவ்விளநீர் நிறம், புன்னகை பூத்துப்பொலிவோடு விளங்கும் முகம், ஞானக்குறியாகத் தோன்றும் வெண்ணிறக் குறுந்தாடி, அறிவொளி அவாவும் கண்கள், எடுப்பான கூரிய மூக்கு, ஈகையில் வள்ளல், பாரியை மிஞ்சும் கரங்கள், உருவத்தில் குறுமுனி அகத்தியர், நெப்போலியன் போன்று அபூர்வ ஞாபகசக்தி மிக்கவர். நேரத்தை உயிர் போன்று செயலுருவாக்கியவர். ஒழுங்கும், சிக்கனமும் இவருக்கு இரு கண்கள் போன்றவை. மனித கணினியாகவும், நுண்ணறிவு மிக்க நடமாடும் பல்கலைக்கழகமாகவும் திகழ்ந்தவர். துறவியின் இடது கரத்தில் 'ரெனிஸ்' வீரனைப் பிரதிபலிக்கும் 'றக்கெற்', வலது கரத்தில் உத்தம மரியாளின் வீரவாள் ஆகிய திருச்செபமாலை. ஒருமுறை பார்த்தாலே நெஞ்சில் நிறைந்திடும் தோற்றப் பொலிவு. உந்து சக்திமிக்க ஆளுமை. இவற்றின் ஒட்டுமொத்தமே தாவீது அடிகள் என்பது வெள்ளிடைமலை.

இருபதாம் நூற்றாண்டிலே பூமியில் மானிட, வானவ, தேவதையாகத் திகழ்ந்த அன்னை திரேசாவைப் போல தாவீது அடிகள் எளிமையும் தாழ்மையும் நிறைந்தவர். மனித நேயத்தின் இலக்கணமே இவர். ஆண்டவரின் அன்பைப் பகிர்ந்தளித்தவர். ''ஒன்றே குலம், ஒருவனே தேவன்'' என்பவற்றைக் கடைப்பிடித்த செம்மல். நாம் கண்ட நவீன சோக்கிறற்றீஸ். கடுகளவு கதைத்து மலையளவு பெரும்பணியாற்றிய பெருமகனார். ஏழை மாணவர்களின் கண்ணீரிலே துன்புறும் இயேசுவைக் கண்டார். வீதியோரங்களில் வேதனைப்படும் கைவிடப்பட்ட மனித உள்ளங்களைக் கட்டி அரவணைத்து மோந்து முத்தமிடும் பழக்கமும், வஞ்சகமில்லாத பிஞ்சுக் குழந்தை உள்ளமும் கொண்டவர். பல்லாயிரக்கணக்கான ஏழை மாணவர்களின் வாழ்வு ஒளிமயமாகத் திகழச் சுயநலமின்றி அருளையும் பொருளையும் மனமகிழ்வுடன் வாரி வழங்கினார் நம் வாழ்வில் கண்ட புனிதர் தாவீது அடிகள்.

''கருவறை தொடக்கம் கல்லறை வரை கற்க'' என்பதற்குச் சான்றாகத் திகழ்ந்தவர் தாவீது அடிகள்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், தான் தொடங்கிய சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியின் வேலை முற்றுப்பெறமுன் 1947.01.22 இல் மறைந்துவிட்டார். இவரின் சீடரே தாவீது அடிகள்.

''விதியே விதியே தமிழ்ச்சாதியை என் செய்யக்கருதி இருக்கின்றாயடா'' என்று பொங்கினான் பாரதி. ஆம் அந்தத் துர்ப்பாக்கிய நிலையில்தான் ஒப்பியல் அகராதி இருந்தது. அதை நிவர்த்தி செய்ய அடிகளார். சொற்பிறப்பியல் துறையில் ஆய்வுகளை மேற்கொண்டார். ஒரு பூரண பல்கலைக்கழகம் ஆற்றவேண்டிய பெரும் பாரிய பணியை பண வலிமை குன்றியிருந்தும், மனவலிமை குன்றாமல் குருவாகவும், முழுநேர ஆசிரியராகவும் ஆற்றிக்கொண்டே பல வருடங்களாக மொழி ஆராய்ச்சியில் கடினமாக உழைத்தார்.

ஒப்பியல் அகராதியில் ஒன்பதாவது பகுதியை சிங்கள மொழியில் தாவீது அடிகள் எழுதத் திட்டமிட்டார். இதனால் தேசிய ஒருமைப்பாடு உருவாகும் என உணர்ந்து உழைத்த உத்தமராவர். ''தொல்திராவிடம்'' அன்றேல் சீரிய சிறந்த் (தமிழ்) மொழியை விளக்கிச் சாதனை நிலைநாட்டிய மாமேதை இவர். அவை மட்டுமல்லாது, சிங்களம் தமிழின் தங்கை என்று ஆதார பூர்வத்துடன் நிரூபித்துக் காட்டிய முதல் அறிஞர் தாவீது அடிகள்.

கி.மு 100 ஆம் ஆண்டளவில் தோன்றிய கலித்தொகை, குறுந்தொகை போன்ற நூல்களில் வரும் 'யாழ்' என்ற சொல் காதலன் காதலியை, தோழன் தோழியை அழைப்பதாக வருகின்றது என்றும், எனவே தமிழ் 'யாழ்' என்ற சொல்லிலிருந்துதான் சிங்கள யாழுவ பிறந்தது என்றும் இங்ஙனம் 4000 பதங்கள் சிங்களத்துக்கும், தமிழுக்கும் பொதுவானவை என்பதை பல அறிஞரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் ஆதாரத்துடன் எடுத்துக் காட்டியுள்ளார்.

1981.06.01 நடு இரவில் அப்போதுள்ள யாழ்.நூலகம் விலைமதிப்புக்குரிய 97000 நூல்களுடன் தீக்கிரையாக்கப்பட்டது. யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி மேன்மாடிக் கட்டடத்திலுள்ள மேற்குப் பக்க அறையில் வாழ்ந்து கொண்டிருந்த 74 வயதுடைய தாவீது அடிகள் இதனைக் கண்ணுற்றதும் பேரதிர்ச்சியினால் உயிர்துறந்தார். யாழ்.நூலகத்தை உருவாக்கினாலும், நடமாடிய பல்கலைக்கழகமாகிய தாவீது அடிகளை யாரால் உருவாக்க முடியும்.



நாளை தாவீது அடிகளின் 31 ஆவது நினைவு தினம் ஆகும்

பிதா லோங், தாவீது அடிகள் ஆகிய பேரறிஞர்களின் ஆன்மா சாந்திபெற, யாழ் நூலகம் உயிரூட்டம் பெற அரசும், தமிழ் மக்களும் பங்கெடுப்பது முக்கிய கடமையாகும்.

யாழ்.நூலகத்தில் ஒரு பகுதியில் தமிழ் ஆய்வு அகம் உருவாக்கப்பட்டு, நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், தமிழ்த்தூதர் கலாநிதி தாவீது அடிகள் ஆகியோரின் சகல ஆய்வு நூல்களும், ஏனைய அறிஞர்களின் ஆய்வுக்குரிய நூல்களும் இடம்பெறச் செய்வதனால் தாவீது அடிகளின் பணி தொடர வழி பிறக்கும்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கு உழைத்துப் பலியான தாவீது அடிகளைக் கௌரவித்து அரசு முத்திரை வெளியிட வேண்டும். யாழ். பல்கலைக்கழகம் புத்தி ஜீவிகளின் குழு மூலம் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி முற்றுப்பெற வழி செய்வது தமிழ் அன்னைக்குச் செய்யும் முக்கிய பணியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்தூலத்தை விடு சூட்சுமத்தைப் பிடி

வடமொழியில் சூட்சுமம் என்றொரு சொல் உண்டு. ஸ்தூலம் என்றால் வெளிப்படையாகத் தெரியும் பருப்பொருள். அதன் இரகசியம் அடங்கிய நுண்பொருளே சூட்சுமம். உடல் ஸ்தூலமானது என்றால் உயிர் சூட்சுமம்.

பிரபஞ்சத்தின் பிரமாண்டத்தை ஸ்தூலமாகப் பார்த்து சிலர் பிரமிப்பார்கள். இது தண்ணீர், நிலம், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயத்தின் கூட்டு என்று அதன் சூட்சுமத்தைச் சிலர் மட்டுமே அறிவார்கள்

ஸ்தூலத்தைப் பார்த்துப் பிரமிப்பது சிறுபிள்ளைத்தனம். சூட்சுமத்தைக் கண்டு பிடிப்பது அறிவுடைமை. ஞானம்.

ஷீரடியில் ஒரு பாபா வாழ்ந்தார். ஷீரடி சாயிபாபா அவர், பள்ளிக்கூடம் சென்றதில்லை. பாடம் படித்ததுமில்லை. ஆனால் மகாஞானி. எப்படி? ஸ்தூல விடயங்களை விலக்கி சூட்சுமத்தை விளங்கி நுட்பமாகக் கற்கும் தெளிவு அவருக்கு நிறையவே இருந்தது.

படித்த மகா பண்டிதர் ஒருவர் அவரிடம் அடிக்கடி சர்ச்சை செய்வார். தாம் படித்தவர் என்கிற மெல்லிய அகம்பாவம் அவருக்கு அதிகமாகவே உண்டு. அவரிடம் பகவத்கீதையின் ஒரு ஸ்லோகத்துக்கு அர்த்தம் கேட்டார் ஷீரடி சாயிபாபா. மெத்தப் படித்த தம் மேதாவிலாசம் விளக்கி விளக்கவுரை சொன்னார் அவர்.

பாபா மிக அமைதியாக அவற்றை மறுத்து மிக ஆழமான உரை விளக்கம் சொல்லத் தொடங்கியதும் பண்டிதர் திகைத்துவிட்டார். தாம் படித்த எந்தப் புத்தகத்திலும் இல்லாத ஆழமான விளக்கத்தை அக்குவேறு ஆணிவேறாகக் கூறிமுடித்தார். பள்ளிக்கூடம் செல்லாத பக்கிரி இப்படிப் பேசுகிறாரே என்று பண்டிதர் வியப்படைந்தார்.

"பாபா... இந்த விளக்கங்களை எங்கே படித்தீர்கள்? எப்போது படித்தீர்கள்?" என்று அசட்டுத்தனமாகக் கேட்டார். பாபாவோ "சொன்னவனே நான்தானே! கண்ணனாக அன்று கீதை சொன்ன நான் எங்கு போய் யாரிடம் படிக்க?" என்றார்.

ஷீரடி சாயிபாபா கிருஷ்ணனின் அவதாரம் என்று சொல்லி விடக் கூடாது.

இதற்கு என்ன பொருள்? கீதை விளக்கம் சொல்கிறவன் தான் தானாகவே இருந்தால் கீதை விளங்காது. அவன் கிருஷ்ணனாக மாறினால்தான் அதன் சூட்சுமம் விளங்கும். இன்று கீதை போதிக்கிற பலரும் தன்னுடைய 'தான்' என்கிற எண்ணத்தை விடுவதில்லை. அதனால் கீதை விளங்குவதில்லை.

கீதை சொல்கிறவன் கண்ணனாக இருந்தால், கேட்பவன் அர்ச்சுனனாக இருந்தால் கீதையின் நுட்பம் விளங்கும். இது ஒரு சூட்சுமம்.

இன்னும் எளிமையாக இதை விளக்குகிறார் ஓஷோ. "பரப்பிரம்மம் பற்றி என்ன விளக்கினாலும் நமக்கு விளங்குவதில்லை. நாம் பரப்பிரம்மம் ஆனால் மட்டுமே அது விளங்கும். அந்த உணர்வு வராதவரை முழுமையாகக் கடவுளை விளங்கிக் கொள்ள முடியாது.

இதற்கு ஓஷோ சொன்ன கதை சுவையானது. ஒருவர் தம் கழுதையைக் காணாமல் தேடிக்கொண்டிருந்தார். எங்கு தேடியும் கிடைக்கவில்லை. மனம் சோர்ந்து போய் அமர்ந்துவிட்டார். அந்த வழியாக வந்த சாதுவிடம் தன் குறையைச் சொல்லி அழுதார்.

கொஞ்ச நேரம் அது எங்கு போய் இருக்கும் என்று யோசித்த சாது விடை தெரியாமல் தவித்தார். திடீர் என்று கை, கால்களை உதைத்துக்கொண்டு கழுதை போன்றே கத்திக்கொண்டு மண்ணில் புரண்டார். திடீரென்று விழுந்தடித்துக் கொண்டு ஓடிப்போய் ஒரு குப்பை மேட்டருகில் நின்றார். என்ன அதிசயம்! குப்பையில் இருந்து காணாமல் போன கழுதை மீண்டு எழுந்து துள்ளி இவரை நோக்கி ஓடி வந்தது.

கழுதையின் சொந்தக்காரருக்கு ஒன்றும் விளங்கவில்லை. "எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?" என்று கேட்டார். "நான் மனிதனாக இருந்து யோசித்துப் பார்த்தேன். விளங்கவே இல்லை. திடீர் என்று மனசால் கழுதையாக மாறி கழுதையாகவே புரண்டேன். அப்போது இந்தக் கழுதை எங்கே போயிருக்கும் என்பது புரிந்து விட்டது" என்றார்.


கழுதையால்தான் கழுதையைப் புரிந்து கொள்ள முடியும். கடவுளானால் கடவுளைப் புரிந்து கொள்ளலாம்...இதுதான் சூட்சுமம்.



சுகி.சிவம்



# ஆரம்பம் முதலே தரம் மிக்கதாக விளங்கும் வேலணை கிழக்கு அ.த.க. பாடசாலை



காங்கேசு வாத்தியார் என மக்கள் மரியாதையுடன் அழைக்கும் கந்தர் காங்கேசு வேலணை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த சிறார்கள் தமது கல்விக்காக மேற்கே உள்ள சைவப் பிரகாச வித்தியாசாலைக்கோ அல்லது வங்களாவடி சரஸ்வதி வித்தியாசாலைக்கோ செல்ல வேண்டிய நிலை இருந்தது.

நீண்ட தூரத்தில் இருக்கும் இந்தப் பாடசாலைகளுக்கு தமது பகுதியைச் சேர்ந்த பிள்ளைகள் நடந்து சென்று திரும்பும் நிலை இருந்ததால் அனேகபிள்ளைகள் தமது கல்விக்காக பாடசாலைகளுக்குச் செல்லாது இருந்தனர். இதனை அவதானித்த இவர் தமது பகுதியிலேயே ஒரு பாடசாலையை அமைத்து அவர்களது கல்விக்கு உதவ வேண்டும் என்று மனவுளம் கொண்டார்.

தனது சொந்தக் காணியில் சொந்தச் செலவில் கொட்டில்களை அமைத்தும் வேண்டிய தளபாடங்களைச் செய்வித்தும் முடிந்த வரை அன்றைய சூழ்நிலையில் பாடசாலைக்கு என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் ஏற்படுத்திக் கொடுத்தார்.

மேலதிக தேவைகளை நிறைவேற்ற சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமியின் உதவிகளை நாடியும் பாடசாலையை நல்ல முறையில் அமைத்து அந்தப்பிரதேச கல்வி வளர்ச்சிக்கு காரணராக விளங்கினார்.

தனது 17½ பரப்பு காணியை இதற்கென இலவசமாக வழங்கியிருந்தார். 1946 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி வேலணை கிழக்கு அரசினர் தமிழ்கலவன் பாடசாலை என்ற பெயருடன் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி உத்தியோகபூர்வமாக இதனை ஆரம்பித்து வைத்தார். பாடசாலையின் தலைமை ஆசிரியராகக் காங்கேசு நியமிக்கப்பட்டதுடன் உதவி ஆசிரியர்களாக ம.க.சுப்பிரமணியம் க.இராசையா பண்டிதர் உட்பட 6 பேர் பணியாற்றினார்கள். ஆரம்ப காலத்தில் 180 மாணவர்கள் வரை இங்கே இணைந்து தமது கல்வியைப் பெற்றுக் கொண்டனர்.

இந்தப் பகுதியில் ஆரம்பம் முதலே மிகவும் சிறந்த தரம்மிக்க பாடசாலையாக இது வளர்ச்சி கண்டதால் தூர இடங்களில் உள்ள மாணவர்களும் இங்கே சேர்ந்து கொள்வதில் மிகுந்த நாட்டம் கொண்டதால் மாணவர்களின் வரவு மேலும் அதிகரித்தது. இதனால் மாணவர்களின் வரவுக்கேற்ப கட்டடங்களும் விஸ்தரிக்கப்பட்டன.

ஊர்காவற்றுறை பிரதிநிதியாக விளங்கிய ஏ.எஸ். தம்பிஐயா 1951 ஆம் 1952 ஆம் ஆண்டுகளில் இரண்டு நிரந்தரக் கட்டடம் அதிபருக்காக விடுதி என்பவற்றை அமைத்துக் கொடுத்தார். 1955 இல் தலைமை ஆசிரியராக இருந்து பாடசாலையை அமைத்து சிறந்த முறையில் வழி நடத்திச் சென்றவரான காங்கேசு இடமாற்றம் பெற்றுச் செல்ல காரை சுந்தரம்பிள்ளை இந்தப் பாடசாலையின் அதிபரானார். ஸ்தாபகரும் அதிபருமான காங்கேசுவின் அபிலாசைகளை அவரது எதிர்பார்ப்புக்களைப் புரிந்து கொண்ட காரை சுந்தரம் பிள்ளை அதற்கேற்ப தனது காலத்தில் சிறப்பாகச் செயற்பட்டார். 5 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் காங்கேசு இங்கே அதிபரானார்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் இங்கேயே தமது இடைநிலைக் கல்வியையும் பெற வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டியதால் படிப்படியாக தரம் உயர்த்தப்பட்டது.

> 1946 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி வேலணை கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை என்ற பெயருடன் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி உத்தியோகபூர்வமாக இதனை ஆரம்பித்து வைத்தார். பாடசாலையின் தலைமை ஆசிரியராகக் காங்கேசு நியமிக்கப்பட்டதுடன் உதவி ஆசிரியர்களாக ம.க.சுப்பிரமணியம் க.இராசையா பண்டிதர் உட்பட 6 பேர் பணியாற்றினார்கள்.

லக்ஸ்மன்

1969 இல் தரம் ஒன்று தொடக்கம் தரம் 8 வரையுள்ள கனிஷ்ட மகாவித்தியாலயமாக உயர்த்தப்பட்டது. இந்தக் காலங்களில் வேலணை மத்திய கல்லூரியில் இட நெருக்கடி ஏற்பட்டது. இந்தநிலையில் இந்தப் பாடசாலைச் சூழலில் உள்ள மாணவர்கள் இங்கேயே தமது உயர் கல்வியையும் பெற வேண்டும் என்று பெற்றோர்கள் விருப்பம் கொண்டனர்.

எனவே பெற்றோர் ஆசிரியர் சங்கம் மேற்கண்ட விடயங்களைக் காரணம் காட்டி இந்தப் பாட சாலையை மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்த வேண்டும் என ஊர்காவற்றுறை பிரதிநிதி வ.நவரத்தினத்திடமும் கல்வித் திணைக்களத்திடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக்கோரிக்கை நியாயபூர்வமானது என்பதை உணர்ந்த நவரத்தினம் 1970 இல் இந்தப் பாடசாலையை PROPOSE MAHA VIDYALAYAமாகத் தரம் உயர்த்த உதவினார். இந்தக் காலத்தில் தரம் 9,10 வரை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து பாலசிங்கம், க.சிவராமலிங்கம், க.கைலாசபிள்ளை, ஜோ.வடிவேல், திருமதி சி.மாணிக்க வாசகர், பொ.சிவலிங்கம், வி.சிவராசா, வ.பத்மநாதன், க.குமரேஸ்வரநாதன் ஆகியோர் அதிபர்களாக இருந்துள்ளனர். இன்றைய அதிபராக திருமதி ஜெயதேவி ஸ்ரீஸ்கந்தராஜா கடமையிலுள்ளார்.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் நவரத்தினம் பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினரான ச.மாணிக்கவாசகர் ஆகியோரது முயற்சியினால் 1972இல் வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் என்ற அந்தஸ்துக்கு இது உயர்த்தப்பட்டது. பாடசாலையின் வேகமான வளர்ச்சிக்கு அதிபர் சிவராமலிங்கம் ஆசிரியர் மாணிக்கவாசகர் பெரும்பங்கு வகித்துள்ளனர். விஞ்ஞான கூடம், நூலகம் என்பன இவர்களின் முயற்சியினால் அமைக்கப்பட்டன.

தேவையான தளபாடங்கள், கருவிகள், உபகரணங்கள், நூல்கள் என்பனவற்றைத் திணைக்களத்திடமும் வேறு நலன் விரும்பிகளிடமும் பெற்றுக்கொடுப்பதில் மாணிக்கவாசகர் முன்னின்று செயற்பட்டார். அதனால் 1974 இல் சகல வளங்களையும் கொண்டு ஐநூறுக்கும் அதிகமான மாணவர்களுடன் இந்தப் பிரதேசத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக இது விளங்கியதுடன் பொதுப்பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேறுகளைக் கொண்டதாகவும் இருந்தது.

இந்தக்காலத்தில் ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களின் உன்னதமான சேவை இதற்கு ஊன்றுகோலாக விளங்கியது என்பதை பெருங்குளம் பகுதியில் உள்ள மக்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இரத்தினபுரியில் வாகன நெரிசல்

## கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

இரத்தினபுரி, மே 31

இரத்தினபுரி நகரின் போக்குவரத்து வீதிகளில் வாகன நெரிசல் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர் என்று விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதிகளின் இரு புறங்களிலும் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளதன் காரணத்தினாலும் பிரதான வீதியில் செல்லும் போக்குவரத்து வாகனங்களின் நெரிசல் காரணமாகவும் பொதுமக்களுக்கு நடப்பதற்கு சிரமங்கள் ஏற்படுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வாகன நெரிசல் காரணமாக மஞ்சள் கோட்டு கடவையில் செல்லும் பொதுமக்கள் பயத்துடனேயே செல்ல வேண்டியுள்ளது. அண்மைக்காலமாக இரத்தினபுரி நகரில் மஞ்சள் கோட்டு கடவையிலும் வாகன விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

எனவே இரத்தின புரி நகரில் வாகன நெரிசலை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## குடிதண்ணீர் பெறுவதில் தோட்ட மக்கள் சிரமம்

### நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை

நுவரெலியா, மே 31

நுவரெலியா மாவட்டத்தில் காசல்றீ நீர்தேக்கப் பகுதியில் அமைந்துள்ள காசல்றீ தோட்டத்தில் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரமத்துக்கு உள்ளாவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குடியிருப்புகளுக்கான குடிதண்ணீர் மலைப்பகுதி ஊற்றுக்கள் மூலம் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தாங்கிகளில் சேர்ந்து செல்கின்றது.

காசல்றீ தோட்டத்தின் சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு அண்மையில் அமைந்துள்ள இந்த நீர்த் தாங்கியில் இருந்து சுமார் 20 வீடுகளுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது.

குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்காக அவரவர் தனித்தனியாக குழாய்களை பொருத்தியதால் தாங்கியில் குடிதண்ணீர் இல்லாது போயுள்ளது. இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள், வேலைக்குச் செல்பவர்கள், வீட்டில் இருப்பவர்கள் என அனைவரும் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் தமக்கான குடிதண்ணீரைப் பெற்றுதர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் வேண்டுக்கோள் விடுக்கின்றனர். (ச)



கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் புதிய அதிபராக கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஏ.ஆதம்பாவா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார். பதில் அதிபராகக் கடமையாற்றிய எம்.எஸ்.எம்.ஹம்ஸா தனது பொறுப்புக்களை புதிய அதிபரிடம் கையளித்தார்.

# பட்டதாரிகள் குறித்துப் பேச முதல்வருக்கு தகுதியுண்டா?

## கிழக்கு மாகாண பட்டதாரிகள் சங்கம் கேள்வி

அம்பாறை,மே31

பட்டதாரிகளைப் பற்றிக் பேசுவதற்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனுக்கு கல்வி தொடர்பாக என்ன தகுதி இருக்கின்றது என்று கிழக்கு மாகாண பட்டதாரிகள் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 25ஆம் திகதி அரச பத்திரிகையில் கிழக்கு மாகாண முதலமைச்சரால் மட்டு. வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலையில் இடம்பெற்ற மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் விழாவில் ஆற்றப்பட்ட உரை தொடர்பான செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியில் பட்டதாரிகளை அவமானப்படுத்தும் வகையில் தரக்குறைவாக கருத்து வெளியாகியுள்ளது. அது வேலையற்ற பட்டதாரிகள் போட்டிப் பரீட்சையில் 40 புள்ளிகளுக்கும் குறைவாக எடுக்கின்றனர். வேலையற்ற பட்டதாரிகள் ஆசிரியர் நியமனங்களை மட்டுமே கோருகின்றனர். பட்டதாரிகளுக்கு தொழில் நுட்ப அறிவு, பொது அறிவு இல்லை. பட்டதாரிகள் அரச நியமனம் வழங்கத் தகுதியற்றவர்கள் என்று அவரது உரையில் கூறப்பட்டது.

இவரின் இந்தக் கூற்று முற்றிலும் தவறான கூற்றாகும். இது அவர் தமக்குரிய பதவியை மறந்து இவ்வாறு கூறுவது மட்டுமின்றி பல இடங்களிலும் பட்டதாரிகளை அவமானப்படுத்தியுள்ளார்.

ஒரு சில பட்டதாரிகளை வைத்துக்கொண்டு ஒட்டுமொத்த வேலையற்ற பட்டதாரிகளையும் ஒப்பிடுவது கவலைக்குரிய விடயமாகும். பட்டதாரிகள் ஆசிரியர் நியமனங்களை மட்டும் கோரவில்லை. கடந்த காலம் எம்மால் முதலமைச்சருக்கு அனுப்பப்பட்ட மனுவில் 9 வகையான பல வகைப்பட்ட கல்விக்கு ஏற்ற தொழில் வாய்ப்பையே கோரியுள்ளோம்.

தகுதிக்குரியவர்கள் என்றுதான் எங்களுக்கு பல்கலைக்கழகங்கள் பட்டம் தந்துள்ளன. இதேபோன்று அரசியல்வாதிகளும் பட்டதாரிகளைப் பற்றி குறை கூறும் வகையில் தமது கருத்துக்களை வெளியிடல் கண்டனத்துக்குரியதாகும்.

எமக்குத் தகுதி இல்லையென்று கூறுபவர்கள் எமக்குத் தகுதியை பெற்றுக் கொள்வதற்கான தொழில் பயிற்சிகளை வழங்க முன்வரவில்லை. எதிர்காலத்தில் அரசியல்வாதிகள் இவ்வாறு பட்டதாரிகளைப் பற்றி குறைகூறுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

### கல்வித் துறையில் 5 விடயங்களில் மாற்றம்

அட்டாளைச்சேனை, மே 31

கல்வித்துறையில் இந்த வருடத்திலிருந்து ஐந்து பிரதான விடயங்களில் மாற்றங்களை மேற்கொள்ளவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை கல்வியியல் கல்லூரியின் 20 ஆவது ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொழில்நுட்பம், ஆங்கிலம், விஞ்ஞானமும் கணிதமும், அழகியற் கல்வி, விளையாட்டு ஆகிய விடயங்களிலே மாற்றங்களை மேற்கொள்ள வுள்ளோம்.

இவைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி எமது மாணவர்களுக்கான கல்வியை வழங்கும் போது, மாணவர்களை எல்லாவற்றுக்கும் ஏற்றாற்போல் இந்த நாட்டின் சிறந்த மக்களாக மாற்ற முடியும். - என்றார்.

### பிபில காட்டுத் தீ: 25 ஏக்கர் நாசம்

மொனராகலை - பிபில பகுதியிலுள்ள நில்கலா காட்டில் பரவிய தீயினால் 25 ஏக்கர் காடு எரிந்து நாசமாகியுள்ளது.

இந்தத் தீயை அணைக்க தீயணைப்புப் படையினர், வனவள அதிகாரிகள் முயற்சி எடுத்தபோதிலும் தீ தொடர்ந்தும் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

### கைக்குண்டு மீட்பு

கண்டி, மே 31

கண்டி வாவியிலிருந்து கைக்குண்டு ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கண்டி பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. வாவியில் படகுகள் நிறுத்தப்படும் இடத்துக்கு அண்மையில் இருந்து இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

இந்தக் கைக்குண்டை இராணுவத்தினர் செயலிழக்கச் செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

## நுவரெலிய தமிழ் மாணவிகளுக்கு ஆசிரியையால் அச்சுறுத்தல்

நுவரெலியா,மே 31

நுவரெலியாவில் நல்லாயன் மகளிர் கல்லூரியில் அண்மைக்காலமாக தமிழ் மாணவிகள் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஆசிரியை ஒருவரினால் அச்சுறுத்தப்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலையின் அதிபரும் ஒரு சிங்களவராவார். அங்கு தமிழ், சிங்கள மொழிகள் இரண்டிலுமே பாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பாடசாலையில் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ, கத்தோலிக்க, பௌத்த மதங்களைச் சார்ந்த ஆயிரக்கணக்கான மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். எனினும் தமிழ் மாணவிகள் நெற்றிப் பொட்டு வைக்கக் கூடாது என்று குறித்த ஆசிரியையால் அச்சுறுத்தப்படுகின்றனர். வர்கள் பொட்டு வைத்துக் கொண்டு வந்தால் பலவந்தமாக குறித்த ஆசிரியையால் அழிக்கப்படுகின்றது என்று பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து கல்விதுறை சார்ந்த தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அன்பு, நட்பு, ஒற்றுமை கண்ணியம் என்பவற்றுடன் மதங்களையும் இனங்களையும் மதிக்கும் பண்புகளை கற்பிக்கும் பாடசாலையில் இவ்வாறான இனவாதப் போக்கு கடைப்பிடிக்கப்படுவது வருந்தத்தக்க விடயமாகும் என்று பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர். (ச)

## வரட்சியான காலநிலையால் மட்டுப்பட்டது குடிதண்ணீர்

கண்டி, மே 31

வரட்சியான காலநிலையை அடுத்து மத்திய மாகாணத்தில் பல பகுதிகளுக்கான குடிதண்ணீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நீர் நிலைகளில் நீர் வற்றியுள்ளதால் குறித்த பிரதேசங்களுக்கு குடிதண்ணீரைப் விநியோகிப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மத்திய மாகாண பொது முகாமையாளர் லக்ஷ்மன் அத்தநாயக்க தெரிவித்தார்.

குடிதண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளமையால் கண்டி மாவட்டமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

நீர் நிலைகளில் முழுமையாக நீர் வற்றியுள்ளதால் குடிதண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்துமாறு பொதுமக்களிடம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளர் வேண்டுக்கோள் விடுத்துள்ளார். (ச)

## கணவரைத் தாக்கிவிட்டு மனைவியின் தாலி அபகரிப்பு

### கொள்ளையர்களில் மூவர் பொலிஸாரிடம் சிக்கினர்

நாவிதன்வெளி, மே 31

நாவிதன்வெளி பிரதேசத்தில் கொள்ளையர்களால் வீரச்சோலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் எஸ். திருச்செல்வம் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். அத்துடன் அவரின் மனைவியின் தாலியையும் அவர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.

அதிபரும், மனைவியும் கடந்த திங்கட்கிழமை இரவு 7.30 மணிக்கு நாவிதன் வெளி, 11ஆம் கிராமத்தில் இருந்து சேனைக்குடியிருப்பு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது பழைய வைக்கோல் தொழிற்சாலைக்கு அண்மையில் மோட்டார் சைக்கிளுக்கு ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக அதனை உருட்டிச் சென்று கொண்டிருந்தனர். அப்போது சந்திக்கு அண்மையில் நின்ற நான்கு பேர் அதிபருடன் உரையாடுவது போல் பாசாங்கு செய்து அவரைப் பொல்லால் தாக்கினர். அத்துடன் அவரின் மனைவின் தாலியையும் அறுத்ததுடன் அதிபரின் கையடக்கத் தொலை பேசியையும் எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை [illegible] பொலிஸாரும், பொதுமக்களும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு கொள்ளையர்களில் மூவரை மடக்கிப் பிடித்துள்ளனர். கொள்ளையர்களில் ஒருவர் தப்பி ஓடியுள்ளார்.

கைது செய்யப்பட்ட கொள்ளையர்கள் மூவரும் சவளக்கடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தாக்கப்பட்ட அதிபர் கல்முனை [illegible] ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச)

## வீடுகள் கையளிப்பு

மட்டக்களப்பு,மே 31

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆயித்தியமலை தெற்கு கிராமத்தில் போரால் பாதிக்கப்பட்டு மீள்குடியமர்ந்த மக்களுக்கு எஹெட் கரிதாஸ் நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட 45 வீடுகள் கையளிக்கப்பட்டன.

இரண்டு கோடி 25 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த வீடுகளில் மழை நீர் சேகரிப்புத் தாங்கிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மக்களுக்கான வீடு கையளிப்பு நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.விமலநாதன், கரிதாஸ் நிறுவனத்தின் தேசிய இயக்குநர் ஜோர்ஜ் சிகாமணி, வவுணதீவு பிரதேச செயலாளர் கே.தவராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். சந்திக்க நினைத்த நபர் ஒருவர், எதிர்பாராத விதமாக உங்களை வந்து சந்திப்பார். பணம் வரும். செலவுகள் கூடுதலாக இருக்கும். அலுவலகப் பணிகளில், முன் யோசனையுடன் செயற்படுங்கள். உறவினர்கள் வழியிலும், உதவிகள் கிடைக்கும். வியாபாரிகள் பணச் சிக்கல்களில் இருந்து விடுபடுவர்.

**இடபம்:** மரியாதை நிமித்தமாக சிலரின் சந்திப்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். சில பணிகளை மனதில் கொண்டு விரைவாகச் செயற்பட திட்டமிடுவீர்கள். ஓரளவுக்கு உங்களின் திட்டம் நிறைவேறும். பணி முடிந்த போதும், பண வரவு சற்று தாமதப்படும். குழந்தைகளின் எதிர்கால நலனுக்காக சில முன்னேற்பாடுகளை மேற்கொள்வீர்கள்.

**மிதுனம்:** சில அசௌகரியங்கள் தவிர்க்க இயலாது. செலவுகளில் கவனம் தேவை. எதிர்பார்த்த வரவுகள் வரும். சில செலவுகளுக்காக, கடன்களை எதிர்பார்க்க வேண்டிய சூழ்நிலையே. வங்கி மற்றும் அரச வகையில் உள்ள தொடர்புகளை, மிகவும் கவனமுடன் கொண்டு செல்லுங்கள். பணியாளர்கள் தேவையற்ற பேச்சுக்கள் மற்றும் விவகாரங்களை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

**கடகம்:** சந்தோஷமோ, தொந்தரவோ எதுவும் நீங்கள் ஏற்படுத்திக் கொண்டதாக இருக்கும். நிதானித்துச் செயற்படுங்கள். கையில் இருக்கும் பணத்திற்கு, தகுந்த செலவுகளை மேற்கொள்வது நல்லது. குடும்பம் சம்பந்தப்பட்ட வகையில், சிற்சில மனச்சங்கடங்கள் ஏற்பட்டபோதும் பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள்.

**சிங்கம்:** உங்களின், தேவையற்ற சிந்தனை மற்றும் எண்ணங்களால் வீண் செலவுகள் ஏற்படும். வீட்டில் தாங்கள் காரணமற்ற கோபம் கொண்டாலும், சில நிமிடங்களில் சமாதானத்தை ஏற்படுத்துவீர்கள். தொழிலில், கவனம் இருக்கட்டும். அடுத்தவர்களின் விவகாரங்களில் தலையிடாதீர்கள். வரவுகள் தாமதப்படும்.

**கன்னி:** பெண்கள் வழியில் சந்தோஷம் தரும் செய்தியைக் கேட்கலாம். இருக்கும் பணத்தை ஆடம்பரமாகச் செலவு செய்து விட்டு, பின்னர் கவலை அடைவீர்கள். வேலையில் கடுமை காணப்படும். சிலரைச் சந்திக்க முற்பட்டு அது முடியாமல் போகலாம். இழுபறிகள் நேரும்.

**நாளை**

வைகாசி 19 வெள்ளிக்கிழமை 01.06.2012
திதி: துவாதசி பி.இ 12.33 வரை
நட்சத்திரம்: சித்திரை பி.ப 04.21 வரை
சுபநேரம்: 05.52- 07.22 வரை
ராகு காலம்: 10.22- 11.52 வரை

**துலாம்:** எந்தக்காரியத்தையும், குழப்பம் இல்லாமல் தெளிவாகச் செய்து முடிப்பீர்கள். நண்பர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். சகோதரர்கள் தொடர் பான விடயங்களில் நினைத்தது நடப்பது கடினமே. சக ஊழியர் ஒருவரின் மூலம் புதிய நண்பர் அறிமுகம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணவரவு ஒன்று தாமதமாகும். குழந்தைகளின் விவகாரங்களுக்காக அலைச்சல் இருக்கும். தொழிலில், அவசரமாக ஒரு சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். பணியில் தெரிந்தே தவறுகளைச் செய்வீர்கள் கவனம். மாலையில், நண்பரின் சந்திப்பு மன மகிழ்ச்சியை தரும்.

**தனுசு:** சிலர் மீது கோபம் கொண்டாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள். ஒரு உறவினரிடம் கேட்டு கிடைக்காத உதவி, மற்றொரு உறவினரிடம் கிடைக்கலாம். மனைவி, பிள்ளைகளின் சின்னச் சின்ன விருப்பங்களை நிறைவேற்றி வைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்கும் நாள். எந்த வேலையையும் முடியாது என சொல்லாமல் முடிக்க முற்படுவீர்கள். தந்தையுடன் வாக்குவாதங்கள் ஏற்படலாம். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். சிறிய வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**கும்பம்:** உங்களின் வார்த்தைகளில் நகைச்சுவை அதிகரிக்கும். காரியங்களை உரிய நேரத்தில் செய்து முடிக்கத் திட்டமிட்டு செயற்படுவீர்கள். புகழ், செல்வாக்கு அதிகரிக்கும். உறவுகளால் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரின் நம்பிக்கையைப் பெறுவர்.

**மீனம்:** சில தகவல்கள் குழப்பங்களை ஏற்படுத்தும். அலுவலகப் பணிகளில், சில நபர்களின் செயல்பாடுகள் அதிகம் யோசிக்க வைக்கும். பொருட்படுத்திக் கொள்ளாதீர்கள். குடும்பத்தில், சுப நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளை தீவிரப்படுத்துவீர்கள். விட்டுப்போன உறவுகளை, மீண்டும் புதுப்பிக்க முற்படுவீர்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | | 4 | | 8 | 7 | | |
| | | | | | | 5 | | |
| 9 | 4 | | | 7 | | 8 | 2 | 6 |
| | 5 | | 7 | | | | | 8 |
| | | | 2 | 8 | 4 | | | |
| 8 | | | | | 9 | | 7 | |
| 5 | 3 | 4 | | 1 | | | 8 | 2 |
| | | 2 | | | | | | |
| | | 7 | 9 | | 5 | | 1 | 3 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 5 | 7 | 9 | 2 | 6 | 1 | 4 |
| 9 | 4 | 1 | 3 | 5 | 6 | 8 | 7 | 2 |
| 2 | 6 | 7 | 4 | 1 | 8 | 3 | 9 | 5 |
| 7 | 1 | 6 | 8 | 2 | 3 | 4 | 5 | 9 |
| 4 | 5 | 9 | 6 | 7 | 1 | 2 | 3 | 8 |
| 8 | 2 | 3 | 5 | 4 | 9 | 1 | 6 | 7 |
| 6 | 9 | 4 | 2 | 3 | 5 | 7 | 8 | 1 |
| 5 | 3 | 2 | 1 | 8 | 7 | 9 | 4 | 6 |
| 1 | 7 | 8 | 9 | 6 | 4 | 5 | 2 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 * 03 * 1973

மறைவு 12 * 06 * 2011

### அமரர் வைரமுத்து தயாமோகன்

(பொதுச்சுகாதார பரிசோதகர், உளநலப்பிரிவு, வவுனியா)

குடும்பத்தின் குல விளக்காய், அன்பின் இருப்பிடமாய்;
பண்பின் உறைவிடமாய்-திகழ்ந்த எம் இனிய உறவே!
நீங்கள் மீளாத்துயில் கொண்டு ஓராண்டு ஓடி மறைந்து
விட்டதென்று நம்பமுடியவில்லை. எம் மனதின் சோகம்
ஆழ்கடல் போல இருந்தாலும் நாளும் பொழுதும் எம் இதயத்தில்
அகல்விளக்காய் பிரகாசித்துக் கொண்டு இருக்கின்றீர்கள்
ஆற்றுவார் தேற்றுவார் பலர் இருந்தும் அனலிடைப்பட்ட
புழுவாய் துடிக்கும் எங்களுக்கு உங்களுக்கு ஒப்பாக
யாரைத் தான் காணமுடியும் ......

முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று (31.05.2012) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தாய்,
மனைவி, பிள்ளைகள்,
மாமனார், உறவினர்கள்.

(18351)(6,9,10)

## மீளா நினைவுகளுடன் 45 ஆம் நாள் அஞ்சலி

மலர்வு
12.10.1984



உதிர்வு
17.04.2012

### சந்திரசேகரம் பாலப்பிரவின்

வடமராட்சியில் மலர்ந்த மலரொன்று
கனடாவில் உதிர்ந்து மடிந்தது.
உடுப்பிட்டியிலிருந்து பாலறாவாயனாய் சென்ற நீ,
இன்று எங்கே சென்று விட்டாய்?
பால கனாய் சென்ற பாலப் பிரவினே
நீ,
மணவறையில் பாலறுகு வைப்பதற்கு
மீண்டும் வருவாய் என்றே நாம்
மகிழ்ந்திருந்தோம்.
ஆனால் நடந்ததோ.......
நினைக்கவே முடியவில்லை எம்மால்......
எங்கே சென்று மறைந்தாய்
பாலப்பிரவினே-
உனக்கு என்ன நடந்தது?
எப்படி நடந்தது?
ஏன் நடந்தது?
ஏங்கித் தவிக்கும் எங்களுக்கு எழுந்திருந்து
சொல்லும் ஐயா!

"பிறந்தவர் ஒரு நாள் இறந்தே ஆக வேண்டும் என்பதே நியதி" என் றெண்ணி, செல்வச் சந்நிதி முருகன் திருவடியில் உறைந்திருப்பாய் என, ஆறுதல் அடைந்தாலும்.

கனத்த இதயத்துடன்
திருமதி வள்ளியம்மா- முருகேசு (அம்மம்மா)
திரு. சிவச்செல்வம் (பெரியப்பா),
குடும்பத்தினர்.

போக்காலை வீதி,
உடுப்பிட்டி.

(18643) (45.6.9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிகளை விசாரணை செய்து விடுவிப்பதே அரசின் நோக்கம்

## அமைச்சர் சந்திரசிறி கஜதீர கூறுகிறார்

கொழும்பு,மே 31

புனர்வாழ்வு பெற்று வரும் முன்னாள் போராளிகளை முறைப்படி விசாரணை செய்து விரைவில் விடுவிப்பதே அரசின் நோக்கமாகும் என்று அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் அபிவிருத்தி அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் போராளிகளை சர்வதேச அழுத்தங்களினாலன்றி மனிதாபிமான ரீதியில் விடுவிப்பதே அரசின் இலக்காகும். உலகிலே இத்தகையானோரை விரைவாக விடுவித்துவரும்

**புனர்வாழ்வு அளிப்பதற்காக அரசு பொறுப்பேற்றவர்களில் தற்போது 698 பேரே உள்ளனர்.**

நாடு இலங்கைதான். புனர்வாழ்வளிப்பதற்காக அரசு பொறுப்பேற்றவர்களில் தற்போது 698 பேரே உள்ளனர்.

புனர்வாழ்வு பெற்று சமூகத்தோடு இணைந்துள்ளோர் மீண்டும் குற்றமிழைத்ததாக எந்த ஒரு பதிவும் இதுவரை இடம்பெறவில்லை. இது சிறந்த புனர்வாழ்வளித்தலுக்கு முன்னுதாரணமாக உள்ளது.



புணர்வாழ்வளிக்கப்பட்டோர் சமூகத்துடன் இணைக்கப்படும் திட்டத்தின் கீழ் நாளைமறுதினம் சனிக்கிழமை 75 பேர் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

எதிர்க்கட்சியினர் கூறுவது போல் அரசியல் சிறைக்கைதிகள் என எவருமில்லை. சகலரும் சமமானவர்களே. குற்றம் புரிந்தோர் அதற்காகத் தண்டனை பெறவே சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இவ்வாறான கைதிகள் 15 சிறைச்சாலைகளில் உள்ளனர். இவற்றில் மூன்று சிறைச்சாலைகளிலிருந்த 229 பேரே உண்ணாவிரதமிருந்தனர். ஏனைய அனைவரும் அத்தகைய செயல்களில் ஈடுபடவில்லை. இதனை வைத்து சில சக்திகள் அரசியல் தேட முனைகின்றனர் என்பது புலனாகிறது. அவர்களைப் பற்றி தவறான தகவல்களை வெளியிடுவது, அவர்களைத் தூண்டுவது, அதன் மூலம் இனவாதம் மற்றும் வன்முறை கலாசாரத்தை மீள உருவாக்குவதற்கே இத்தகைய செயற்பாடுகள் வழிவகுக்கும். - என்றார். (ச)

---

ஊழியர் சேமலாப நிதி துஷ்பிரயோகம்:

# பங்குச் சந்தை முதலீட்டில் நட்டம் லஞ்ச ஆணைக்குழுவில் முறையீடு

கொழும்பு, மே 31

4 பில்லியன் ரூபா வரையில் நட்டத்தை ஏற்படுத்திய ஊழியர் சேமலாப நிதியின் பங்குச்சந்தை முதலீட்டைப்பற்றி அனைத்து கம்பனி ஊழியர் சங்கம், லஞ்ச மற்றும் ஊழல் ஆணைக் குழுவிடம் முறைப்பாட்டைத் தாக்கல் செய்யவுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அரசு நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது. இதனால் இந்த மாதிரியான முதலீட்டுக்கான காரணங்களை அறிய ஏனையோர் தலையிடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. குற்றவாளிகள் இனங்காணப்பட்டு தண்டனை வழங்கப்படுவதை உறுதிசெய்யவும் இது தேவையாக உள்ளது என்று சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க கூறினார்.

தனியார் துறையில் உள்ள ஊழியர்களின் பணத்தை முதலீடு செய்யும் ஊழியர் சேமலாப நிதியத்தின் நடவடிக்கைகளில் ஊழல்கள் காணப்படுகின்றன. இதே போக்கு தொடருமாயின் தனியார் துறை ஊழியர்கள் வட்டியை மட்டுமன்றி முதலீட்டின் கணிசமான பகுதியையும் இழக்க நேரிடும் என்று அவர் கூறினார்.

ஊழியர் சேமலாப நிதியம் பங்குச்சந்தையில் 7.2 பில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளது. ஊழியர் சேமலாப நிதி மூலம் 2010 ஆம் ஆண்டில் 32.5 ரூபா விலையில் வாங்கிய கலதாரி ஹோட்டலின் பங்குகளின் விலை தற்போது 17 ரூபாவாக வீழ்ச்சி கண்டுள்ளது. கடந்த 6 மாதங்களில் மட்டும் ஊழியர் சேமலாப நிதியம் 1.3 பில்லியன் ரூபாவை பங்குச்சந்தை முதலீடுகள் மூலம் இழந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழியர் சேமலாப நிதியில் உள்ள பணம் அரசின் பணம் அல்ல. அது மக்களின் பணம். சட்ட விதிகளை அனுசரிக்காமல் வெளிப்படைத் தன்மை இல்லாமல் அதை நிர்வகிப்பவர்கள் யாரும் இதைப் பயன்படுத்த முடியாது என்று அவர் தெரிவித்தார். (ச)

---

# பாதுகாப்புச் செயலர் அரசியல்வாதியா?

## ஐ.தே.கட்சியின் உபதலைவர் கேள்வி

கொழும்பு,மே 31

அரச அதிகாரியாகவுள்ள பாதுகாப்புச் செயலாளர் அரசியல்வாதியா? என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் கே.வேலாயுதம் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாதுகாப்புச் செயலாளர் அரசியல்வாதிகள் போன்று நடந்துகொள்வது கண்டிக்கத்தக்கது. இவ்வாறானவர்களின் பொறுப்பற்ற கருத்துக்கள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் முயற்சிக்கு தடையாக இருக்கப் போகின்றது. வடக்குப் பிரதேசம் தமிழருக்கு மட்டும் உரிய இடம் அல்ல. யார் வேண்டுமானாலும் எங்கும் வாழலாம் என்பது உட்பட தமிழர் விவகாரம் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் யாழ்ப்பாணம் தமிழர் பிரதேசம் என அன்று தொட்டு இன்று வரை வரலாற்று ஆதாரங்களுடனான கருத்து நிலவிவருகின்றது.

வடக்கில் கணிசமான அளவு தமிழ் மக்களே வாழ்கின்றனர். இது உலகறிந்த உண்மையாகும். தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக்காணும் முயற்சிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அரச அதிகாரியான பாதுகாப்புச் செயலாளர் பொறுப்பற்ற விதத்தில் கருத்து வெளியிடுவதானது தீர்வுத்திட்ட முயற்சிகளுக்குத் தடையாகவே அமையும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்குமாறு அரசு அழைக்கின்றது. எனினும் இவ்வாறான நடவடிக்கைகள் தெரிவுக்குழு மீதான நம்பிக்கையை இல்லாதொழிக்கின்றது. தமிழ்த் தலைமைகளின் நம்பிக்கையை மழுங்கடிக்கச் செய்கின்றது.

இன்று வடக்கில் சிங்களக் குடியேற்றங்கள் அரங்கேற்றப்படுகின்றன. பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. இவ்வாறான செயல்கள் அமைதி முயற்சியைச் சீர்குலைப்பதாகவே அமையும்.

தமிழர்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்களில் பௌத்த மதத்தை கோலோச்சுவதற்கு எத்தனிப்பது ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும்.- என்றார்.



கோட்டை நாக விகாராதிபதி மாதுலுவாவே சோபித தேரரின் 70 ஆவது பிறந்த தின நிகழ்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர்கள் தினேஷ் குணவர்த்தன, பந்துல குணவர்தன, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

# அபிவிருத்திக்கு 3 ஆண்டுத் திட்டம்

கொழும்பு, மே 31

கொழும்பு மாநகரை சர்வதேச தரத்துக்கு அபிவிருத்தி செய்யும் மூன்றாண்டுக்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் 223 மில்லியன் டொலர் உதவியின் கீழ் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் கொழும்பில் குடியிருக்கும் மக்களின் இடநெருக்கடி மற்றும் வெள்ளத்தினால் சமூக பொருளாதார தாக்கங்களுக்கு ஈடு செய்வதற்கு வகை செய்யப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் கொழும்புப் பிரதேசத்தில் உள்ள சகல உட்கட்டமைப்பு வசதிகளும் சேவைகளும் சீரமைக்கப்படும் என்று பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார்.

இந்தத்திட்டம் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் மேற்பார்வையின் கீழ் இலங்கை காணி மீள்பெறுதல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், நகர அபிவிருத்தி அதிகார சபை, கொழும்பு மாநகர சபை ஆகிய மூன்றும் இணைந்து மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

---

# பள்ளி வாசல் மீதான தாக்குல்: விசாரணைகள் மந்தகதியில்

கொழும்பு,மே31

தம்புள்ள முஸ்லிம் பள்ளி மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து, பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும் அது குறித்த விசாரணைகள் நடத்தப்பட்டு இதுவரை குற்றவாளிகள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் சட்டம், நீதி என்பன மந்தமடைந்துள்ளமை இதற்கு ஓர் உதாரணமாகும். இதுவரை இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்த விசாரணைகள் நடத்தப்படாமையினால் குருநாகல், ஹெலியகொட, தெஹிவளை ஆகிய பகுதிகளிலுள்ள முஸ் லிம் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சமும் தற்போது முஸ்லிம் சமுதாயத்தில் உருவாகியுள்ளது.

எதிர்காலத்தில் ஆலயங்கள், மத வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்களுக்கும் இவ்வாறான சம்பவங்கள் உதாரணங்களாகிவிடலாம்.

இலங்கை அரசியல் அமைப்பில் எமது நாட்டவர்களுக்கு தத்தமது மத வழிபாடுகளில் ஈடுபடுவதற்கான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசமைப்பின்படி கிடைக்கப் பெற்றுள்ள இந்த உரிமைகளைப் பாதுகாக்க அரசு மற்றும் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்- என்றார். (ச)

---

# இலங்கையின் வங்கிகளுக்குள்ளும் நுழைந்தது சீனா

சீனாவின் 'யூனியன் பே' வங்கி அட்டைகளை இலங்கையில் உள்ள 500 இற்கும் மேற்பட்ட வங்கி அட்டை இயங்கிகளில் பாவனைக்கு உட் படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு சீன உல்லாசப் பயணிகளை மேலும் உள்வாங்கும் நோக்கிலேயே சீன வங்கி அட்டைப் பாவனை ஊக்குவிக்கப்பட் டுள்ளது என்று இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் உட் கட்டுமானப் பணிகளில் மட்டுமல்ல தற்போது உள்ளக குடியியல் கட்டுமானங்களுக்குள்ளும் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துச் செல்வதையே இது காட்டுகின்றது என்றும் அவதானிகள் தெரிவிக்கின்றனர். .

(ச)

---

# சமூகத்தில் உரிய இடம் கிடைக்காதமைதான் சிறுவருக்கெதிரான வன்முறைக்குக் காரணம்

## அமைச்சர் திஸ்ஸ கரலியத்த

கொழும்பு,மே 31

சிறுவர்களுக்கு சமூகம் உரிய இடத்தைக் கொடுக்கத் தவறியமையால் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிக்கின்றன என்று சிறுவர் நலன் மற்றும் பெண்கள் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு முடிவு காணும் தென் ஆசிய முன்னெடுப்புகளின் பிராந்தியக் கூட்டத்தின் தொடர் நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறுவர் மீதான வன்முறைக்கு எதிரான பலமான கருத்தொருமைப்பாடு காணப்படினும் வன்முறையின் சில வடிவங்கள் இன்னும் தொடர்வதோடு அவை சமூகத்தினால் ஏற்கப்படுவனவாக உள்ளன .

அரசாலும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் நடத்தப்படும் விழிப்புணர்வு பிரசாரங்கள் நகரங்களுக்குள் மட்டுப்படுத்தப்படுகின்றன. அடிமட்ட மக்களை இந்தச் செய்திகள் சென்றடையும் வகையில் செயற்பட வேண்டும் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.தென்மராட்சி - மாசேரி வரணி திருவருள் மிகு புராதன குருநாதர் கோயில் புனராவர்த்தன

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2012

★ கிரியை ஆரம்பம் :- 31.05.2012 வியாழன் காலை 5.50 மணியைத் தொடர்ந்து கிரியைகள் இடம்பெறும். இதே தினம் நண்பகல் 12.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை சந்தணக் காப்பிடல் நடைபெறும்.

★ 01.06.2012 வெள்ளிக்கிழமை காலை துவாதசித் திதியும் சித்திரை நட்சத்திரமும் சித்தயோகமும் புதன் ஹோரையும் கூடிய காலை 07.02 மணிமுதல் 08.38 மணிவரையுள்ள மிதுனலக்கின சுப முகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா நடைபெறத் திருவருள் கை கூடியுள்ளது.

★ தொடர்ந்து 35 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

இதில் மெய்யடியார்கள் அனைவரும் பங்குபற்றி குருநாதசுவாமியின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

சிவத்திரு சி.கா.கமலநாதன் ஐயா
பரம்பரைத் தர்மகர்த்தா,
பிரதம பூசகர்.

சிவத்திரு நாகப்பர் முருகேசபிள்ளை,
ஆலய பரம்பரை சிவகலைப்பூசகர்.

(18781) (2-6-9)


# தேசிய புத்தாக்கக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,மே 31

தேசிய புத்தாக்கக் கண்காட்சி ஒகஸ்ட் 24,25,26 ஆகிய திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஆயிரம் புத்தாக்கக் கண்காட்சி என்ற ரீதியில் நடத்தப்படவுள்ள கண்காட்சியில் மாணவர்களின் ஆக்கங்களும் இடம்பெற வேண்டும் என்பதால் மாணவர்களின் ஆக்கங்கள் பாடசாலை, கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் ஆகிய ரீதியில் தெரிவு செய்யப்படவுள்ளன.

பாடசாலை மட்டப் போட்டிகளை ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி அதில் தலா 5 புத்தாக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு கோட்ட மட்டத்தில் பங்குபற்றும் புத்தகங்களில் தெரிவு செய்யப்படும். புத்தாக்கங்கள் 20 வலய மட்ட போட்டிக்கு தெரிவாகும். வலய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் 10 புத் தாக்கங்கள் மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றும்.

பாடசாலை மட்டப் போட்டிகள் 15 ஆம் திகதிக்கு முன்னரும், கோட்ட மட்டப் போட்டிகள் 30 ஆம் திகதிக்கு முன்னரும் வலய மட்டப் போட்டிகள் ஜூலை பத்தாம் திகதிக்கு முன்னர் நடத்தி புத்தாக்கங்களை வ.ஸ்ரீஸ்கந்தராஜா, பிரதிக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் மருதனார் மடம், சுன்னாகம் என்றமுகவரிக்குஅனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளின் நடுவர்களாக பிரதேசத்தில் உள்ள பொருத்தமான நபர்களைதெரிவு செய்து நடத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-9)


## T V மலிவு விற்பனை

Sony (Japan) Flat WagaT Vகள் 14"-10000/=, 21"-13500/=, 25"-15000/=, 12"Box 12000/=, அம்பிளியபர் - 13000/=, CD- கசெற் ரேடியோ - 2500/=,
தொடர்புகளுக்கு 077 044 0570 (அப்பளம்)
சோனி றேடிற்சென்றர் (கொமர்சல் வங்கி முன்பாக) 56, K.K.S. வீதி, சுன்னாகம்.
(18782) (45-6-9)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட 'A'தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர் ,
# 19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.0212226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
தொ.பே. 0776225944

சுட்டி பாம் சென்ரர்,
வட்டுக்கோட்டை.
தொ.பே. 0778996085

(18768)

## வயறிங் வேலைகள் செய்து தரப்படும்



உங்கள் வீடுகளில் வயறிங், பைப்லைன் மற்றும் பெயின்ரிங் வேலைகள் குறைவான செலவிலும் குறுகிய காலத்திற்குள் பாதுகாப்பான முறையில் உடனடியாக செய்து தரப்படும்.
தொடர்பு : 077 8048143, 075 6731564
(சி/1487)

## Tilko Jaffna City Hotel(Pvt) Ltd.

❖ திருமண மண்டபம்
❖ மணவறை அலங்காரம்
❖ மணப்பெண் அலங்காரம்
❖ திருமண கார் சேவை
❖ Honeymoon Rooms

Tilko Jaffna City Hotel(pvt) Ltd.
70/6, K.K.S. Road, Jaffna
T.P : 021 2225969, 077 1064385
077 6943479 (சி/164)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சாமந்தி வேலாயுதம் LL.B.(Hons)
கடந்த 24.05.2012 வியாழக்கிழமை
பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கொழும்பு பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவின் போது, சட்டமாணி இறுதியாண்டு பரீட்சையில் சிறந்த செயல்திறனுக்கான சேர் பொன்னம்பலம் அருணாசலம் விருது, கே.சின்யா விருது, சட்டவியல் பாடத்துக்கான சட்டபீடாதிபதியினால் வழங்கப்படும் சிறப்பு விருதுகளுடன் சட்டமாணிப்பட்டத்தினையும்



பெற்றுக்கொண்ட
செல்வி
சாமந்தி வேலாயுதம்
அவர்களை மேன்மேலும் பல பட்டங்களும் பதவிகளும் பெற்று எதிர்காலம் சிறப்புற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

அப்பா, அம்மா,
அண்ணா
வசீகரன் குடும்பம்,
அண்ணா
சாரங்கன்

(18788)(6-9)



## ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## புதுமனை புகுவிழா அழைப்பு

நிகழும் மங்களகரமான நந்தன வருடம் வைகாசி 20 ஆம் திகதி [02.06.2012] சனிக்கிழமை காலை 6.45 மணி தொடக்கம் 8.45 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

## உமா வாசம்

புதுமனை புக இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து குடும்பத்தினரை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

* இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

14/5, பூநாரி வீதி, 2 ஆம் ஒழுங்கை
கொக்குவில், யாழ்ப்பாணம்
தொ.பே.இல : 077 6146488, 021 7903513

தங்கள் நல்வரவை நாடும்
திரு, திருமதி மோகனதாஸ் - உமாபதி
(மோகன் - உமா), குடும்பத்தினர்

(18793)(6-7-8)


# சனசமூக நிலைய சமாசங்கள் அமைப்பு

நவாலி, மே 31

வலி. தென் மேற்கில் உள்ள சனசமூக நிலையங்களை உப அலுவலக ரீதியாக ஒன்றிணைத்து சன சமூக நிலையங்களின் உப அலுவலக சமாசங்கள் உருவாக்கப்படவுள்ளன.

வலி.தென் மேற்கு பிரதேசம் பரந்த அளவில் காணப்படுவதால் அபிவிருத்தி செயற்பாடுகளில் மக்கள் பங்குபற்றுவதை ஊக்குவிக்கவும் பிரதேச சபைக்கும் மக்களுக்குமான உறவை வலுப்படுத்தவும் சமாசங்கள் உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கமைய ஆனைக்கோட்டை உப அலுவலக சன சமூக நிலையங்களின் சமாசம் நாளை முதலாம் திகதி பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஒன்றுகூடலை அடுத்து அமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒவ்வொரு சன சமூக நிலையத்தில் இருந்தும் செயற்திறன்மிக்க தலா இரண்டு அங்கத்தவர்களை பங்கு பற்றுமாறு வலி. தென் மேற்கு பிரதேச சபையின் சனசமூக அபிவிருத்தி [illegible] கேட்டுள்ளார்.

(ம-100)


## கண்ணீர் அஞ்சலி



எமது வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு.மரியதாஸன் ஜெகூ அவர்களின் அன்புத் தாயார்
அமரர்
மரியதாஸன் மேரி அஞ்சலா
இறைவனடி சேர்ந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

ஊழியர் நலன்புரிசங்கம்,
கரைச்சிபிரதேச சபை.
(சி/220) (2-6-9)



## செருத்தனைப்பதி அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்மன் திருக்கோயில் புளியங்கூடல் ஊர்காவற்றுறை



## பெருந் திருவிழா 2012

நிகழும் மங்களகரமான நந்தன வருடம் வைகாசி மாதம் 19ஆம் நாள் (01.06.2012) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகி 16ஆம் நாள் ஆனி மாதம் (16.06.2012) சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 17ஆம் நாள் ஆனி 03ம் நாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் 18ஆம் நாள் ஆனி 04ஆம் நாள் திங்கட்கிழமை சண்டேஸ்வரி உற்சவமும் பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

### உற்சவகால நிகழ்வுகள்

| | |
|---|---|
| கொடியேற்றம் 19ஆம் நாள் | (01.06.2012) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு |
| 4ஆம் திருவிழா 22ஆம் நாள் | (04.06.2012) திங்கட்கிழமை காலை உற்சவமூர்த்திகளுக்கான சங்காபிஷேகம் மாலை திருவிளக்கு பூஜை வழிபாடு |
| 5ஆம் திருவிழா 23ஆம்நாள் | (05.06.2012) செவ்வாய்க்கிழமை காலை தூர்க்கை அம்மன் உற்சவம், மாலை தேசிக்காய் விளக்கு வழிபாடு |
| 6ஆம் திருவிழா 24ஆம் நாள் | (06.06.2012) புதன்கிழமை காலை மூலமூர்த்தி சங்காபிஷேகம் |
| 8ஆம் திருவிழா 26ஆம் நாள் | (08.06.2012) வெள்ளிக்கிழமை மாவிளக்கு பூசை |
| 9ஆம் திருவிழா 27ஆம் நாள் | (09.06.2012) சனிக்கிழமை முப்பெரும் தேவி உற்சவம் |
| 10ஆம் திருவிழா 28ஆம் நாள் | (10.06.2012) ஞாயிற்றுக்கிழமை பூமஞ்ச உற்சவம் |
| 11ஆம் திருவிழா 29ஆம் நாள் | (11.06.2012) திங்கட்கிழமை மாம்பழத்திருவிழா |
| 13ஆம் திருவிழா 31ஆம் நாள் | (13.06.2012) புதன்கிழமை காலை கைலாச வாகன உற்சவம் கற்பூரச்சட்டி |
| 14ஆம் திருவிழா 32ஆம் நாள் | (14.06.2012) வியாழக்கிழமை வேட்டைத்திருவிழா |
| 15ஆம் திருவிழா 01ஆம் நாள் | (15.06.2012) வெள்ளிக்கிழமை சப்பைரதத் திருவிழா |
| 16ஆம் திருவிழா 02ஆம் நாள் | (16.06.2012) சனிக்கிழமை தேர்த்திருவிழா |
| 17ஆம் திருவிழா 03ஆம் நாள் | (17.06.2012) ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழா |
| 18ஆம் திருவிழா 04ஆம் நாள் | (18.06.2012) திங்கட்கிழமை பகல் சண்டேஸ்வரி உற்சவம், இரவு பூங்காவனத் திருவிழா. |

செருத்தனைப்பதி
புளியங்கூடல்
ஊர்காவற்றுறை.

சுபமஸ்து

Like us on face book
www.facebook.com/mahamary

ஆலய அறங்காவலர்கள்
து. சிவஞானச் செல்வம்
சி. செந்தூரன், சி. மருதூரன்

(18790) (6,9,10)



## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்லத்துரை
மனோரஞ்சன் (ரஞ்சன்)
திதி: ஏகாதசி

மண்ணகம்
22★11★1954

விண்ணகம்
18★05★1997



சீரோடும் சிறப்போடும் எம்மை வாழவைத்து
காலமெல்லாம் உம் சிறப்பை நினைக்க வைத்து
ஞாலத்தில் எம்மை உயர்த்தி விட்டு
காலக்கடன் தீர்க்க விரைந்து சென்றதேனோ.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# ஆஸிக்கு செல்வோருக்கு புலிகள் நிதியுதவியா?

## இலங்கைத் தூதுவரின் குற்றச்சாட்டை மறுக்கிறது ஆஸி. தமிழ்ச் சங்கம்

இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குப் புகலிடம் கோருவோருக்கு விடுதலைப் புலிகள் நிதியுதவி செய்கின்றார்கள் என்ற இலங்கைத் தூதுவரின் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது என்று ஆஸ்திரேலிய தமிழ்ச் சங்கத் தலைவர் எஸ். ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குப் புகலிடம் கோருவோருக்கு விடுதலைப் புலிகள் நிதி உதவி செய்கின்றனர் என்று ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் திஸர சமரசிங்க ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் குற்றம் சாட்டியிருந்தார்.

இலங்கைத் தூதுவரின் குற்றச்சாட்டை மறுத்த தமிழ்ச் சங்கத் தலைவர், தூதுவரின் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இருக்கின்றதா எனவும் கேள்வியெழுப்பியுள்ளார்.

**புகலிடம் கோருவோருக்கு புலிகள் நிதி உதவிசெய்கின்றனர் என்று ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் திஸரசமரசிங்க ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் குற்றம் சாட்டியிருந்தார்.**

அண்மைக்காலங்களில் ஆஸ்திரேலியாவுக்கு வரும் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை ஏற்றுக்கொண்ட ஆறுமுகம், இலங்கையில் தமிழர்களின் நிலை மோசமாகிக் கொண்டுபோவதே இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந)

## பிரமையை விடு, பிரமத்தைக் காண்பாய்

கடவுளை வழிபடும் எல்லோருக்கும் சிறிதளவாவது மனதில் அமைதி நிலவுகிறதா? இல்லை. எங்கு நோக்கினும் அமைதியின்மை.எதைக் கண்டாலும் பயம். எங்கு கண்டாலும் துக்கம். எங்கு பார்த்தாலும் கலகம், கொந்தளிப்பு இவையெல்லாவற்றையும் வெளியில் வைத்துக் கொண்டு உள்ளே ஆனந்தம் அனுபவிக்க இயலுமா? இவையனைத்தும் அசுர குணங்கள். கடவுளை நினைக்கும்போது தெய்வீக குணங்கள் உன்னிடம் நிரம்ப வேண்டும். அதுவே உண்மையான ஞானம். 'யத்பாவம் தத்பவதி'. உனது பாவனைகள் எவ்விதமோ அவ்விதமே உனது அனுபவமும், 'ப்ரம்மவித் ப்ரம்மைவபதி'. பிரமத்தை அறிந்தவன் பிரமம் ஆகிறான். பிரமத்தைப் பற்றி நினைத்தால் நீ பிரமம் ஆகத்தான் இருக்கமுடியும். வெறும் பிராமணனாக இருக்கமுடியுமா? வெறும் பூநூலை அணிவதால் மட்டும் ஒருவன் பிராமணன் ஆவதில்லை. பிரமத்தை அறிந்தவனே உண்மையான பிராமணன். இக்கால மக்கள் பிரம (பொய்த்தோற்றமான) சாதனைப் பயிற்சிகள் செய்கின்றார்களே தவிர பிரம்ம (இறைவனை அறியும்) சாதனைப் பயிற்சிகள் செய்வதில்லை. பிரமைக்கும், பிரமத்துக்கும் என்ன வேறுபாடு. பிரமை ஒன்றைப் பலவாக நினைத்து வேறுபாடுகளாகக் காண்கிறது. பிரமம் வேறுபாட்டுடன் தோன்றும் பலவற்றை ஒன்றிணைத்து அவற்றில் ஒருமையைக் காண்கிறது.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## தையல் பயிற்சி நிறைவுப் பரீட்சை

கடந்த வருடம் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி நெறியை நிறைவு செய்வதற்கான பரீட்சை எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இந்த எழுத்துப் பரீட்சையில் தையல் பயிற்சி நெறியை நிறைவு செய்த அனைவரையும் தோற்றுமாறும், இப் பரீட்சையில் தோற்றி சித்தி பெறுபவர்களுக்கு உடன் சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாணப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ந-400)

## சமய சந்நிதிகளில்

வலி வடக்கு, மே 31

அராலி கருப்பிட்டி அம்மன்கோயில் வருடாந்தக் கொடியேற்றம் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து ஒன்பது நாள்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

8 ஆம் திகதி சுவாமி வேட்டைத் திருவிழாவுக்கு ஊர்களுக்குச் சென்று வருவதுடன் மறுநாள் 9 ஆம் திகதி அதிகாலை இடம்பெறும் பொங்கலைத்தொடர்ந்து கொடியிறக்க நிகழ்வு இடம்பெறும். (ந-86)

* * *

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

அன்று மாலை 5 மணிக்கு செபமாலையுடன் புனிதரின் கொடியேற்ற விழா இடம்பெறும். தொடர்ந்து 3 ஆம் திகதி கடல் அந்தோனியாரின் கெபியில் வழிபாட்டுத் திருப்பலி இடம்பெறும்.

மறுநாள் 4 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரைக்கும் மாலை 5 மணிக்கு புனிதரின் நவநாள் வழிபாடு இடம்பெறும். தொடர்ந்து 12 ஆம்திகதி மாலை 4.45 மணிக்கு யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.யஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் நற்கருணைப் பெருவிழா இடம்பெறும்.

மறுநாள் 13 ஆம் திகதி காலை 5.15 மணிக்கு முதல் திருப்பலிப் பூசையும், பின்னர் காலை 6.30 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் திருநாள் திருப்பலிப் பூசையும் இடம்பெறும்.அன்று மாலை 4.30 மணிக்கு புனிதரின் தேர்ப் பவனி நடைபெறும். (ந-17-35)

## மாதாந்த உதவிக் கொடுப்பனவுகளை பெறுவதற்கான கால எல்லை மாற்றம்

வடமராட்சி, மே 31

பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் நோய் உதவிக் கொடுப்பனவுகள் வழங்குவதற்கான கால எல்லை ஜூன் மாதம் முதல் மாற்றப்பட்டுள்ளதாகச் சமூக சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தக் கொடுப்பனவுகள், உப அஞ்சல் அலுவலகங்கள், அஞ்சலகங்கள் ஊடாகப் பிரதி மாதம் தோறும் 15 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரையான காலப் பகுதியிலேயே வழங்கப்பட்டு வந்தன. இந்தக் கொடுப்பனவுகளைப் பிரதி மாதந்தோறும் 4 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-8)

# ஆண்டுகள் ஆறு ஆனாலும் ஆறாது அப்பா உங்கள் நினைவுகள்

# ஆண்டு ஒன்றும் சென்றதோ அண்ணா நீங்கள் எம்மைப் பிரிந்து



பிறப்பு
23.05.1938

இறப்பு
16.06.2006



பிறப்பு
15.03.1973

இறப்பு
12.06.2011

## அமரர் விஸ்வலிங்கம் வைரமுத்து

(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர்,
வடபிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம்)

## அமரர் வைரமுத்து தயாமோகன்

(பொது சுகாதாரப் பரிசோதகர் உளநலப்பிரிவு - வவுனியா)

திதி:– 31.05.2012

**குடும்பத்தின் ஒளி விளக்காய்
வாழ்ந்திட்ட எம் அப்பாவே
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
உங்களுக்கு ஈடாகுமா
சிறகொடிந்த பறவைகளாய் – நாம்
உருக்குலைந்து நின்றவேளை
இடியென வீழ்ந்தது எமக்கு
அண்ணாவின் பேரிழப்பு
ஆற்றுவார் யார் ஆறுதல் யார்
அநாதைகளாய் நாமும்
கதிகலங்கி அந்த இறைவனையே
வேண்டி நிற்கின்றோம் நாளும்**

**அப்பா உங்கள் சேவைக்காலம்
அண்ணாவின் ஆயுட் காலம்
இருவருமே சுகாதாரத் துறையில்
இன்முகத்துடன் சேவைகள் பல புரிந்தீர்
உங்கள் இழப்பு யாவருக்குமே பேரிழப்பு**

**ஆண்டொன்று சென்றதுவோ
அவனி விட்டு நீங்கள் சென்று
ஆறாத எம் துயரம் ஆறவில்லை எம்மை விட்டு
நீறாகிப் போனதுவே எம் நெஞ்சம்
அன்னை, தந்தை அன்பைப் பேணி
தம்பி, தங்கை உறவை வளர்த்து
மனைவி, பிள்ளைகள் மீது
உயிரையே வைத்த எங்கள் அண்ணா
நிஜமான உம் உருவம்
நிழலாக வாழுதண்ணா எந்நாளும்.**

– என்றும் உங்கள் நினைவுடன்:

**குடும்பத்தினர்.**

C.M.S. வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(சி/230)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் கல்வித்தரம் வளர்ச்சியடையக் காரணம் என்ன?




*"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்*
*எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்*
*இளைப்பில்லை காணென்று கும்மியடி"*

என்ற பாரதியாரின் பாடலுக்கு இணங்க தற்காலத்தில் பெண்கள் திகழ்கிறார்கள்.

ஆணுக்கு நிகராகப் பெண் திகழ வேண்டுமாயின் கல்வி அவசியமானது என்பதைத் தற்காலப் பெண்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். எனவேதான் தாமும் சமூகத்தில் மதிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை மனதிலே நிலைநிறுத்தித் தமது கல்வியில் அதிக ஊக்கம் எடுக்கிறார்கள்.

பெண்களின் கல்விக்கு ஏதுவாகப் பெற்றோர்கள் பெண்கள் மீது கொண்டுள்ள கண்காணிப்பும் அவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும் காரணமாகும். இதனாலே பெற்றோரது ஊக்குவிப்பும் பெண்களுக்கு அதிகம் கிடைக்கிறது. மேலும் பெண்கள் அதிகமான நேரத்தை வீட்டிலேயே கழிப்பதால் கல்வியை நீண்டநேரம் கற்பதற்கும் தெளிவாகக் கற்பதற்கும் உதவியாக அமைகிறது. எனவேதான் பெண்களின் கல்வியில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டு வருவதைநோக்கக் கூடியதாக உள்ளது.

ஆண்களைப் பொறுத்தவரையில் சமூகத்தில் 'ஆண்' என்ற ஆதிக்கத்துடன் காணப்படுவார்கள். எனவே அனேகமான ஆண்கள் கல்வி கற்பதை விட தொழில் புரிவதையே பெரிதும் விரும்புகின்றனர். எனவே தமது கல்வியில் செலுத்தும் அக்கறையை விடப் பிற விடயங்களில் பெரிதும் அக்கறை காட்டுகிறார்கள். மேலும் பெற்றோர் ஆண் பிள்ளைகளை வன்மையாகக் கண்டிப்பதில்லை. அவர்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள்ளும் வைத்திருப்பதில்லை. இதனால் ஆண் பிள்ளைகளுக்குப் பெற்றோரிடத்தில் அச்சம் கிடையாது. தமது கல்வியில் காட்டும் அக்கறையை விட தற்கால உலகப் போக்குக்கேற்ப தம்மை மாற்றுவதிலேயே பெரிதும் நாட்டம் செலுத்துகிறார்கள். வீட்டில் நிற்கும் நேரத்தைப் பார்க்கவும் வெளியில் செல்லும் நேரமே அதிகம். எனவே கற்பதற்காக குறிப்பிட்ட நேரத்தையே அவர்கள் செலவிடுகிறார்கள். அதனால் ஐயமறக் கற்கவோ தெளிவாக முழுமையாகக் கற்கவோ முடியாமல் இருக்கும். எனவேதான் ஆண்களின் கல்வித் தரம் வளர்ச்சி அடைவது குறைவாக உள்ளது. எனவே

*"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்*
*அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்"*

என்ற பாடல் வரிக்கு ஏற்ப சமூகத்தில் ஆணும் பெண்ணும் நிகராகக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆயினும் ஆண்கள் தம்மை ஒதுக்கி தேவையற்ற விடயங்களில் நாட்டம் செலுத்துவதைக் கற்கும் காலங்களில் குறைத்து கல்வியில் அதிக நாட்டம் செலுத்தினால் அவர்களும் கல்வித் தரத்தில் பெண்களுக்கு நிகராக வளர முடியும்.

*அமலினி பத்மகுமார்,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*

# பொன்மொழிகள்

★ புத்தகங்கள் நம்முடன் பேசும் மௌன நண்பர்கள்


★ உன் நண்பனுக்காக எதைவேண்டுமாலும் விட்டுக் கொடு. ஆனால் உன் நண்பனை ஒருபோதும் விட்டுக் கொடுத்துவிடாதே.

★வாழ வைப்பவன் இறைவன், வாழத் தெரிந்தவன் மனிதன், விழ வைப்பவன் துரோகி, தூக்கி விடுபவன் நண்பன்.

★ புதியவர்களை நண்பர்களாக்கி கொள்ளுங்கள். பழைய நண்பர்களையும் தொடர்பில் வையுங்கள். புதியவர்கள் வெள்ளி என்றால் பழையவர்கள் தங்கம்.

★ ஒவ்வொரு நண்பர்களும் புதிய உலகத்தின் வாயிற்கதவுகள்.

★ உன்னைப் பற்றி முழுமையாக அறிந்திருந்தும் உன்னை விரும்புபவனே உன் நண்பன்.



## தேடுகிறேன்...

உள்ளன்பு கொண்டாடி
ஊமைதனை உசுப்பிவிட்டு
மௌனங்களைப் பகிர்ந்து
மகிழ்ச்சியில் கலந்து
கற்பனைகளை வளர்த்து
கனவுகளில் மிதந்து
உன்னைத் தேடுகிறேன்



## விடுதி

அணைக்க கரங்களின்றி
அன்னையின்
அணைப்பின்றி
தந்தையின் பாசமின்றி
வாடுகிறோம் - நாம்
விடுதி என்னும்
பெயரோடு
நாம் வாழும் ஆச்சிரமங்கள்

*சா.ஜிந்துஜா,*
*கோண்டாவில்.*



## ஒரு விடியலுக்காய்...

வினாக்குறியான
என் வாழ்க்கையில் - விடியலை
தேடிய போது விடையாக நீ வந்தாய்
இன்பத்தின் முகவரியைத் தேடிய போது
ஒளி விளக்கை ஏற்றி வைத்தாய்
நிம்மதியின் வாயிலைத் தேடி நித்தமும்
நான் அலைந்தபோது
நினைவென்ற கதவுகளை
திறந்துவிட்டாய்
இத்தனை சந்தோஷங்களை
நீ தந்தபோதும் என் மனதில்
வேதனைகள் மட்டுதான் மிஞ்சியதே ஏன்?
விதியின் சதியால் இருட்டாகியது
என் வாழ்வு
எனினும் விடியலுக்காய்- நான்
காத்திருக்கிறேன்....!

எம்.றஜனவி,
நீர்வேலி.



## நான் தேடிய உலகம்

*பெண்ணுக்கு சமஉரிமை*
*கொடுக்கும் உலகம்*
*கலைகளும் கலைமான்களும்*
*நிறைந்த உலகம்*
*கடவுளையும் விஞ்ஞானத்தையும்*
*நம்பும் உலகம்*
*மனிதனின் உணர்வுகளையும்*
*உரிமைகளையும் மதிக்கும் உலகம்*
*தன்னம்பிக்கையும் முயற்சியும்*
*நிறைந்த உலகம்*
*அடிமையின் விலங்குகளை*
*அவிழ்க்கும் உலகம்*
*சாதிகளும் சமயங்களும்*
*தலைதூக்காத உலகம்*
*இனங்களும் மொழிகளும்*
*ஒன்றிணைந்த உலகம்*
*நிரந்தர வாழ்வுக்கு வழி வகுக்கும்*
*சிந்தனைப் போக்குள்ள சலனமற்ற*
*உலகம்*
*இதுவே என்தேடல்..*
*நான் தேடிய உலகம் இதுவே.*

டி.கொலஸ்ரிக்கா (சியா). அச்சுவேலி வடக்கு.



### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
**'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

பெயர் :-.........................

முகவரி :- ...........................

.........................................

.........................................
திகதி கையொப்பம்



### இளவல்கள் வட்டம்

விமர்சனம்

அண்மையில் வெளியான ஜி.சி.ஈ (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளின்படி 'ஆண்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்தமைக்கும் பெண்களின் கல்வித் தரம் முன்னேறியமைக்குமான காரணம் என்ன?
உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.
தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழீழத்தின் கர்தினாலாக முயற்சிக்கிறார் ஆயர் எனும்

# றிசாத்தின் அபாண்ட குற்றச்சாட்டை வன்மையாகக் கண்டித்து தீர்மானம்

*மன்னார், மே 31*

*மன்னார் ஆயர் தமிழீழத்தின் கர்தினாலாக வருவதற்கு முயற்சி செய்கின்றார். அனைத்துலக அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து ஆட்சிக்கு எதிரான சதியில் ஈடுபட்டுள்ளார். தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையைச் சிதைக்கின்றார் என்ற உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.*

இவ்வாறு மன்னார் ஆயரை விமர்சித்து அமைச்சர் றிசாத் பதியுதீன் வெளியிட்ட கருத்துக்களுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட கண்டனத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் பின்வரும் விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

* பல ஆண்டுகளாக போரினால் பாதிக்கப்பட்ட, குரலற்றோரின் குரலாக, சிறப்பாக தமிழ் மக்களின் அரசியல் ஏக்கங்களுக்கும் உண்மைக்கும், தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற கடந்த கால, நிகழ்கால ஒடுக்குமுறைகளுக்கும் நியாயம் கேட்கும் தனது பணியை ஆற்றிவரும் மன்னார் ஆயருக்கு எமது மனமார்ந்த, நன்றி கலந்த பாராட்டுக்களைத் தெரிவிக்கிறோம்.

* அண்மைக் காலமாக வெளிப்படுத்தப்படும் அச்சம் கலந்த சூழ்நிலையிலிருந்து ஆயர் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டு நிற்கின்றோம்.

* ஆயருக்கு எதிராகத் தனிநபர்களாலும், குழுக்களாலும், அரச அமைச்சர்களினாலும், அரச, அரச சார்புடைய ஊடகங்களூடாகவும் சுமத்தப்படும் தவறானதும், வெறுப்பினால் உந்தப்பட்டதுமான குற்றச் சாட்டுக்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

* இன்றைய நிகழ்வின் அமைப்பாளர்களையும், பங்காளர்களையும் அச்சுறுத்தி அடக்க முயலுவதையும், பொலிஸார் நீதிமன்ற அமைப்புக்கள் மூலம் எமது நியாயமானதும் அமைதியானதுமான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முயல்வதையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

* இன்று ஆயர் அவர்களுக்கும் எமக்கும் ஆதரவளிக்கவும் ஒற்றுமையை வெளிப்படுத்தவும், இறைவேண்டுதல் செய்யவும், எதிர்ப்புக்களைத் துச்சமென மதித்து, பெருமளவில் கூடி வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும், சிறப்பாகக் கத்தோலிக்கர் அல்லாதோர், பிற மாவட்டங்களில் இருந்து வருகை தந்தோர், எமது சிங்களச் சகோதரர்கள் அனைவருக்கும் பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மன்னார் ஆயரும், எமது மாபெரும் ஆன்மிகத் தலைவருமாகிய மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு இறைவன் நல்ல உடல் நலத்தையும், துணிவையும், ஆற்றலையும் கொடுத்தருள தொடர்ந்து வேண்டுதல் புரிவோம்.

மேற்படி ஆதரவு நிகழ்வில் பங்கு கொண்ட அனைவராலும் இந்தத் தீர்மானம் வழிமொழியப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டது. (க-12)

## அக்கராயன் நீர்த்தடுப்பணை வேலைகள் துரிதம்



அக்கராயன், மே 31

அக்கராயன் குளத்தின் நீர்த்தடுப்பணை வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

அக்கராயன் குளத்தின் வான் வழியாக வெளியேறும் நீரை அக்கராயன் ஆற்றின் ஊடாகக் கொண்டு செல்வதில் இந்தத் தடுப்பணை முக்கிய பங்கை வகிக்கின்றது.

இந்தத் தடுப்பணை 2006 ஆம் ஆண்டு உடைப்பெடுத்ததால் குளத்து நீர் சமாதானபுரம் வயல்வெளியூடாகப் பாய்ந்து சென்று பயிரழிவுகளை ஏற்படுத்தியது. இது பின்னர் புனரமைக்கப்பட்ட போதிலும் மீண்டும் உடைப்பு ஏற்பட்டது.

கடந்த ஆண்டு அக்கராயன் குளப்புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போது உடைப்பெடுத்த பகுதியூடாக வான் வெள்ளத்தைப் பாய்ந்து செல்ல விடுவதென முடிவெடுக்கப்பட்டது.

ஆனால் வான்பகுதியூடாகப் பாய்ந்த பெருவெள்ளம் சமாதானபுரம் வயல் வெளிகளில் கிரவல் குவியல்களைப் பெரும் குன்றுகளாக ஏற்படுத்தியதுடன் மக்கள் குடியிருப்புக்களில் பெருவெள்ளப் பெருக்கும் ஏற்பட்டது. இந்த நிலையில் நீர்த்தடுப்பணை புனரமைப்பதன் அவசியம் உணரப்பட்டது. தற்போது அதன் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (க-18)

## ஆரம்ப வைபவத்துடன் முடிந்தது அக்கராயனுக்கான மின் விநியோகம்

அக்கராயன், மே 31

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு இலங்கை மின்சார சபையின் மின்சாரம் வழங்கலுக்கான ஆரம்ப வைபவம் இடம்பெற்றுள்ள போதிலும் இன்று வரை மின்சாரம் வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது.



கடந்த 21 ஆம் திகதி மின் ஆளியை அழுத்தி மின்சாரம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது இந்த வைபவத்தைக் குறிக்கும் நினைவுக் கல்லொன்றும் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய முக்கிய பிரமுகர்கள் அக்கராயன் மருத்துவமனையின் சுமார் நான்கு கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்திலுள்ள வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கப்படும் எனத் தெரிவித்ததால் இங்குள்ள மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

மேலும் மருத்துவமனை ஊழியர்கள் மட்டுமன்றி நோயாளர்களும் இனிமேல் தடையில்லாத மின்சாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்தனர்.

ஆனால் ஆரம்ப நிகழ்வு அன்றே மாலை 6.30 மணியளவில் மருத்துவமனையின் மின்பிறப்பாக்கி இயங்கத் தொடங்கியது. இந்த மின்பிறப்பாக்கி மூலமாகவே மருத்துவமனைக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அப்போது தான் இங்குள்ளவர்களுக்கு உண்மை நிலை புரிந்தது. அக்கராயன் மற்றும் வன்னேரிக்குளம் வரையான பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கவென மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளன. இதனால் தமக்கும் மின்சாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் மக்கள் காத்திருந்தனர்.

தற்போது மின்கம்பங்களைப் பார்த்துப் பெருமூச்சு விடும் நிலையிலேயே இங்குள்ள மக்கள் உள்ளனர். (க-18)

## மசூர் சின்னலெப்பை சதுக்கம் என பொதுச் சந்தைக்கு பெயர் சூட்டுக

### முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் கோருகிறார்

அட்டாளைச்சேனை,மே 31

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள பொதுச்சந்தைக் கட்டடத்துக்கு அண்மையில் காலமான கிழக்கு மாகாண சபை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் மசூர் சின்னலெப்பையின் நினைவாக மசூர் சின்னலெப்பை சதுக்கம் என்ற பெயரைச் சூட்டுமாறு அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எஸ்.எல். முனாஸ் கோரிக்கைவிடுத் துள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சபை யின் தவிசாளர் ஏ.எல்.எம். நசீர் தலைமையில் பிரதேச சபை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மசூர் சின்னலெப்பை அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளராகக் கடமையாற்றியவர். அவர் இந்தக் கிராமத்தின் அபிமானத்தைப் பெற்றவர். மக்களால் நேசிக்கப்படும் நல்ல மனிதர். தமது கட்சிக்காகப் பல தியாகங் களைச்செய்தவர்.ஊவேஅவரை நினைவு கூரும் பொருட்டும், அவருக்குச் செய்யும் நன்றிக் கடனாகவும் அவரின் நாமம் நிலைத்திருக்கும் வகையில் நாம் ஏதாவது செய்தல் அவசியமாகும். (ச)

## மக்களின் தேவைகளை இனம்கண்டு நிறைவேற்ற முயற்சி செய்யப்படும்

### துணுக்காய்ப் பிரதேச செயலர் உறுதியுரை

அக்கராயன், மே 31

மக்களின் தேவைகளை இனம்கண்டு அதனை நிறைவேற்றுவதற்கு உச்சக்கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு துணுக்காய்ப் பிரதேச செயலரும் மாந்தை கிழக்குக்கான பதில் பிரதேச செயலருமான சி.குணபாலன் தெரிவித்துள்ளார். மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தலைமையுரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

மாந்தை கிழக்கு மக்களின் தேவைகள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. போக்குவரத்து நெருக்கடிகள் தொடர்பாகவும் மக்கள் இங்கு எடுத்துரைத்தனர். அத்துடன் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு, பிரதான வீதிகள் மற்றும் உள் வீதிகள் சேதமடைந்து போக்குவரத்துச் சீர்குலைந்து காணப்படுவது தொடர்பாகவும் மக்கள் இங்கு முறையிட்டனர்.

மாந்தை கிழக்குப் பகுதியில் நீண்டகாலமாக மின் கம்பங்கள் நடப்பட்ட போதிலும் மின் வழங்கப்படாமை தொடர்பாகவும் மக்களால் இங்கு தெரிவிக்கப்பட்டது. (க-18)

## வரலாறு தெரியாததால் தான் இன முரண்பாடு ஏற்படுகிறது

### கல்முனை பௌத்த விகாராதிபதி தெரிவிப்பு

வரலாறு தெரியாததன் காரணத்தினால்தான் இந்த நாட்டில் மதவழிபாட்டுத்தலங்கள் உடைக்கப்படுவதாகவும் அனைவரும் வரலாறுகளைப் படிக்க வேண்டும் எனவும் கல்முனை பௌத்த விகாராதிபதி தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா யூத் இளைஞர் பரிமாற்றவேலைத் திட்டத்தின் அடிப்படையில் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் அடங்கிய குழுவொன்று சாய்ந்தமருது தேசிய இளைஞர் மத்திய நிலையத்தில் கிழக்கு மாகாண கரையோர இளைஞர்; யுவதிகளை சந்திக்கும் நிகழ்வொன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இங்கு ஆசி உரை வழங்கும் போதே கல்முனை ஸ்ரீ சுபத்திரா ராமைய விகாராதிபதி ரன்முதுகள சங்கரத்ன தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அண்மைக்காலமாக எமது நாட்டில் வேண்டத்தகாத சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. தம்புள்ள, தெஹிவளை சம்பவங்களை அவதானிக்கின்ற போது வரலாறு தெரியாதவர்களால் ஏற்படுத்தப்படும் குழப்பமாகவே நான் பார்க்கின்றேன்.

எமது நாட்டில் பல்லின சமூகம் வாழ்கின்ற நிலையில் ஒவ்வொரு இனத்தவரும் மற்றவர்களை மதிக்கின்ற பண்பும், அவர்களின் சமய வழிபாடுகளை சுதந்திரமாக கடைப்பிடிக்கின்ற நிலையும் உருவாக்கப்பட வேண்டும்.

வரலாறுகள் தெரியாதவர்களாக இருந்து கொண்டு சமூகங்கள் மத்தியில் பிளவுகளை உண்டு பண்ணக் கூடாது.

2005ஆம் ஆண்டு கல்முனைக்கு நான் வருகை தந்த போது எனக்கு தமிழ் மொழி தெரியாமல் இருந்தது. அதனால் தமிழ் முஸ்லிம் மக்களுடைய உணர்வுகளை புரியாமல் இருந்தேன். இன்று தமிழை கற்று கொண்டதன் மூலம் தமிழ் முஸ்லிம் நண்பர்கள் நிறையவே இருக்கின்றார்கள். மொழி என்பது நல்லிணக்கத்துக்கு மிகவும் முக்கிய ஊடகமாக உள்ளது. தமிழர்கள் சிங்களத்தையும்,சிங்களவர்கள் தமிழையும் கற்றுக் கொள்வதன் மூலம் எமக்குள் இருக்கின்ற பிரிவினைகளை இல்லாமல் செய்யலாம் எனவும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார். (10-41)




*கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளர் ஒருவருக்குக் கிளிநொச்சி அரச அதிபர் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கின்றார். (18)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்ட வேகத்தால் வெற்றி

## பரிஷ் - சென்ரலைட்ஸ் மோதலில் பரபரப்பு முடிவு

சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆட்டமொன்று சமநிலையில் முடிவடைந்த போதிலும் ஓட்ட வேக அடிப்படையில் சென்ரலைட்ஸ் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ணத்திற்கான சுற்றுப்போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகமும் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் 36.5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது.

ஹரிகரன் 7 பவுண்டரிகள் 3 சிக்ஸர்கள் அடங்கலாக 56 ஓட்டங்களையும் நிதர்சன் 34 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 28 ஓட்டங்களும் கிடைத்தன.

சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கோகுலன் 7.5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் ஜெரிக்சாந் 9 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 40 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் வதுசன் ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

157 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 26.1 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்று போட்டியைச் சமநிலைப் படுத்தியது.

ஜேம்ஸ் ஜான்சன் 6 பவுண்டரிகள் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 51 ஓட்டங்களையும், எடின் 38 ஓட்டங்களையும், அழகன் 16 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 21 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஹரிகரன் 5 இலக்குகளையும், வினோத் 4 இலக்குகளையும் டில்சாந் ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

சுற்றுப் போட்டிவிதிகளுக்கு அமைவாகப் போட்டி சமநிலையில் முடிவடைந்ததால் 25 பந்துப் பரிமாற்ற நிறைவில் ஓர் அணி பெற்ற ஓட்டங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வெற்றி தீர்மானிக்கப்படும்.

அதனடிப்படையில் 25 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் 98 ஓட்டங்களையும் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 144 ஓட்டங்களையும் பெற்றிருந்தன. இதனால் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ங-86)

## அணி ஒழுங்கு இன்று தெரிவு

யாழ்ப்பாணம், மே 31

யாழ்.சென்ரல் விளையாட்டுக் கழகம் 9 ஆவது ஆண்டாக நடத்தவுள்ள 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் அணி ஒழுங்குத் தெரிவு இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள கிரிக்கெட் அக்கடமியில் நடைபெறவுள்ளது என்று சென்றல் விளையாட்டுக் கழகச் செயலாளர் அறிவித்துள்ளார்.

குறித்த சுற்றுப் போட்டிகள் யாவும் ஜூன் மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ங)

## வட மாகாண மகளிர் உதைபந்து போட்டிகள் புதுக்குளம் ம.வியில்

வலி-வடக்கு மே, 31

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் இடம் பெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலை அணிகளுக்கு இடையேயான பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 11ஆம், 12ஆம் ,13ஆம் திகதிகளில் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு



*வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலம் எதிர் கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலயம்

*யாழ்ப்பாணம் மாதகல் சென்.ஜோசெப் மகாவித்தியாலயம் எதிர் மன்னார் சென் லூசியா மகாவித்தியாலயம்

*மன்னார் புனித வளனார் மகா வித்தியாலயம் எதிர் வவுனியா செட்டிக்குளம் மகாவித்தியாலயம்

*முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி

*கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழகலவன் பாடசாலை எதிர் முல்லைத்தீவு உடையார்கட்டு மகாவித்தியாலயம்

*மன்னார் இலுப்பைக் கடவை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் வவுனியா கனகராயன் குளம் மகாவித்தியாலயம்

*கிளிநொச்சி வேரவில் இந்துக் கல்லூரி எதிர் முல்லைத்தீவு கற்சிலை மடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

இரண்டாம் சுற்றிலிருந்து மானிப்பாய் மகளிர் கல்லூரி போட்டிகளில் மோதவுள்ளது . (ங-86)



*கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலய 15 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்ட அணியினர் மாவட்ட மட்டத்தில் அபாரமாக ஆடி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளனர். (ங-18)*

# வலிகாமம் வலய தடகளப் போட்டி முடிவுகள்

வலி-வடக்கு,மே 31

வலிகாமம் கல்வி வலய பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தடகளப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

**100 மீற்றர்**

மைக்கல் ஜெனோதன் மைக்கல் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), சுதர்சன் சுகுமார் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), அன்ரன் விவேக் ரதீஸ்வரன் (இளவாலை சென்ஹென்றிஸ் கல்லூரி)

**200 மீற்றர்**

மைக்கல் ஜெனோதன் மைக்கல் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), சுதர்சன் சுகுமார் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), அன்ரன் விவேக் ரதீஸ்வரன் (இளவாலை சென்ஹென்றிஸ் கல்லூரி)

**400 மீற்றர்**

ஜெனோதன் மைக்கல் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), ஜே.ஜெனந்தன் (தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரி), ஜீ.யூடிலஸ் (வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)

**800 மீற்றர்**

குயின்ரன் டான்ஸ்ரன் தவநீத் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி), தேவராசா சிந்துஜன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), விக்கினேஸ்வரன் (இணுவில் இந்துக் கல்லூரி)

**1500 மீற்றர்**

குயின்ரன் டான்ஸ்ரன் தவநீத் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி), தேவராசா சிந்துஜன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), இராசதுரை ரஜிதன் (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி)

**5000 மீற்றர்**

ஜெயகுருநாதன் சுரேஷ் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), சூசைரெட்ணம் ஓஸ்வாட் (இளவாலை சென்ஹென்றிஸ் கல்லூரி), நாகநாதன் பிரணவன் (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி)

**110 மீற்றர் தடைதாண்டல்**

ஜெ.ஜெனந்தன் (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), நவநீதன் ஜெயசெந்தூரன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), மனோகரராசன் வினோகரன் (வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி)

**400 மீற்றர் தடைதாண்டல்**

ஜெ.ஜெனந்தன் (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), ஜீ.யூடிலஸ் (வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), ஞானசூரியர் வினோத்குமார் (இளவாலை சென்ஹென்றிஸ் கல்லூரி)

**உயரம் பாய்தல்**

ஜெ.பிரசாத் (வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), விஜயரெட்னம் ஜீவராஜ் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), பி.டினுசன் (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி)

**நீளம் பாய்தல்**

ரவிராசா டில்சன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), விஜயரெட்னம் ஜீவராஜ் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), சிவபாதம் பாகிரதன் (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்)

**முப்பாய்ச்சல்**

ரவிராசா டில்சன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), வின்சன் வினோத்குமார் (இளவாலை சென்ஹென்றிஸ் கல்லூரி), இரத்தினராசா பிரியதர்சன் (மல்லாகம் மகா வித்தியாலயம்)

**குண்டு போடுதல்**

பிரபாகரன் பிரசாத் (இணுவில் மத்திய கல்லூரி), தர்மலிங்கம் ரசிந்தன் (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), செல்வராசா கஸ்ரஸ் (மல்லாகம் மகா வித்தியாலயம்)

**கோலூன்றிப் பாய்தல்**

பாலசுப்பிரமணியம் லவன் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), நவரத்தினசாமி கீர்த்தகன் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி)

**தட்டெறிதல்**

சின்னராசா டினோசன் (இணுவில் இந்துக் கல்லூரி), பிரபாகரன் பிரசாத் (இணுவில் மத்திய கல்லூரி), புஸ்பராசா அரசகுலசிங்கம் (மானிப்பாய் இந்துக் கல்லூரி)

**ஈட்டியெறிதல்**

சின்னராசா டினோசன் (இணுவில் இந்துக் கல்லூரி), ஈ.கஜமுகன் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), வேலாயுதம் கிரிசாந்தன் (இணுவில் மத்திய கல்லூரி)

**4 x100**

இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரி

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

**4x400 மீற்றர்**

இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

மானிப்பாய் இந்துக் கல்லூரி

**21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-**

**100 மீற்றர்**

உதயகுமார் அகிலன் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), மோகன் மோகன்ராஜ் ( இணுவில் மத்திய கல்லூரி), இன்பராசா ஜீவராஜ் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி)

**200 மீற்றர்**

மோகன் மோகன்ராஜ் (இணுவில் மத்திய கல்லூரி), விக்ரர் சிறில்போல் நியூமன் (இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி)

**400 மீற்றர்**

லோகேஸ்வரன் சிம்சன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), விக்ரர் சிறில் போல் நியூமன் (இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி), செல்வராசா மயூரன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

**800 மீற்றர்**

ரவிச்சந்திரன் சந்திரகரன் (இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி), செல்வராசா அகில்ராஜ் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), யோகேஸ்வரன் ஜான்சன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி)

**1500 மீற்றர்**

ரவிச்சந்திரன் சந்திரகரன் (இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி), யோகேஸ்வரன் நியான்சன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), செல்வராசா அகில்ராஜ் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி).

**5000 மீற்றர்**

ரவிச்சந்திரன் சந்திரகரன் (இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி), செல்வராசா அகில்ராஜ் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), அன்ரன் யூதா குறுட்ஸ் சுஜித் (இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி)

**110 மீற்றர் தடைதாண்டல்**

ரவிச்சந்திரன் நிரோஜன் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), லோகேஸ்வரன் சிம்சன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), அல்போன்ஸ் சபிதாஸ் (இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி)

**400 மீற்றர் தடைதாண்டல்**

சிவநாயகம் நந்தலவன் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), அன்ரன் யூதா குறுட்ஸ் சுஜித் (இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி), இருதயநாதர் ஜெனெக்சன் (இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி)

**உயரம் பாய்தல்**

முருகதாஸ் கிருஷ்ணா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), ஜெயந்தகுமார் கலிந்தன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), வாகீசன் பாக்கியநாதன் (இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி)

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக சதுரங்கப் போட்டி

# மீண்டும் ஆனந்த் சம்பியன்




உலக சதுரங்க சம்பியன் பட்டத்தை ஐந்தாவது முறையாகக் கைப்பற்றி அசத்தினார் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த். நேற்று நடந்த பரபரப்பான 'டை- பிரேக்கரில்' இஸ்ரேலின் ஜெல்பாண்டை வீழ்த்தி, மீண்டும் மகுடம் சூடினார்.

ரஷ்யாவின் மொஸ்கோவில் உலக சதுரங்க சம்பியன் தொடர் நடந்தது. இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த், (வயது -42), இஸ்ரேலின் போரிஸ் ஜெல்பாண்ட் (வயது -43), மோதினர். மொத்தம் 12 சுற்றுகள் கொண்ட இந்தப் போட்டியின், 7ஆவது மற்றும் 8ஆவது சுற்றில் இருவரும் தலா ஒரு வெற்றி பெற்றனர். மற்றைய 10 சுற்றுகளும் சமனிலையில் முடிந்தன.

12 சுற்றுக்களின் முடிவில் இரு வீரர்களும் தலா 6 புள்ளிகள் பெற்றிருந்தனர். இதையடுத்து வெற்றியாளர் யார் என்பதை முடிவு செய்ய, போட்டி 'டை- பிரேக்கருக்கு' சென்றது. 'ரேபட்' முறையில் நான்கு போட்டிகள் நடந்தது. இருவருக்கும் தலா 25 நிமிடங்கள் வழங்கப்பட்டன.

முதல் போட்டியில் கறுப்பு காய்களுடன் ஆனந்த் விளையாடினார். இப்போட்டி 32ஆவது நகர்த்தலின் போது சமனிலையானது.

பின் இரண்டாவது போட்டியில் வெள்ளைக் காய்களுடன் போட்டியை தொடக்கிய ஆனந்த், அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதையடுத்து 77 ஆவது நகர்த்தலின் போது, ஜெல்பாண்ட் தனது தோல்வியை ஒப்புக்கொள்ள, ஆனந்த் 1.5-0.5 என்ற கணக்கில் முன்னிலை பெற்றார்.

மூன்றாவது போட்டியில், ஜெல்பாண்ட் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இருப்பினும், குறிப்பிட்ட நேரத்துக்குள் போட்டி முடியாத நிலையில், 41ஆவது நகர்த்தலில் போட்டி மீண்டும் சமனானது. ஆனந்த் தொடர்ந்து முன்னிலையில் (2.0-1.0) இருந்தார்.

கடைசியாக நடைபெற்ற நான்காவது போட்டியை ஆனந்த் சமன் செய்தாலே போதும் என்ற நிலையில், வெள்ளைக் காய்களுடன் ஆனந்த் களமிறங்கினார். இப்போட்டியும் 56 வது நகர்த்தலுக்குப் பின், சமனாக ஆக, 2.5 புள்ளிகள் பெற்ற ஆனந்த், மீண்டும் உலக சம்பியன் பட்டத்தை வென்றார். இவர் ரூ. 8.5 கோடி பரிசாக தட்டிச் சென்றார். இரண்டாவது இடம் பெற்ற ஜெல்பாண்ட் ரூ. 5.7 கோடி பரிசு பெற்றார். சதுரங்க அரங்கில் மீண்டும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிய ஆனந்த் ஐந்தாவது முறையாக (2000, 07, 08, 10, 12) பட்டம் வென்று சாதனை படைத்தார்.(ங)




## காணாமல் போகமாட்டார்

# சுனில் நரேன்

மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த சுனில் நரைன் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ் போல் திறமைகளை இழப்பதற்கு வாய்ப்புக்களில்லை என்று ட்ரினாட் அன்ட் ரொபாக்கோ அணியின் பயிற்றுவிப்பாளர் கெல்வின் வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார். எனினும் சுனில் நரைன் தொடர்ந்தும் நீடிப்பதற்கு அதிக வகையான பந்துவீச்சுக்களை தனது பந்துவீச்சில் சேர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சுனில் நரைன் தனது அறிமுகத்தை ட்ரினாட் அன்ட் ரொபாங்கோ அணி சார்பாக 2009 ஆம் ஆண்டு மேற்கொண்ட போது பயிற்றுவிப்பாளராக இருந்த வில்லியம்ஸ், சுனில் நரைன் தொடர்ந்தும் கடுமையாக உழைக்க வேண்டும் எனவும், அப்போதே துடுப்பாட்ட வீரர்கள் அவரது பந்துவீச்சைக் கணித்து ஆடுவதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

சர்வதேசப் போட்டிகளில் துடுப்பாட்ட வீரர்கள் ஒரு பந்துவீச்சாளரைக் கணித்து ஆட ஆரம்பிக்கும் போது அவருக்கெதிராக ஓட்டங்களைப் பெறுவது இலகுவாக அமைகிறது எனத் தெரிவித்ததோடு, இலங்கையின் அஜந்த மெண்டிஸிற்கு நடந்தது அதற்கு உதாரணமானது எனத் தெரிவித்தார்.

இலங்கையின் மாயச் சுழற்பந்து வீச்சாளராக அறிமுகப்படுத்தப்பட்ட அஜந்த மெண்டிஸ், ஆசியக்கிண்ணத் தொடரின் இறுதி ஆட்டத்தில் 2008 ஆம் ஆண்டு இந்திய அணிக்கெதிராக 13 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார். அதன் பின்னர் இந்திய அணிக்கெதிராக இடம்பெற்ற 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் 26 இலக்குகளைக் கைப்பற்றி பெரியளவு எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியிருந்தார். எனினும் அதன் பின்னர் அந்த எதிர்பார்ப்புக்களை மெண்டிஸ் நிறைவேற்றியிருக்கவில்லை. தற்போது அவர் இலங்கை அணியின் நிரந்தர உறுப்பனராகக் கூட இல்லாது காணப்படுகிறார்.

கிட்டத்தட்ட அஜந்த மெண்டிஸைப் போன்று மாயச் சுழற்பந்து வீச்சாளராக அறியப்படும் சுனில் நரைன் கடந்தாண்டு இடம்பெற்ற சம்பயன்ஸ் லீக் தொடரில் சர்வதேசக் கவனத்தை ஈர்த்திருந்தார். அதன் பின்னர் இந்த ஆண்டு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்ட சுனில் நரைன் 15 ஆட்டங்களில் 24 இலக்குகளை பந்து பரிமாற்றத்துக்கு 5.47 என்ற சராசரி ஓட்டங்களை விட்டுக்கொடுத்துக் கைப்பற்றி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் வெற்றிக்கு உறுதுணையாக அமைந்திருந்தார்.

சுனில் நரைன் சிறப்பாகச் செயற்படுவது மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்த அவர், அவர் கடுமையாக உழைக்கும் பழக்கத்தைக் கொண்டவர் எனவும், அஜந்த மெண்டிஸ் போல் காணமற் போவதற்கு வாய்ப்புக்கள் இல்லை எனத் தெரிவித்த அவர், சுனில் நரைன் டெஸ்ட் ஆட்டங்களிலும் சிறப்பாகப் பந்துவீசுவார் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (5)

## பிரெஞ்ச் பகிரங்க ரென்னிஸ்

# சாதித்தார் ஷரபோவா





பிரெஞ்ச் பகிரங்க ரென்னிஸ் முதல் சுற்றில், ரஷ்யாவின் மரியா ஷரபோவா வெற்றி பெற்றார்.

பிரான்ஸ் தலைநகர் பரிசில், பிரெஞ்ச் பகிரங்க கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், ரஷ்யாவின் மரியா ஷரபோவா, ருமேனியாவின் அலெக்சாண்டிராவை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய ஷரபோவா 6-0, 6-0 என்ற நேர் செற்றில் சுலபமாக வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவா, ஆஸ்திரேலியாவின் ஆஷ்லிக் பார்டியை 6-1, 6-2 என்ற நேர் செற்றில் வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

பெண்கள் பிரிவில் நடந்த ஏனைய முதல் சுற்றுப் போட்டிகளில், இத்தாலியின் பிரான்சஸ்கா ஷியவோனே, ஜப்பானின் அயுமி மோரிடா, இங்கிலாந்தின் ஹீதர் வாட்சன், ஜெர்மனியின் ஜூலியா, செக் குடியரசின் கிளாரா ஜகோபலோவா, ரஷ்யாவின் அனஸ்டாசியா பவுலிசென்கோவா, எஸ்தோனியாவின் கெயாகனிபி ஆகியோர் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்தனர்.

### நடால் வெற்றி

ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், ஸ்பெயினின் ரபெல் நடால், இத்தாலியின் சிமோனி போலிலியை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய நடால் 6-2, 6-2, 6-1 என்ற நேர் செற்றில் மிகச் சுலபமாக வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

### பெரர் முன்னேற்றம்

மற்றொரு போட்டியில் ஸ்பெயினின் டேவிட் பெரர், ஸ்லோவாக்கியாவின் லூகஸ் லாக்கோவை எதிர்கொண்டார். இதில் அசத்தலாக ஆடிய பெரர் 6-3, 6-4, 6-1 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

**முதல் சுற்றுப் போட்டிகளில், இத்தாலியின் பிரான்சஸ்கா ஷியவோனே, ஜப்பானின் அயுமி மோரிடா, இங்கிலாந்தின் ஹீதர் வாட்சன், ஜெர்மனியின் ஜூலியா, செக் குடியரசின் கிளாரா ஜகோபலோவா, ரஷ்யாவின் அனஸ்டாசியா பவுலிசென்கோவா, எஸ்தோனியாவின் கெயா கனிபி ஆகியோர் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்தனர்.**

மற்றொரு போட்டியில் செர்பியாவின் ஜான்கோ டிப்சரிவிச், அமெரிக்காவின் சாம் குயரே மோதினர். முதல் செற்றைக் குயரே 6-2 எனக் கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட டிப்சரிவிச் அடுத்த மூன்று செற்களையும் 6-4, 7-6, 6-3 என தன்வசப்படுத்தினார். இறுதியில் டிப்சரிவிச் 2-6, 6-4, 7-6, 6-3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

ஆண்கள் பிரிவில் நடந்த ஏனைய முதல் சுற்றுப் போட்டிகளில் ஜெர்மனியில் டாமி ஹாஸ், பிரான்சின் ரிச்சர்டு காஸ்குயட், ஜெரிமி சார்டி, ரஷ்யாவின் டிமிட்ரி டர்சுனோவ், பல்கேரியாவின் கிரிகோர் டிமிட்ரோவ், உக்ரைனின் செர்ஜி ஸ்டாகோவ்ஸ்கி, ஜெர்மனியின் புளோரியன் மேயர் ஆகியோர் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்தனர்.

### சானியா ஜோடி அவுட்

பெண்கள் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் பெத்தானி மட்டக்-சாண்ட்ஸ் ஜோடி, ரஷ்யாவின் நினா பிராட்சிகோவா, ருமேனியாவின் எடினா கலோவிட்ஸ்-ஹால் ஜோடியை சந்தித்தது. இதில் சானியா ஜோடி 3-6, 6-4, 5-7 என்ற செற் கணக்கில் போராடி தோல்வி அடைந்து வெளியேறியது.(ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ.
பிள்ளையார் துணை

# திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான நந்தன வருஷம் வைகாசி மாதம் 18ஆம் நாள் (31.05.2012)
வியாழக்கிழமை முற்பகல் 09.05 மணிமுதல் 11.01 மணிவரை உள்ள கர்க்கடக
லக்கினம் கூடிய சுப முகூர்த்த சுபவேளையில்

திரு.திருமதி இரத்தினம் தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன் திருவளர் செல்வன்

திரு.திருமதி அழகேந்திரம் தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரி திருவளர் செல்வி



**பிரசன்னா (சன்னா)**
அவர்களுக்கும்

**துஷ்யந்தினி (துஷி)**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு
"A.V.Road, நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள்
(பேச்சியம்மன்) ஆலய அட்ஷய சுரபி மண்டபத்தில்"
திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

சன் வியூ
திரு.திருமதி இரத்தினம்
குடும்பத்தினர்
கச்சாய் வீதி, கொடிகாமம்.

திரு.திருமதி அழகேந்திரம் குடும்பத்தினர்
இல. 52, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு)

(18649) (6,9,10) தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

# மரண அறிவித்தல்



## முருகையா மருதாய்

வவுனியா, கோவில் புதுக்குளத்தைச் சேர்ந்த முருகையா மருதாய் நேற்று (30.05.2012) புதன்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் ஆறுமுகம் முருகையாவின் பாசமிகு மனைவியும், தேவிகா (பிரதி அதிபர், இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா), கிருஷ்ணவேணி (ஆசிரியை, பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலயம், வவுனியா), Dr.மகேந்திரன் (பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வவுனியா), சிவஞானம் (சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்), இராமமூர்த்தி (பணிப்பாளர் தேசிய திட்டமிடல் திணைக்களம், திறைசேரி, கொழும்பு), பாலராஜ் (பொறியியலாளர், Bah-rain), Dr. யோகராணி (ஆஸ்திரேலியா), விஜயகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், உமாதேவன் (New Sunrice அரிசி ஆலை கோவில் குளம்), சூசை தாசன் (விரிவுரையாளர் வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி), ஞானேஸ்வரி, சுசிலாதேவி (ஆசிரியர் பூந்தோட்டம் மகா வித்தியாலயம்) கலைச்செல்வி (ஆசிரியர் சென். ஆன்ஸ் பெண்கள் பாடசாலை வத்தளை, கொழும்பு), ஜஸ்மின் (Bahr-ain), லங்காதீபன் (ஆஸ்திரேலியா), பிரமிலா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.06.2012) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வெளிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Dr. மு. [illegible]

(18863)(34.14) (C/225)

**கால்களை பராமரியுங்கள்**
லாவா வைத்தியசாலை
Tel :021-2224333
கிரமமான சோதனை இன்மையால் நாட்பட்ட நோய்களின் விளைவாக கால்களை இழக்கவேண்டி வரலாம்!
கால்களின் நரம்புப்பாதிப்பினை அறிந்து கொள்ள கணினி மயப்படுத்தப்பட்ட பரிசோதனையும் வைத்திய ஆலோசனையும்.
Foot Care Centre
**Lava Hospitals**
LH
No 75,temple road.Jaffna

**யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!**
**Diploma in Mobile Phone Repairing**
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)
100% Mobile Phone
*(With Practical Electronic)*
சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!
வகுப்பு ஆரம்பம் - வரும் ஞாயிறு காலை 11 மணி
உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!
விபரங்களுக்கு :- **UNI - ICT CAMPUS**
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

**தேவை**
வீட்டு சமையல் உதவியாளர் தேவை.
தொடர்பு:- 0776178521

**பொருளியல்**
Personal & Group class
A/L, CBF, Degree & CIMA
Tamil & English medium
தேசியப் பாடசாலை ஆசிரியர்
0778780814

# கண்ணீர் அஞ்சலி



வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர்
மரியதாசன் ஜெகூ அவர்களின் அன்புத் தாய்
திருமதி மேரி அஞ்சலா மரியதாசன்
அவர்களின் மறைவையிட்டு மிகுந்த துயரடைவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாந்தை கிழக்கு,
பிரதேச சபை,
பாண்டியன் குளம்

தவிசாளர், செயலாளர்,
உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள்,
ஊழியர்கள்.

(18810)(34)



# அருள்மிகு திரியாய் அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் திருக்குளிர்த்தி 2012

அம்பாள் அடியார்களே! பச்சிலைப்பள்ளிப் பகுதி முகாவில், இயக்கச்சி அருள்மிகு பர்வபத்தினி திரியாய் அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் திருக்குளிர்த்தி நாளை வைகாசி மாதம் 19ஆம் நாள் (01.06.2012) வெள்ளிக்கிழமை அன்று பகல் இரவு நிக்ச்சிகள் வழமைபோல சிறப்பாக இடம்பெறும். அன்றையதினம் அடியார்களின் நலன்கருதி பாதுகாப்பு பளைப் பகுதி பொலிஸ் பிரிவினால் வழங்கப்படுவதுடன், போக்குவரத்து வடமராட்சிக் கிழக்கு தனியார் பேரூந்து சபைச் சங்கத்தினால் விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பு: பக்த அடியார்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!
ஆலயத்தில் பெருந்திரளான அடியார்கள் கூடுவதால் ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.

ஆலய பரிபாலனசபை.

(C/354)(34.14)

# இன்று முதல்

கல்வியங்காட்டு சந்தி அருகில்



4 வயது தொடக்கம் 14 வயது மாணவருக்கானது
அறிவுத்திறனை மேம்படுத்தும் கணினி கல்வி
*Now Discounts*
*Registration Fee Rs.~~700~~*
*Monthly Course Fee Rs.~~700~~*

# Diploma courses

MS Office, DTP, Web Design,Hardware with Networking, Accounting, Autocad-2D &3D, Multimedia

**Microsoft Certified** **ICTA Scholarship** **Network Software Engineering**



மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளுவதற்கான உத்தரவாதம்.

**BIT Degree Plus(Engineering-USA+BCS)** விரும்பின் கட்டணம் இன்றியும் கற்கலாம்
வீட்டில் இருந்தவாறே பூர்த்தி செய்யக்கூடிய கற்கை நெறி.
MCAI CAMPUS மூலமாக BIT Registration ,Exam பதிவோருக்கு மேலதிக கட்டணம் இன்றி BCS, Computer Engineer-USA தகைமைகள்

**CIMA UK Free** Passing Advice, Degree holders Exemption Processing Convenience time Class, Bank Loan Arrangements

Qualified Lectures panel, Passing Guarantee, 12 Years Experience
மேலதிக விபரங்களுக்கு தயக்கம் இன்றி MCAI CAMPUS உடன் தொடர்பு கொள்ளுங்கள்

**MCAI CAMPUS**
SMS Your name & Course to 775520940 & Get Schol.
243,Adiyapatham Road,Kalviyankadu
Supported by Jaffna Computer Society (கல்வியங்காட்டு சந்தி அருகில்,Bus Route 750/751)
www.mcaicampus.info facebook: mcaicampus
MCAI Campus

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி விநாயகமூர்த்தி



(இ.போ.ச. முன்னாள் நடத்துநர், கோண்டாவில்)

நீர்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி விநாயகமூர்த்தி (29.05.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சோமசுந்தரம் காலஞ்சென்ற ஜெகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கருணாகரன் மற்றும் சிறிதரன் (சுவிஸ்), காலஞ்சென்ற இந்திரன் மற்றும் கெங்காதரன் (லண்டன்), றஞ்சினி (வவா), பிரபாகரன் (மல்லாகம்), சிவாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணவேணி, கிரிஜா, உதயராணி, இராசகுலசிங்கம், சாந்தகுமாரி ஆகியோரின் மாமனும் தனஞ்செயன், பூவிழி, மகிழன், மதுமிதா, ரிஷிகேசவன், தளிர், பூவேந்தன், தாரங்கி, சாமந்தி, தேன்நிலவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2012) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் மத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீபோழுங்கை, மல்லாகம். (18777) (2,6,9) தகவல்:குடும்பத்தினர்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
16★ 03★ 1996

ஆண்டவன் அடியில்
31★ 05★ 2009

## தேவராசா கீர்த்திபன்

(யாழ்.மத்திய கல்லூரி மாணவன் 8D)

திதி:- அட்டமி

நாராகிப் போன இதயத்தில்
பூப்போல உன் நினைவுகள் - இருப்பினும்
முட்கள் தீண்டுகின்றன
உறைந்த குருதியும்
உருவாகிய வடுக்களும்
உன் நினைவை பறைசாற்றும்
என்றும் எம் மனங்களில்
உயிரோட்டமாய் உன் நினைவுகள்

செட்டி சீமா வீதி,
பத்தமேனி, அச்சுவேலி. (18507) (2-6-9) - குடும்பத்தினர்.

# எங்கள் அன்புத்தெய்வத்தின் ஓராண்டு நினைவலைகள்



| அன்னை மடியில் | ஆண்டவன் காலடியில் |
|---|---|
| 20 | 12 |
| ★ | ★ |
| 07 | 06 |
| ★ | ★ |
| 1938 | 2011 |

திதி : ஏகாதசி
31.05.2012

## திருநாவுக்கரசு பார்வதிப்பிள்ளை

அன்பின் உருவமாகி - எம்
அகமெல்லாம் கலந்தாயம்மா !
பண்போடு நாம் வாழ பாசமுடன் வளர்த்தாயம்மா
ஓராண்டு கடந்த பின்னும் உன் துயரம் ஆறவில்லை
ஆசை மொழி பேசி எமையெல்லாம்
ஆரத்தழுவி நின்றாயே! ஆவரங்கால் மண்தந்த ஆருயிர் அம்மாவே
தூக்கம் துறந்த எம் கண்களில் ஏக்கம் மட்டும் மிச்சமம்மா
பார்வதிப்பிள்ளை நாமம் கொண்டு பார் போற்ற வாழ்ந்தவளே
எங்கம்மா சென்றீர்கள் ? உம் புத்திரக் குஞ்சுகளை தவிக்கவிட்டு
பாசக்குழந்தைகளின் அவல வேதனையை
ஒரு கணம் ஓடி வந்து பாரம்மா எங்கள் ஆருயிர் அம்மாவே!
உம் ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை வேண்டுகின்றோம்

374, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் (ƒ/233)(6-8-9)

உங்கள் நினைவில் வாழும்
பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## சடலத்தை பொறுப்பேற்க அறிவுறுத்து

வடமராட்சி, மே 31

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ள வயோதிபரின் சடலத்தை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் உறவினர்கள் பொறுப்பேற்குமாறு வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

கடந்த 25 ஆம் திகதி இந்த வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த போது மரணமான வரணி இயற்றாலையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நல்லையா (80 வயது) வின் சடலம் உறவினர்களை எதிர்பார்த்து சவச் சாலையில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## சடலம் மனைவியிடம்

வடமராட்சி, மே 31

புலோலி வடக்கு, அறுபது பாகைக் கிணற்றடியில் அமைக்கப்பட்டுவரும் தண்ணீர்த் தாங்கியில் இருந்து விழுந்து மரணமான அந்தப் பகுதியைச் சேர்ந்த தொழிலாளியின் சடலம் நேற்று யாழ்.போதனா வைத்திய சாலையில் வைத்து அவரது மனைவியிடம் ஒப்படைக் கப்பட்டது.

பாணாந்துறையைச் சேர்ந்த பி.டி.கஸ். டி.பெர்னாண்டோவின் பிரேத பரிசோதனை யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து சட்ட வைத்திய அதிகாரி மயூரன் மேற்கொண்டார்.

இவரது மரணம் குறித்து மரண விசாரணை நடத்திய பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலாவின்சன் தயான் சடலத்தை மனைவியிடம் ஒப்படைக்கப் பணித்தார். (ம-8)

## இருவேறு விபத்துகளில் மூவர் காயமடைந்தனர்

தென்மராட்சி, மே 31

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த இருவரும் தூக்கி வீசப்பட்ட காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு மாமுனையில் இடம்பெற்றது.

மிருசுவில் வடக்கு குருக்கள் மாடியைச் சேர்ந்த ஆறுமுகம் விஜயகுமார் (வயது 21), தர்மபாலன் தனராஜ் (வயது 29) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை திங்கட்கிழமை கொடிகாமம் நகர் பகுதியில் டிப்பர் வாகனம் மற்றும் சைக்கிள் விபத்தில் இளைஞர் காய மடைந்தார். சைக்கிள் வாகனத்தினுள் சிக்கி பலத்த சேதமடைந்தது.

காயமடைந்த கொடிகாமம் நாவலடியைச் சேர்ந்த கந்தசாமி தர்மசீலன் (வயது 25) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

## நடனப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 31

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 67 ஆவது ஆண்டுநிறைவுவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு சங்கிலியன் மன்றத் திறந்த வெளியரங்கில் நடனப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து வார இறுதி நாள்களில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள், மரதன் ஓட்டம் என்பனவும் இடம் பெறும். போட்டிகளில் கந்து கொள்ள விரும்பும் போட்டியாளர்கள் மன்றத்தில் தொடர்பு கொள்ளுமாறு அதன் ஆலோசகர் தெரிவித்துள்ளார். (ம-7)

விசேட சலுகை...! இன்றே இணையுங்கள் APTECH COMPUTER EDUCATION INDIA
பிரிவு- 1 ஆரம்பம் 02.06.2012
VIDYA
Operating System
CPU Architecture
MS Office
Internet & email
Create Web Pages
கணனிக்கற்கை நெறியில் இணைபவர்களுக்கு ஆங்கில அல்லது சிங்கள வகுப்பு இலவசம்
APTECH Computer Eduation, INDIA - Jaffna Branch
Mind Vishion College of International Studies ( Pvt.) Ltd.
(Reg No: PV 85546)
No.04, Clock Tower Lane, Navalar Road, Jaffna 0212219456

# கண்ணீர் அஞ்சலி



வடமாகாண உள்ளூராட்சி
ஆணையாளர் மரியதாஸன் ஜெகூ
அவர்களின் அன்புத் தாய்
திருமதி
மரியதாஸன் மேரி அஞ்சலா
அவர்களின் பிரிவுச் செய்திகேட்டு
துயர் அடைவதோடு, அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.
சாவகச்சேரி நகராட்சி மன்ற
ஊழியர் நலன்புரிசங்கம்.
(சி/9308) (2-6-9)

## கரைதுறைப்பற்று பிரதேசசபை - முல்லைத்தீவு
## வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய உற்சவகால வியாபார உரிமம் - 2012

1. மேற்படி ஆலயத்தில் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் தங்களுக்கான உற்சவகால வியாபாரத்திற்கான உரிமத்தினை 31.05.2012 தொடக்கம் 01.06.2012 வரை கடமை நேரத்தில் முள்ளியவளை உப அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். 02.06.2012 தொடக்கம் 04.06.2012 வரை கண்ணகை அம்மன் ஆலய வளாகத்தினுள் அமைந்துள்ள கரைதுறைப்பற்று பிரதேசசபையின் உற்சவகால பணிமனையில் பெற்றுக் கொள்ளமுடியும்.

2. உணவுச்சாலை, தேநீர்ச்சாலை, குளிர்களி, குளிர்பான விற்பனை நிலையங்களிற்கான உரிமம் 04.06.2012 பி.ப 1.00 மணி வரையும் வழங்கப்படும். அதன்பின்னர் உரிமம் வழங்கப்படமாட்டாது. இந்த உரிமத்தினை பெற்றுக் கொண்டவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று 04.06.2012 பிற்பகல் 3.00 மணிக்கு ஆலய வளாகத்திற்குள் அமைந்துள்ள கரைதுறைப்பற்று பிரதேசசபையின் உற்சவகால பணிமனையில் நடைபெறும்.

3. வேறு பிரதேசத்தில் தயாரிக்கப்பட்ட உணவு, குளிர்களி, குளிர்பானவகைகளைக் கொண்டுவரும் வியாபாரிகள் தத்தமது பிரதேசத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் பெற்றுக் கொண்ட 2012ம் ஆண்டிற்கான வியாபார உரிமத்தை சமர்ப்பித்தால் மட்டுமே உற்சவ கால உரிமம் வழங்கப்படும்.

உணவகங்கள் மற்றும் தேநீர்ச்சாலை, குளிர்களி, குளிர்பான விற்பனை நிலையங்கள் நடத்துபவர்களுக்கான பொது சுகாதார பரிசோதகரது அறிவுறுத்தல்கள்

1. தற் சுகாதாரத்தை பேணவேண்டும்.

2 புகைத்தல், வெற்றிலை மெல்லுதல் மற்றும் உணவுப் பொருள் வண்ணத்தாள், அச்சடிக்கப்பட்ட தாள்களில் வைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

3. உணவுப்பொருள்கள் பரிமாறும் போது இடுக்கி பயன் படுத்துதல் வேண்டும்.

4. உணவுப்பொருள்கள் கண்ணாடிப் பெட்டியில் வைத்திருத்தல் வேண்டும்


5.பொலித்தீன் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட விதிகளையும் நிபந்தனைகளையும் மீறுபவர்கள் மீது தண்டம் அறவிடப்படுவதுடன் சட்டநடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

31.05.2012
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு. (C\235) (6,9,10)

க.மோகனராஜகுமார்
செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.

# நெஞ்சம் மறவாத 20 ஆவது ஆண்டு நினைவலைகள்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 19 | 11 |
| ★ | ★ |
| 12 | 06 |
| ★ | ★ |
| 1942 | 1992 |

திதி : ஏகாதசி 31.05.2012

அமரர் **மாணிக்கம் தங்கவடிவேல்**

(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

அன்பின் சுடரே அழியாத பெருநிதியே
பண்பெனும் மகுடம் சூடிய தங்கத்தாமரை
தலைவனே - அப்பா
நீங்கள் எமைவிட்டுப் பிரிந்து ஆனதுவோ
ஆண்டுகள் இருபது

என்றும் உங்கள் நினைவில்
தங்கத்தாமரை, அல்வாய் (18651)(6-9-8) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணவில்லை

மயிலியதனையைச் சேர்ந்த க.நிர்மலானந்தனுடைய 20,000/= பெறுமதியான சிவப்பு நிற காளை மாடு 28.05.2012 ஆம் திகதி அதிகாலை 4.00 மணிக்கு கட்டிய இடத்தில் இருந்து களவாடப்பட்டுள்ளது. இதைப் பிடித்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு : 021 2055617

(18654) (6,9,10)

## கணனி ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்குமான

## ஓர் அரிய சந்தர்ப்பம் Diploma in Computer Courses

Duration 3months,4months

Batch I 01-06-2012
Batch II 02-06-2012
Batch III03-06-2012
Batch IV 06-06-2012
(Time:-9am or 3pm)

Ms Office 2007, DTP, Hardware, Graphic Designing, Wep page Designing, Multi Media, Computer Science, Video Editing, Computerized Accounting, AutoCAD, Net Working, Inter Net & e - mail.

புதன், வெள்ளி மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இன்றே எம்முடன் இணைந்துகொள்ளுங்கள்.

**Computer Express**
No 15, Sirambiyadi lane (off stanly Road)
Jaffna. T.P - 021 222 8250, 077 490 7444

Diploma in Accounting Package
Acc Pac,Quick Book,MYOB,Tally
(Sat+Sun 11.30am)

(18798)

## களஞ்சியப் பொறுப்பாளர் பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கீழ்க்காணும் தகுதியுடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி.
2. கணினி அறிவுடையவராகவும்
3. 50 வயதுக்கு மேற்பட்டவர் (ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
4. 4 km தூரத்திலுள்ளவராக இருத்தல்
5. நல்லொழுக்கமுடையவராக இருத்தல்
6. தொழில் அனுபவமுடையவராக இருத்தல்
7. விண்ணப்ப முடிவு திகதி: 10.06.2012 ஆகும்.

ஸ்ரீ பரமானந்த சிறுவர் முதியோர்
இல்ல ஆச்சிரமம்
தர்மகர்த்தா சபை, கரவெட்டி.

(C\238) (6,9,10)

## வீட்டுடன் கூடிய காணி விற்பனை

அல்வாய் வடக்கு, நாவலடிச் சந்திக்கு 1 கிலோ மீற்றர் அருகில் உள்ள 10 பரப்பு வீட்டுடன் கூடிய காணி உடன் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:
0777191203 / 0775043075

(த/240) (6,9,10)

## கார் விற்பனைக்கு

மிக்ஸி - மிசி லான்சர் கார் விற்பனைக்கு.
தொடரிலக்கம்:- 7963 - 12 ஸ்ரீ
சில்வர் கலருடையது.
தொடர்பு:
0750489784

(18794)(2-6-9)

## கண்ணீர் அஞ்சலி



வடமாகாண உள்ளூராட்சி
ஆணையாளர் மரியதாஸன் ஜெசு
அவர்களின் அன்புத் தாய்
திருமதி
மேரி அஞ்சலா மரியதாஸன்
அவர்களின் மறைவையொட்டி எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*சாந்தி! சாந்தி! சாந்தி!*

தவிசாளரும், உறுப்பினர்களும், செயலாளரும்
உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.

நகரசபை,
பருத்தித்துறை. (சி/234) (2-6-9)

## புதுமனை புகுவிழா, புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

நாளை (01.06.2012) வெள்ளிக்கிழமை
நண்பகல் 12.00 மணிக்கு உள்ள சுபவேளையில்

**விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ்**
புதுக்கடை திறப்பு விழாவும்





**கௌரி ரங்கம்**
புதுமனை புகுவிழாவும்

நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தந்து
மகிழ்ச்சியுடன் அழைக்கின்றோம்.

51/1, கேசாவில் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

திரு. K. பரமநாதன் விக்கினராசா (ராசன்)
திருமதி ஜெ.விக்கினராசா
தொ.பே: 021 490 7861

(18803) (6,9,10)

## நயினாதீவுக்கு மின் பிறப்பாக்கி

யாழ்ப்பாணம், மே 31

நயினாதீவுக்கு 24 மணிநேர மின்சார இணைப்பு வழங்குவதற்கான மின்பிறப்பாக்கி சுன்னாகத்தில் இருந்து கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் விசேட ஏற்பாட்டின் கீழ் இயந்திரம் கொண்டு செல்லப்படவுள்ளது என்று கூறப்பட்டது. எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் 24 மணி நேர மின் புதிய ஜெனி ஜெனரேட்டர் மூலம் வழங்கப்படவுள்ளது என்று கூறுப்பட்டது. (ம-41)

## 'திவிநெகும' திட்டத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம், மே 31

'திவிநெகும' திட்டத்துக்கு விண்ணப்பிக்க தவறிய குடிசைக் கைத்தொழில் முயற்சியாளர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி அறிவித்துள்ளார்.

'திவிநெகும' வாழ்வு எழுச்சி நிகழ்ச்சித் திட்ட குடிசைக் கைத்தொழில் கண்காட்சி கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்டு அதில் தொழில் முயற்சியை விருத்தி செய்யும் குடிசைக் கைத்தொழில் முயற்சியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவர்களுக்கு பொருத்தமான தொழில் நுட்பப் பயிற்சியும் உதவிகளும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதில் விண்ணப்பிக்கத் தவறிய முயற்சியாளர்கள் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்துடன் தொடர்புகொண்டு தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (16)

## சிகிச்சை பயனின்றி யுவதி மரணம்

எரிகாயங்களுக்குள்ளான நிலையில் கடந்த சனிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த யுவதி ஒருவர் நேற்று மரணமானார்.

குருநகரிலுள்ள வீடொன்றில் கடந்த சனிக்கிழமை தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டதால் எரிகாயங்களுக்குள்ளான சின்னத்தம்பி மரியகொறற்றி (வயது-22) என்ற யுவதியே இவ்வாறு சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்துள்ளார். (4-16)

## முறைப்பாடு

கொக்குவில், பொற்பதி வீதியிலுள்ள அறிவாலயம் என்ற நிலையத்தின் தபால் பெட்டி, விஷமிகளால் அடித்து நொருக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-03)

## மரண அறிவித்தல்

### இராமசாமி சோமசுந்தரம்

(ஓய்வுபெற்ற கிராம சேவையாளரும், சமாதான நீதவானும், யாதவன் சேவிஸ் ரேசன் உரிமையாளரும்)



கொற்றாவத்தை, கரணவாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் அல்வாய் தெற்கு அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி சோமசுந்தரம் நேற்று (30.05.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி-கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும், இராஜேஸ்வரியின் (ஆசிரியை, வடமாராட்சி மத்திய மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், யாதவன் (கட்டட ஒப்பந்தக் காரர் Hari Engineers and contractors), நீரஜா, லக்சியா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்சினி, விநோதன் (ஆசிரியர், திருகோணமலை விவேகானந்தா கல்லூரி), சதானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், வசந்தாதேவி, மல்லிகாதேவி, காலஞ்சென்றவர்களான ஆனந்தராசா, தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராசேந்திரம், அமரர் தட்சணாமூர்த்தி, பாலசிங்கம், பொன்னம்பலம், தர்மகுலசிங்கம், துரைராஜ சிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மனோஜா, ஜெசுதாகர் (கனடா), குந்தவி, அருள்மாறன் (கனடா), ரகுமாறன் (கனடா), மணிமாறன், நெடுமாறன் ஆகியோரின் அன்பு மாமனும், நிவிந்தன், ஜனந்தன், வினிஷா, கனிஷா (சுவிஸ்), ஹரிஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 9.30 மணிக்கு ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதுத்தோட்டம்,
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

தகவல்:
யாதவன் (மகன்)

(C\237) (6,9,10)

## தேவை

எமது நிறுவனத்தில் அலுவலக வேலையில் அனுபவம் உள்ள லீடர் தேவை. சிங்களம், ஆங்கிலம் தெரிந்த 18 - 35 வயதுக்கு இடைப்பட்டவர்கள் தகைமைச் சான்றிதழுடன் அலுவலக நேரத்தில் நேரில் வரவும். எமது மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய அலுவலகங்களில் பணிபுரிய ஆர்வம் உள்ளவர்களும் வரவும்.

சுஜித் என்ரபிறைஸ்,
டச்சு வீதி, சாவகச்சேரி.
T.P. 021 2270586, 0777871231

(சி/9307) (2-6-9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
25.05.1925



மறைவு
01.05.2012

### அமரர் வேலுப்பிள்ளை கந்தையா

(ஓய்வுபெற்ற அதிபர், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி)

கடந்த (01.05.2012) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் வேலுப்பிள்ளை கந்தையா அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வும், மதிய போசன நிகழ்வும் இன்று (31.05.2012) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடை பெறும்.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

[illegible] செல்லத்துரை
[illegible] வைத்தியசாலை,
உடையார் வளவு, சுன்னாகம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(18799) (45.6.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

**நாகமணி தணிகாசலம்**

(கிரீன் கிங்ஸ் சனசமூக நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினர்)

இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாகிகள், அங்கத்தவர்கள்.

மந்திரியூஸ் வீதி, யாழ்ப்பாணம் — கிரீன் கிங்ஸ் சனசமூக நிலையம், கிரீன் கிங்ஸ் விளையாட்டுக்கழகம்.

(18806) (2-6-9)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் லயன் சிமாட்டி

**பஞ்சலிங்கம் விக்னேஸ்வரி**

அவர்களின் மறைவை முன்னிட்டு அன்னார் எமது லயன் கழகத்துக்கு ஆற்றிய சேவையை நினைவுகூர்ந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது லயன் கழகத்தின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சர்வதேச லயன்கழகம் 306 B1 மாவட்ட செயலாளர்,
லயன் கழகம் கொக்குவில்,
தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் சகல உறுப்பினர்களும்

(சி/241)(6-9-6)

## கண்ணீர் அஞ்சலி



வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மரியதாஸன் ஜெகூ அவர்களின் அன்புத் தாய்

திருமதி

**மேரி அஞ்சலா மரியதாஸன்**

அவர்களின் மறைவையொட்டி மிகுந்த துயரடைவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை. (சி/9309) (2-6-9) தவிசாளர், செயலாளர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

## நயினாதீவு இறங்கு துறைக்கு மின்சாரம்

நயினாதீவு இறங்குதுறைக்கு பிரத்தியேகமான முறையில் மின்சார ஒளி வழங்கப்படவுள்ளது. பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா இதற்கான அவசர நடவடிக்கை எடுத்துள்ளார். அடுத்த வாரம் முதல் இறங்கு துறையில் மின்குமிழ்கள் ஒளிரத்தக்க வகையில் இலங்கை மின்சார சபை மின் இணைப்பு வழங்க அதற்கான நிதியை மின்சார சபைக்கு தலைவர் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-41)

## கண்ணீர் அஞ்சலி



வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மரியதாஸன் ஜெகூ அவர்களின் அன்புத் தாய்

திருமதி

**மேரி அஞ்சலா மரியதாஸன்**

அவர்களின் மறைவையொட்டி மிகுந்த துயரடைவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர், செயலாளர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்.

வலிகாமம் கிழக்கு, பிரதேசசபை, புத்தூர்.

(சி/246) (2-6-9)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 04 | 31 |
| ★ | ★ |
| 06 | 05 |
| ★ | ★ |
| 1980 | 2008 |

அமரர்

**யோகரட்ணம் கீதன்**

ஊர் போற்ற வாழ்ந்த நண்பா
உமை இழந்து நான்காண்டுகளாயினும்
ஈரவிழிகளாய் செய்வதறியாமல்
உம் நினைவில் நாம் அன்பினால் பெற்ற செல்வப்பேறே பெரும்
செல்வப்பேறு என்பதை எமக்கு வாழ்ந்து காட்டினீர் கருணை
கூர்ந்த உம் திருமுகத்தைக்காண
என்றென்றும் உங்கள் சிந்தனையோடு நாம்
காத்திருக்கின்றோம் நண்பா....!!!

நண்பர்கள் (1999)
பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(சி/244)(6-9-8)

## முன்பள்ளி கல்விக்கான டிப்ளோமா கற்கைநெறி

தென்மராட்சி, மே 31

தென்மராட்சி பிரதேச முன்பள்ளி கல்விக்கான டிப்ளோமா கற்கைநெறி எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

சிறுவர் அபிவிருத்தி பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் அனுமதியுடன் ஆறுதல் நிறுவனத்தால் கற்கை நெறி நடத்தப்படவுள்ளது.

இந்தக் கற்கை நெறியில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 9, 10 ஆகிய திகதிகளில் காலை 9 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு நேரில் வருகை தந்து விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு ஆறுதல் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி சுந்தரம் டிவகலாலா தெரிவித்துள்ளார். (ம-9)

## சண்டிலிப்பாய் ஐயனார் ஆலயத்தில் திருட்டு

சங்கானை, மே 31

சண்டிலிப்பாய் ஐயனார் ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை பகல் நேரம் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.


இந்தத் திருட்டில் 130 வருட பழமை வாய்ந்த மூன்று ஐம்பொன்னிலான 75 கிலோ கிராம் நிறையுள்ள விக்கிரகங்கள், கருங்கல்லினாலான சிலைகள் உட்பட, பித்தளைத் தாம்பாளங்கள், குத்து விளக்குகள், பஞ்சாலாத்திகள் அனைத்தும் திருட்டுப் போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றின் இன்றைய பெறுமதி 20 லட்சத்திற்கும் மேல் என்று ஆலய நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் வைகாசி மாதம் இதே ஆலயத்தில் பிள்ளையார் சிலைகள் இரண்டு திருட்டுப் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருட்டு இடம்பெற்ற அன்று காலை 9 மணிக்குப் பூசை நடைபெற்று ஆலயம் பூட்டப்பட்டது. மாலை 5 மணிக்கு பூசைக்காக ஆலயம் திறக்கப்பட்ட போது திருட்டு இடம்பெற்றிருந்தமை தெரியவந்துள்ளது. இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-29)

# மரண அறிவித்தல்

# நாகமணி தணிகாசலம்



பழைய பூங்கா வீதி, சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும், கனகசபை வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி தணிகாசலம் கடந்த (27.05.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - பவளம் (நாகமணி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) தம்பதியரின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான துரை - இரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட மருமகனும், கமலாவின் அன்புக் கணவரும், சுஜிதா (லண்டன்), தாரணி (உள்ளக பயிற்சி ஆசிரிய மாணவி - கல்வியியற் கல்லூரி யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேந்திரதாஸ் (பொறியியலாளர் - லண்டன்) அன்பு மாமனும், வைஷாலி (லண்டன்), ஷாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு பேரனும், பரிமளகாந்தி, கனகமலர், அமிர்தநாயகம் (பிரான்ஸ்), இராஜநாயகம் (கணக்காளர் - வடமாகாண சபை), தர்மநாயகம் (லண்டன்), யோகராணி (ஆசிரியை, யா/ஸ்கந்தவரோதய கல்லூரி), டெய்சிராணி (ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை), பிரபாகரன் (உரிமையாளர் - நாகமணி ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வேதநாயகம் (இ.போ.ச. யாழ்ப்பாணம்), ரகுநாதன் (உரிமையாளர் - லக்ஸி மரக்காலை), சித்திரா (பிரான்ஸ்), கலாநிதி ஜெயலக்சுமி (விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்), அமுதா (லண்டன்), விமலாம்பிகைபாகன் (தொழிநுட்ப உத்தியோகத்தர்), நாகேந்திரன் (யாழ். பல்கலைக் கழகம்), பாமினி, நாகேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் மற்றும் காலஞ்சென்ற துரைராஜா, காலஞ்சென்ற இராஜேந்திரம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.05.2012) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கனகசபை வீதி,
மானிப்பாய்,
(மானிப்பாய் விளையாட்டரங்கு அருகில்).

(18805) (45.6.9)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், மருமகன், சகோதரர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விற்பனையில்...

## வட்டுக்கோட்டை மாநாடும்..!
## மட்டக்களப்பு மாநாடும்...!!

...1976 ஆம் ஆண்டில் அப்போதைய தமிழ் அரசியல் தலைவர்கள் அனைவரும் கூட்டாக இணைந்து யாழ்.வட்டுக்கோட்டையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேசிய மாநாடு ஒன்றை நடத்தியிருந்தார்கள். இந்த மாநாட்டிலேயே வடக்கு, கிழக்கு வாழ் தமிழர்கள் தங்களது சுயநிர்ணய உரிமையுடனும் சகல அரசியல் அதிகாரங்களுடனும் வாழ வேண்டுமாயின் அதற்கு இறுதித் தீர்வாக தமிழீழம் தான் அமைய வேண்டும் என்ற தீர்மானத்தை மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்து தமிழ் தலைவர்களும் இணைந்து ஒருமித்த தீர்மானமாக அன்று முன்மொழிந்திருந்தார்கள். வட்டுக்கோட்டை மாநாட்டில் முன்மொழியப்பட்ட தனித் தமிழீழம் என்ற தீர்மானம் தமிழ் மக்கள் மத்தியில் அமோக வரவேற்பைப் பெற்றிருந்தது. இதன் பிரதிபலிப்புக்களாகவே 1977 ஆம் ஆண்டில் நடைபெற்ற...

## விமோசனம் கிடைக்குமா...
## ஒரு மாதத்தில்...?

.... அரசாங்கம் நாடாளுமன்றத்தில் உறுதியளித்தபடி ஒருமாத காலத்திற்குள் கைதிகளின் விவகாரத்தில் தனது நல்லெண்ணத்தினை வெளிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அதைவிடுத்து அரசாங்கம் வழமை போல உறுதி மொழிகளை காற்றில் பறக்கவிடும் பட்சத்தில் அரசியல் கட்சிகளினதும் அரசியல் கைதிகளினதும் அறவழிப் போராட்டங்கள் உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் அளவிற்கு வீச்சுப்பெறும் என்பதுவே பலரதும் எதிர்பார்ப்பு ஆகும். அத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் மகிந்த அரசுக்கு அது மேலும் நெருக்கடி நிலையைத் தோற்றுவிக்கும். அதன் விளைவாகவேனும் கைதிகளுக்கு ஒரு நல்ல விமோசனம் கிடைக்க வேண்டும் என்பதுவே ......

மற்றும் வழமையான பல்சுவை அம்சங்களுடன்
இந்தவார இதழ் வெளிவந்துவிட்டது

(சி/231)

# புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான நந்தன வருடம் வைகாசி மாதம் 18 ஆம் நாள் (31.05.2012) வியாழக்கிழமை காலை 7.22 மணி தொடக்கம் 8.52 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மங்கள வாத்தியங்கள் முழங்க சம்பிரதாய பூர்வமாக **முருகேசு.சந்திரகுமார்** (நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம், நாடாளுமன்றப் பிரதிக் குழுக்களின் தலைவர்), **சில்வேஸ்திரி அலன்டின் (உதயன்)** (நாடாளுமன்ற உறுப்பினர் , யாழ்.மாவட்டம்) ஆகியோரால்

# விஷானி நகைமாளிகை
# Vizany Gold House

எனும் புதிய நகை மாளிகை இறைவன் திருவருள் துணை கொண்டு திறக்கவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

தங்கள் நல்வரவை நாடும்:

**பொன்.மதிமுகராஜா விஜயகாந்த் (விஜய்)**
**குடும்பத்தினர்.**

T.P. 021 221 9510,
Fax: 021 221 9511

இல.187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பளிப்புக்களை தவிர்த்துக்கொள்ளவும்.

(சி/232) (2-6-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org